அறிவு நூல் திரட்டு

(முதற் புத்தகம்)

குறிப்புரையுடன்

Approved by the Text Book Committee, Madras.

ARIVUNUL THIRATTU

(a selection of choice educative tamil poetry)

(ANNOTATED)

Part I.

BY

A. KARMEGA KONE,

Lecturer in Tamil, American College Madura; Member Madura Tamil Sangam; Examiner Madura Tamil Sangam and Juffna Oriental Societies and Special Lecturer on "Dravdian Culture" University of Madras-1927.

MADURA:

E. M. GOPALAKRISHNA KONE,

Rights Reserved.] *1928.* *[Price As. 8.*

ஸ்ரீ:

அறிவுநூல் திரட்டு.

(முதற் புத்தகம்.)

குறிப்புரையுடன்.

தொகுத்தோர்:
ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர்.
அமெரிக்கன் காலேஜ்,
மதுரை.

மதுரை புத்தக வியாபாரம்,
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
வெளியிட்டது.

காபிரைட்] 1928. [விலை அணா 8

Printed at
The Excelsior Press,
Madura.

முகவுரை.

"அறிவுநூல் திரட்டு" முதற் புத்தகமாகிய இது, பக்தி நூல், நீதிநூல், இதிகாசம், புராணம், பிரபந்தங்கள், சங்கநூல்கள் முதலியவற்றிலிருந்து எடுத்துத் திரட்டிய இனிய செம்பாகமான பாடல்களைத் தன்னகத்துக் கொண்டு வெளிவந்துளது. இதனைக் கற்கும் மாணவர்கள் தமிழ்மொழி ஞானம், மாந்தர்க்குரிய நீதி, நல்லொழுக்கம் முதலியவற்றுள் சிறந்து விளங்குவார்கள் என்பதனை இதனைக் கண்ணுறும் அறிஞர்களே நன்கறிவாராதலின், இதுபற்றி விரித்துரைப்பது மிகையேயாகும். இப்புத்தகம் பொருள்விளக்கக் குறியீட்டுகளுடன் பதிப்பு முறையும் சிறந்திருக்கிறது. இப்புத்தகம் (High School form classes) உயர்தரகலாசாலை மாணவர்களது செய்யுட்பாடத்துக்குப் பெரிதும் பயன்படுவதாகும். கலாசாலை ஆசிரியர்கள் இந்நூலை நன்கு அபிமானித்து என்னை ஊக்குவார்களென்று நம்புகிறேன்.

அமெரிக்கன் காலேஜ்,
மதுரை.
3—3—27.

இங்ஙனம்,
ஆ. கார்மேகக் கோன்.

உள்ளுறை.

I.	தோத்திரப்பகுதி:—	பக்கம்.
1.	நாமகள் வணக்கம்	1
2.	தமிழ்த் தெய்வம்	3
3.	திருவாசகம்	4
4.	பெரிய திருமொழி	7
5.	தாயுமானவர் பாடல்	9
6.	இராமலிங்கசுவாமிகள் பாடல்	12
II.	நீதிப்பகுதி:—	
1.	நாலடியார்	13
2.	நீதிநெறிவிளக்கம்	15
3.	நன்னெறி	17
4.	திருக்குறள்	20
III.	சரிதைப்பகுதி:—	
1.	நளவெண்பா	23
2.	நைடதம்	35
3.	அரிச்சந்திர புராணம்	41
IV.	இன்சுவைப் பகுதி:—	
1.	இடையனும், தத்துவசாஸ்திரியும் ...	55
2.	குசேலர் வறுமை	61
3.	ஸ்ரீ ராமனது பிதுர்வாக்கிய பரிபாலனம்	65
4.	சூர்ப்பணகை புலம்பல்	67

V. பிரபந்தப் பகுதி:— பக்கம்.

1 மீனாட்சியம்மை குறம் 68
2. நால்வர் நான்மணிமாலை 71
3. திருவள்ளுவமாலை 72
4. சடகோபர் அந்தாதி 73

VI. பல்துறைப் பகுதி:—

1. துயிலெடை 74
2. அரசர் பெருமை 75
3. மெய்ஞ்ஞான முனிகள் இயல்பு ... ,,
4. உலகில் உயர்ந்தோர் இயற்கை ... 76
5. புலவர் வாழ்க்கை 77
6. அரசன் கடன் ... ... ,,
7. பத்தினிப் பெண்டிர் ... . ,,
8. நல்லாசிரியன் 78
9. மாணாக்கர் வகை ... ... ,,
10. மக்கட்பேறு 79
11. பொருண்மொழிக்காஞ்சி ... ... ,,
12. கல்விச் சிறப்பு 80
13. அறவுரை ... ... ,,

VII. தனிப்பாடற் பகுதி:—

1. ஔவையார் பாடல் 81
2. காளமேகப்புலவர் பாடல் 82
3. இராமச்சந்திரக்கவிராயர் பாடல் ... 84

ஸ்ரீ

அறிவு நூல் திரட்டு

முதற் றொகுதி.

கடவுள் வணக்கம்.

வேதமும் வேதம் விளம்புமெய்ப் பொருளும்
அப்பொருள் விதங்களும் பஞ்ச
பூதமும் புலனும் புலன்களின் பயனும்
அப்பயன் பொலிவுற நுகரும்
ஞாதமும் உலகம் படைத்தளித் தழித்து
ஞானமாய் அகிலமு நிறைவுற்(று)
ஆதியும் நடுவும் முடிவுமாய் நின்ற
ஆதியான் அடியிணை பணிவாம்.

வில்லிபுத்தூரார்.

1. தோத்திரப் பகுதி.

1. நாமகள் தோத்திரம்.

அடியில் வரும்பாடல்கள் சகலகலாவல்லிமாலையைச் சேர்ந்த பாடல்களாகும். இதனை இயற்றியவர், குமரகுருபரசுவாமிகள் என்பார். இவர் ஒப்புயர்வற்ற திப்பியப் புலமையானர். இவரது பிறப்பிடம் திருநெல்வேலியையடுத்த ஸ்ரீவைகுண்டம். தந்தையார், சண்முகசிகாமணிக் கவிராயர். தாயார் சிவகாமிசுந்தரி யம்மையார். குலம், வேளாளர். மதம், சைவம். நைட்டிகப்பிரமசாரி. காலம் 300 வருடங்களுக்குமுன். (16-ம் நூற்றாண்டின் கடைப்பகுதி.)

(கலித்துறை)

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும்
சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட
நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர்செந்
நாவினின்று
காக்கும் கருணைக் கடலே சகல
கலாவல்லியே. 1.

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும்
பயனும் என்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல் காயுளங்
கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம்
தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல
கலாவல்லியே. 2.

சொல்விற் பனமும் அவதான முங்கல்வி
சொல்லவல்ல
நல்வித்தை யும்தந் தடிமைகொள் வாய்நளி
னாசனஞ்சேர்
செல்விக் கரிதென்(று) ஒருகால முஞ்சிதை
யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல
கலாவல்லியே. 3.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட
மன்னருமென்
பண்கண் டளவில் பணியச்செய் வாய்படைப்
போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும்
விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல
கலாவல்லியே. 4

2. தமிழ்த் தெய்வம்.

அடியில் வரும்பாடல் மனோன்மணீய நாடகத்துப் பாயிரத்தைச் சேர்ந்தது. இந்நாடகத்தை இயற்றியோர், திருவநந்தபுரம் ராவ்பஹதூர் சுந்தரம் பிள்ளை M. A. என்பார். இவர் தமிழ் மொழிப் புலமையும் ஆங்கிலமொழிப் புலமையும் நிரம்பியவர். திருவநந்தபுர மஹாராஜாவின் கல்லூரி தத்துவசாஸ்திர ஆசிரியாக விளங்கியவர். இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்னிருந்தவர்.

(தரவு)

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

(தாழிசை)

கடல்குடித்த குடமுனியுன் கரைகாணக் குருநாடில்
தொடுகடலை உனக்குவமை சொல்லுவதும் புகழாமே
ஒருபிழைக்கா அரனார்முன் உரையிழந்து விழிப்பாரேல்
அரியதுன இலக்கணமென் றறைவதும்அற் புதமாமே.

சதுமறைஆ ரியம்வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழிநீ அனாதியென மொழிகுவதும் வியப்பாமே
வேகவதிக் கெதிரேற விட்டதொரு சிற்றேடு
காலநதி நினைக்கரவாக் காரணத்தின் அறிகுறியே.

கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்
உடையாருன் வாசகத்தில் ஒருபிரதி கருதினதே.
தக்கவழி விரிந்திலகுஞ் சங்கத்தார் சிறுபலகை
மிக்கநலம் சிறந்தவுன்றன் மெய்ச்சரித வியஞ்சனமே.

வடமொழிதென் மொழியெனவே வந்தஇரு விழியவற்றுள்
கெடுவழக்குத் தொடர்பவரே கிழக்கொடுமேற் குணராரே
வீறுடைய கலைமகட்கு விழியிரண்டு மொழியானால்
கூறுவட மொழிவலமாக் கொள்வர்குண திசையறியார்

கலைமகள்தன் பூர்வதிசை காணுங்கால் அவள்விழியுள்
வலதுவிழி தென்மொழியா மதியாரோ மதியுடையார்
பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே

வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி.
மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தின் மாண்டோர்கள்
கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் சதறுவரோ. 5

3. திருவாசகம்.

இதனை அருளிச்செய்தவர் சைவசமய குரவர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசக சுவாமிகள். மதுரைக்குக் கிழக்குத் திசையில் திருவாதவூரில் அமாத்தியப் பிராமணகுலத்தில் பிறந்தவர். இளம்பருவத்திலேயே உலக அறிவும், நூலறிவும் நிறைந்து பாண்டியனுக்கு மந்திரியாயிருந்தவர். பாண்டியனுக்குக் குதிரை வாங்கச்சென்ற இவரைச் சிவபெருமான் திருப்பெருந்துறை யென்

னும் தலத்தில் குருமூர்த்தியாய்க் காட்சி தந்து ஆண்டருளினார். குதிரை வாங்கக் கொண்டு சென்ற பொருளையெல்லாம் இவர் சிவாலயத் திருப்பணிக்கும், சிவனடியார்க்கும் செலவிட்டனர். பாண்டியன், குதிரை வாங்காமைக்கு இவரை வருத்த, சிவபெருமான் இவர்பொருட்டு நரிகளைப் பரிகளாக்கியும், பரிகளை நரிகளாக்கியும், வைகையில் வெள்ளம் வரச்செய்து மண் சுமந்தும் இவரது தெய்வத்தன்மையைப் பாண்டியன் முதலியோர்க்கு வெளிப்படுத்தியருளினார். இவரது காலம் இரண்டாம் வரகுண பாண்டியன் காலமாகும்; ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி. இவரது திருப்பாடல்களின் சுவை அநுபவித்தே அறியத்தக்கன. அடியில் வருவன திருவாசகப் பாடல்களுள் சிலவாகும்.

நாடகத்தால் உன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்;
ஆடகச்சீர் மணிக்குன்றே! இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள், எம் முடையானே! 6

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்?
வானேயும் பெறில்,வேண்டேன்; மண்ணாள்வான் மதித்தும்இரேன்;
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனே! எம் பெருமான்! எம்
மானே! உன் அருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே.

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன், புகழ்ந்துரையேன், புத்தேளிர்
கோமான்! நின் திருக்கோயில் தூகேன், மெழுகேன், கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே! 8

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே? 9

வாழ்த்துவதும் வானவர்கள்
தாம்வாழ்வான், மனநின்பால்
வீழ்த்துவதும் தாம் உயர்ந்து
தம்மைஎல்லாம் தொழவேண்டிச்,
சூழ்த்துமது கரம்முரலும்
தாரோயை! நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான்
யானுமுன்னைப் பரவுவனே. 10

உற்றாரை யான்வேண்டேன்,
ஊர்வேண்டேன், பேர்வேண்டேன்,
கற்றாரை யான்வேண்டேன்,
கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங்
கூத்தா! உன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே. 11

அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே!
அன்பினில் விளைந்தஆர் அமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே? 12

யானேபொய், என்நெஞ்சும்பொய் என் அன்பும்பொய்,
ஆனால்வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே?
தேனே, அமுதே, கரும்பின் தெளிவே, தித்திக்கும்
மானே, அருளாய் அடியேன் உனைவந் துறும்ஆறே. 13

என்னை அப்பா அஞ்சல்! என்பவர்
இன்றிநின்று எய்த்தலைந்தேன்
மின்னை ஒப்பாய் விட்டிடுதி கண்டாய்
உவமிக்கின் மெய்யே
உன்னை ஒப்பாய் மன்னும் உத்தர
கோசமங்கைக் கரசே!
அன்னை ஒப்பாய் எனக்கு அத்தன்
ஒப்பாய்என் அரும்பொருளே. 14

4. பெரியதிருமொழி.

இது வைணவர்க்குத் தமிழ்வேதமாகிய நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் இரண்டாமாயிரமாக உள்ள ஒரு பகுதி. இதனை அருளிச்செய்தவர் ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒருவராகிய திருமங்கையாழ்வார். இவர் சோழநாட்டில் ஒரு பகுதியான திருமங்கை நாட்டிலுள்ள திருக்குறையலூரில் கள்ளர் குலத்தில் அவதரித்தவர். இவரதியற்பெயர் நீலன் என்பது. இவரது தந்தையார் சோழனிடத்துச் சேனாபதியாயிருந்தவர். இவரும் அத்தொழிலையுடையவராயிருந்து பின் திருமங்கை நாட்டிற்குச் சிற்றரசராகவும் விளங்கியவர். இவர் பாகவத கைங்கரியத்திற்கு வழிப்பறி செய்து நிற்கும் சமயத்தில் நாராயணமூர்த்தி பிராட்டியுடன் மணவாளக் கோலத்துடன் வந்து தமது ஆபரணங்களையும் அவர்பால் பறிகொடுத்துத் தமது கால்விரல் மோதிரத்தை ஆழ்வார் பல்லாற் கடித்து வாங்குகையில் தத்துவஞானத்தைத் திருவடி வழியாய் அவர்க்குப் புகட்டி அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசித்துச் சேவை சாதித்தார். அதுமுதல் இவர் ஆசு, மதுரம், வித்தாரம், சித்திரம் என்னும் நாற்கவிதைகளையும் பாடவல்லாராய்த் திவ்ய தேச யாத்திரை சென்று மங்களாசாசனம் செய்து திருமங்கையாழ்வார் எனப் போற்றப்பெற்றார். இவரது காலம் 1000 வருடங்களுக்கு முன்.

ஆழ்வாரது அஷ்டாக்ஷர அநுபவம்.

வென்றியே வேண்டி வீழ்பொருட் கிரங்கி
வேற்கணார் பிரியமே கருதி
நின்றவா நில்லா நெஞ்சினை யுடையேன்
என்செய்கேன் நெடுவிசும் பணவும்
பன்றியாய் அன்று பாரகங் கீண்ட
பாழியான் ஆழியான் அருளே
நன்றுநான் உய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். 15

கள்வனேன் நானேன் படிறுசெய் திருப்பேன்;
கண்டவா திரிதந் தேனேனும்,
தெள்ளியேன் ஆனேன் செல்கதிக் கமைந்தேன்;
சிக்கெனத் திருவருள் பெற்றேன்;
உள்ளெலாம் உருகிக் குரல்தழுத் தொழிந்தேன்;
உடம்பெலாம் கண்ணநீர் சோர,
நள்ளிருள் அளவும் பகலும் நான் அழைப்பேன்;
நாராயணா வென்னும் நாமம். 16

எம்பிரான்! எந்தை! என்னுடைச் சுற்றம்
எனக்கரசு என்னுடை வாழ்நாள்
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி
அவருயிர் செகுத்தவெம் அண்ணல்
வம்புலாம் சோலை மாமதில் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகாள் உய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். 17

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். 18

மஞ்சுலாம் சோலை வண்டறை மாநீர்
மங்கையார் வாள்கலி கன்றி
செஞ்சொலால் எடுத்த தெய்வநன் மாலை
இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்!
துஞ்சும்போ(து) அழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லினும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராயணா வென்னும் நாமம். 19

5. தாயுமானவர் பாடல்.

தாயுமானவர் தஞ்சாவூர் ஜில்லா வேதாரணியம் என்னும் பதியில் பிறந்தவர். வேளாண் மரபினர். இவர் தந்தை திரிசிரபுரத்து அரசரான விஜயரங்க சொக்கலிங்க நாயக்கரிடம் பெரிய சம்பிரதி உத்தியோகத்திலிருந்த கேடிலியப்பபிள்ளை என்பவர். இவரும் பின்னர் தந்தையின் உத்தியோகத்தைச் சிலநாள் ஏற்றிருந்தவர், தமக்கு ஓர் மகன் பிறந்த பின்னர் முற்றத்துறந்து தலயாத்திரை செய்தும், பத்திரசம் கனியும் பாடல்கள் பாடியும் நாளைக்கழித்தவர். இராமநாதபுரத்துக் கருகிலுள்ள லக்ஷ்மிபுரம் என்னும் இடத்தில் இவர் கி. பி. 1742-ம் வருடம் விதேகமுத்தியடைந்தார். இப்

போதும் அவ்விடத்தில் இவரது சமாதி உளது. இவரது மதம் சுத்தாத்துவித சித்தாந்த சைவம்.

இவரது பாடலில் வடமொழியும், வழக்குச் சொற்களும் அதிகமாகப் பயின்றிருக்கின்றன; பத்திரசம் மலிந்திருக்கும்.

ஆசைக்கோர் அளவில்லை; அகிலம்எல் லாம்கட்டி
ஆளினும் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவர்; அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்;
நெடுநாள் இருந்தபேரும்
நிலையாக வேஇனும் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவர்;எல்லாம்
யோசிக்கும் வேளையில், பசிதீர உண்பதும்
உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதும்நான் நான்எனக் குழறியே
ஒன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல், மனதற்ற
பரிசுத்த நிலையைஅருள்வாய்,
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

ஆழ்ஆழி கரையின்றி நிற்கஇலை யோ?கொடிய
ஆலம்அமு தாகஇலையோ?
அக்கடலின் மீதுவட அனல்நிற்க இல்லையோ?
அந்தரத் தகிலகோடி
தாழாமல் நிலைநிற்க இல்லையோ? மேருவும்
தனுவாக வளைய இலையோ?

சத்தமே கங்களும் வச்சாதான் ஆணையிற்
சஞ்சரித் திடஇல்லையோ?
வாழாது வாழுவே இராமன் அடி யால்சிலையும்
மடமங்கை ஆகஇலையோ?
மணிமந்த்ரம் ஆதியால் வேண்டுசித் திகள்உலக
மார்க்கத்தில் வைக்கவிலையோ?
பாழான என்மனம் குவியஒரு தந்திரம்
பண் ணுவ துனக்கருமையோ?
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கம்அற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே. 21

கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்;
காடிவெம் புலிவாயையும்
கட்டலாம்; ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம்;
கட்செவி எடுத்தாட்டலாம்;
வெந்தழலின் இரதம்வைத்(து) ஐந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்;
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்;
விண்ணவரை ஏவல்கொளலாம்;
சந்ததமும் இளமையோ டிருக்கலாம்; மற்றொரு
சரீரத்தினும் புகுதலாம்;
சலமேல் நடக்கலாம்; கனல்மே லிருக்கலாம்;
தன்னிகரில் சித்திபெறலாம்;
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறம்அரிது சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே. 22

6. இராமலிங்கசுவாமிகள் பாடல்.

படமுடியா(து) இனித்துயரம் படமுடியா(து) அரசே!
பட்டதெல்லாம் போதும்இந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்
உடலுயிர்ஆ தியவெல்லாம் நீஎடுத்துக் கொண்டுன்
உடலுயிர்ஆ தியவெல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்,
வடலூர்ச்சிற் றம்பலத்தே வாழ்வாய்!என் கண்ணுண்
மணியே!யென் குருமணியே! மாணிக்க மணியே!
நடனசிகா மணியே!யென் நவமணியே!ஞான
நன்மணியே! பொன்மணியே! நடராஜ மணியே! 23

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே! தருநிழலே! நிழல்கனிந்த கனியே!
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே!
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே!
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே!
மென்காற்றில் விளைசுகமே! சுகத்தில்உறும் பயனே!
ஆடையிலே எனைமணந்த மணவாளா! பொதுவில்
ஆடுகின்ற அரசே!என் அலங்கல்அணிந் தருளே. 24

தனித்தனிமுக் கனிபிழிந்து, வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையும் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே,
தனித்தநறுந் தேன்பெய்து, பசும்பால்இன் தெங்கின்
தனிப்பாலும் சேர்த்தொருதீம் பருப்(பு)இடியும் விரவி
இனித்தநறும் நெய்அளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுந்தெள் ளமுதே!
அனித்தம்அறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே!
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கல்அணிந் தருளே.

II. நீதிப்பகுதி.

1. நாலடியார்.

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகும். பல ஜைனமுனிவர்கள் பாடிய வெண்பாக்களினின்றும் தெரிந்தெடுத்த நானூறு வெண்பாக்களைக்கொண்ட ஒரு நீதிநூல். அதனால் இது நாலடி நானூறு என்றும் பெயர் வழங்கும். இந்நூலுக்குத் திருக்குறள் போல் பால் இயல் அதிகாரப் பகுப்புமுறை செய்து உரையும் செய்தவர் பதுமனார்என்னும் ஜைனப்புலவர். "ஆலும்வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்று வழங்கும் பழமொழியே இந்நூற்பெருமையை விளக்கும். இந்நூலிற்கூறப்படும் நீதிகள் எல்லா மதத்தினர்க்கும் ஜாதியார்க்கும் ஒத்தன. இந்நூல் வரலாற்று விரிவை அறிவுநூல் திரட்டு இரண்டாம் பாகத்திற் காணலாம்.

நல்லோர் உறவால் நலமிகப் பெரிதாம்.

ஊர் அங் கணநீர் உரவுநீர்ச் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்—ஓரும்
குலமாட்சி யில்லாரும் குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து. 1

பொறுமையே போற்றுவார் பெரியோர் என்றும்.

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும், தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ?
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு. 2

பெரியோர் கேண்மை பிறைபோல் வளரும்.

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. 3

தோழரோடும் ஏழைமை பேசேல்.

காவாத நின்அன்பிற் கண்அன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை;—இரவினை
உள்ளுங்கால் உள்ளம் உருகுமால் என்கொலோ?
கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு. 4

அறிவிலான், அவையை அணுகுதல் இழிவாம்.

கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாளர் இடைப்புக்கு,—மெல்ல
இருப்பினும் நாய்இருந் தற்றே இராஅ(து)
உரைப்பினும் நாய்குரைத் தற்று. 5

அறிவோர், கயவரை அடையினும் திரியார்.

வேம்பின் இலையுள் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதும் திரியாதாம்—ஆங்கே
இனம்தீ தெனினும் இயல்புடையார் கேண்மை
மனம்தீதாம் பக்கம் அரிது. 6

பணமிலான் உலகில் பிணமே யாவன்.

அத்திட்ட கூறை அரைச்சுற்றி வாழினும்
பத்தெட்(டு) உடைமை பலருள்ளும் பாடெய்தும்
ஒத்த குடிப்பிறந்தக் கண்ணுமொன் றில்லாதார்
செத்த பிணத்திற் கடை. 7

வறுமையானால் பெருமைகள் மாயும்.

பிறந்த குலம்மாயும் பேராண்மை மாயும்
சிறந்ததம் கல்வியும் மாயும்—கறங்கருவி
கன்மேற் கழூஉம் கணமலை நன்னாட!
இன்மை தழுவப்பட் டார்க்கு. 8

உயரிய செய்கை உடைமையே நற்குலம்.

நல்ல குலமென்றுந் தீய குலமென்றும்
சொல்லள வல்லாற் பொருளில்லைத்—தொல்சிறப்பின்
ஒண்பொருள் ஒன்றோ? தவம்கல்வி ஆள்வினை
என்றிவற்றான் ஆகும் குலம். 9

அறிவிலார்க் கில்லை அடக்கம் என்றும்.

கற்றறிந்த நாவினார் சொல்லார்தம் சோர்வஞ்சி
மற்றையர் ஆவார் பகர்வர்—பனையின்மேல்
வற்றிய ஓலை கலகலக்கும் எஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை ஒலி. 10

---

2. நீதிநெறி விளக்கம்.

இதனை இயற்றியவர் குமரகுருபரர். (இவர் வரலாற்றுக் குறிப்பு முன்னர்க்காண்க) நீதிமார்க்கங்களை விளக்குதற்குக் கருவியாயிருப்பதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இதனை மதுரை அரசர் திருமலைநாயக்கர் வேண்டுகோளால் இவ்வாசிரியர் செய்தார் என்ப. திருக்குறளிற் போலவே இந்நூலில், கல்வி, அரசு, அமைச்சு முயற்சி முதலியவற்றை விளங்க உரைத்து முடிவில் துறவும் மோக்ஷசாதனமும் கூறப்பெற்றுள்ளன. ஒவ்வொரு வெண்பாவும் உரைக்கும் பொருளைத் திட்பமாகவும், நுட்பமாகவும் உரைக்கின்றன. ஸ்டோக்ஸ் என்ற ஆங்கிலேயர் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

அர்த்தமும் புகழும் அளிப்பது கல்வி.

அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவல்ஒன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை. 11

கற்றதை உளத்தில் பொற்புடன் அமைக்க.

வருந்தித்தாம் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட்(டு) அரிப்பரித்தாங்கு
எய்த்துப் பொருள்செய் திடல். 12

சிந்தை நிறைவு செல்வத்திலேயாம்.

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்(று) அகம்மகிழ்க—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று. 13

பிறர் சீரேசொலத் தன்சீர் பெருகும்.

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார் யார்க்கும் தாழ்ச்சி சொலல். 14

திருவுடைமன்னன் தெய்வமே யாகும்.

குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும்—அறவோர்க்(கு)
அடிகளே தெய்வம் அனைவோர்க்கும் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை. 15

இறுதிவரையும் இயற்றுக முயற்சியை.

உறுதி பயப்பக் கடைபோகா வேனும்
இறுதிவரை காறும் முயல்ப—இறும்உயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்றால் அல்லனபோல்
ஆவனவும் உண்டு சில. 16

முயன்றால் உலகில் முடியாததில்லை.

உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலும் கரி. 17

திரிகரணசுத்தியே சிறந்தசன் மார்க்கம்.

பொய்குறளை வன்சொல் பயனிலவென் றிந்நான்கும்
எய்தாமை, சொல்லின் வழுக்காத்து—மெய்யில்
புலம்ஐந்தும் காத்து மனமாசு அகற்றும்
நலம்அன்றே நல்லா றெனல். 18

கருமம் உடையார் கருதார் எவையும்.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். 19

தெய்வம் மறைத்த தீவினை யில்லை.

வஞ்சித் தொழுகும் மதியிலிகாள்! யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின்;—வஞ்சித்த
எங்கும் உளன்ஒருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கம் குலைவ தறிவு. 20

---

3. நன்னெறி.

இது நாற்பது பாட்டுக்களடங்கிய ஒரு சிறு நீதிநூல். இந்நூலின் ஒவ்வொரு செய்யுளும் மக்கள் யாவர்க்கும் வேண்டிய சன்மார்க்கங்களைச் சிறந்த உவமைகளோடு விளங்க உரைக்கின்றன. இதனை இயற்றியவர் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் காஞ்சி

புரத்திலிருந்த குமாரசுவாமிதேசிகர் என்பாரது புத்திரர். இவருடன் பிறந்தவர்களான வேலாயுதர், கருணைப்பிரகாசர், ஞானம்பிகை என்னும் மூவரும் இவரைப்போலவே தமிழ்ப்புலமை சான்று விளங்கியவர்கள். இவரியற்றிய நூல்கள் பிரபுலிங்கலீலை, வெங்கைக்கோவை, வெங்கையுலா முதலிய பலவாகும். இவர் பாடிய நூல்களை இவரது பிரபந்தத் திரட்டிற் காண்க. இவரது பாடல்களுள் பழைய தமிழ்ப்புலவர் எவருங் கூறாத நவநவமான கற்பனைகளையும் காணலாம். இவரது பாடல்கள் இன்னோசையும், பொருளமைதியும் பொருந்தியவை. இவரது மதம் வீரசைவம். காலம் இதற்கு 280- வருடங்களுக்கு முன். நல்+நெறி=நன்னெறி. நெறி—வழி.

புகழ்ச்சி விரும்பாக் கோடையே கோடையாம்.

என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ?
நாவிற் குதவும் நயந்து. 21

பிரிந்துபின்கூடல் சிறந்தநண்பாகா.

நீக்கம் அறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். 22

இல்லறம் இருவரும் ஒருவராய் இயற்றல்.

காதன் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமம் செய்பவே—ஓதுகலை
எண்ணிரண்டும் ஒன்றுமதி என்முகத்தாய்! நோக்கல்தான்
கண்ணிரண்டும் ஒன்றையே காண். 23

கல்விச்செருக்கு அல்லவுள் ஆழ்த்தும்.

கடலே யனையம்யாம் கல்வியால் என்னும்
அடல்ஏ றனையசெருக் காழ்த்தி—விடலே;
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். 24

கொடைநற் பிறவிக் குணமே யாகும்.

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்(று) அவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ?—பைந்தொடீ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி. 25

இன்சொல் மகிழ்ச்சி எவர்க்கும் அளிக்கும்.

இன்சொலால் அன்றி இருநீர் வியன்உலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே;—பொன்செய்
அதிர்வளையாய்! பொங்கா(து) அழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவாற் பொங்கும் கடல். 26

இளமையில் அறமே எமன்பயம் நீக்கும்.

கொள்ளுங் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளம் கனிந்(து)அறஞ்செய் துய்கவே—வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு. 27

கற்றோர் தம்மைக் கற்றோர் விழைவர்.

கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர்தாம் என்றும் மதியாரே;—வெற்றிநெடு
வேல்வேண்டும் வாள்விழியாய்! வேண்டா புளிங்காடி;
பால்வேண்டும், வாழைப் பழம். 28

பெரியோர் பிறர்நோய் தமதெனப் பேணுவர்.

பெரியவர்தம் நோய்போற் பிறர்நோய்கண்(டு) உள்ளம்
எரியின் இழுதாவர் என்க—தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறஉறுப்பைக்
கண்டு கலுழுமே கண். 29

---

4. திருக்குறள்.

இதனை அருளிய பெரியார், திருவள்ளுவநாயனார் என்பவர். இவர் அவதரித்த குலம் வள்ளுவக்குடி என்பர். வேறு சிலர் 'இப் பெயர் குடிபற்றி வந்ததன்று; இவர்க்கு இது வண்மை பற்றி வந்தது' என்பர். பிறர், பிறவாறுங் கூறுவர். ஆகவே இவரது குலம், மதம் இதுவெனத் துணிந்துரைக்குமாறில்லை. திருக்குறள் என்னும் அரிய பெரிய நூல், குறள் வெண்பாக்களாற் செய்யப்பெற்றமையின் அப் பெயர் பெற்றது. அன்றியும் வாமனனது குறளுருவினுள் உலகளந்த திரிவிக்கிரமனது நெடிய உருவம் மறைந்திருந்தமையே போலக் குறுகிய பாட்டினுள் பெருகிய பொருள் அடங்கியிருக்கின்றமையான் குறள் என்னும் பெயர் பெற்றதெனவும் கூறுவர். (திருவள்ளுவமாலை-6—) திரு-சிறப்புப் பொருள்தரும் உரிச்சொல்.

திருக்குறள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தம் நான்கனுள் முன்னைய மூன்றையும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பிரிவால் விளக்குவது. இது சங்கமருவிய நூல்களாகிய பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றாகும். இது ஒப்பது மிக்கதுமில்லாத் திப்பியப் பநுவலாகும். இது தமிழர்க்குச் சிறந்த வேதமாகக் கருதப்படுவது. இந்நூலில் கூறப்பெறும் விஷயங்கள், பல தேசத்தாரும் பல மதத்தாரும் போற்றிக்கொள்ளற் குரியனவாக இருத்தலான், இந்நூல் பல அந்நிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பெற்றிருக்கிறது. திருக்குறள் மணம் மணவாத தமிழ்ப் பழநூல்களும் உரைகளுமில்லையென்றே சொல்லலாம்.

கடவுள்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். 30

நீத்தார்.

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது. 31

நட்பு.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 32

நட்பாராய்தல்.

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் நட்பு கடைமுறை
தான்சாம் துயரம் தரும். 33

அடக்கமுடைமை.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 34

ஒழுக்கம்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 35

அழுக்காறாமை.

கொடுப்ப(து) அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். 36

இன்சொல்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 37

பயனிலசொல்.

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். 38

வாய்மை.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். 39

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 40

கள்ளாமை.

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருள்
கள்ளத்தாற் கள்வேம் எனல். 41

கல்வி.

கற்க, கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. 42

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 43

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. 44

அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்
வம், பூரியார் கண்ணு முள. 45

புறங்கூறாமை.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும். 46

மகன்.

மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல். 47

தந்தை.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல். 48

புகழ்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று. 49

III. சரிதைப் பகுதி.

1. நளவெண்பா.

இது வெண்பாக்களாலாகிய ஒரு சிறு காப்பியம். இப்பெயர் நூலுக்குக் கருவியாகுபெயர். நளனைப்பற்றிய வெண்பா; இரண்டனுருபும் பயனும் தொக்கதொகை. னகர ஒற்றுக் கெட்டது, விகாரம். இதனை இயற்றியவர் புகழேந்திப் புலவர். இவர், 'புலவர்க்கு வெண்பா, புலி' என்று சிறப்பித்துக் கூறும் வெண்பா யாப்பை நுனித்த பொருளும் இனித்த சொல்லும் செறியப் பாடுவதில் வல்லுநராய், "வெண்பாவிற் புகழேந்தி" என்று பாராட்டப்பட்டவர். இவர் பிறப்பிடம், செங்கற்பட்டை அடுத்த பொன்விளைந்தகளத்தூர். குலம் 'துளுவவேளாளர்' என்பர். மதம், வைணவம். காலம்: இரண்டாம் குலோத்துங்கன் காலமாகிய 12-ம் நூற்றாண்டின் இடைப்பகுதி. இவர், சோழநாட்டைச் சேர்ந்த மல்லுவ நாட்டுச் சிற்றரசனாகிய சந்திரன்சுவர்க்கி என்பவனால் சாலவும் அபிமானிக்கப்பட்டவர். அவனது வேண்டுகோளாலேயே இந்நூலைப் புலவர் இயற்றியிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. அவ்வரசனை இவர் இந்நூலில் உவமான மாத்திரத்தில் இடையிடையே புகழ்ந்து

கூறியுள்ளார். இப்புகழேந்தியார்க்கும், ஒட்டக்கூத்தர் என்னும் புலவர்க்கும் மிக்க பகை மூண்டிருந்ததென்று பலவித வரலாறு வழங்கி வருகின்றன; வழங்குமாறு இருவர்க்கும் பகைமை யிருந்திருக்கலாம்; ஆனால் பகைமைக்குக் காரணமாகக் கூறும் வரலாறுகள், ஆராயின் பொருந்துவனவல்ல. இந்நூல் வரலாற்று விரிவை அறிவுநூல் திரட்டு இரண்டாம் பகுதியிற் காண்க.

நளனைக் கலி தொடர்தல்.

தமயந்தி, தேவர்கள் அரசர்கள் கூடியிருந்த சுயம்வரத்தில் நளனையே தனக்குக் கணவனாக வரித்தாள். பின்பு தேவர் முதலியோர் தத்தம் இருப்பிடங்களுக்குச் சென்றனர். இந்திரன் முதலிய தேவர்களை இடைவழியிற் சந்தித்த கலிபுருஷன் தமயந்தி தேவர்களில் ஒருவரை மணமாலை சூட்டாததை அறிந்து கோபங்கொண்டு, "தமயந்தியையும் நளனையும் ஒருவரை யொருவர் விட்டுப் பிரியுமாறு செய்து அவர்தம் இன்பத்தைக் கெடுக்கின்றேன், துன்பத்தைக் கொடுக்கின்றேன்" என்று சபதம் செய்தான். நளன் தமயந்தியை மணந்து அவளுடன் தன்னகரம் சென்று இன்புற்று வாழ்ந்திருந்தான். சபதஞ்செய்த கலி நளனிடம் எப்போது பாவச்செய்கை தோன்றும், அப்போது அவனைப் பிடித்து வருத்தலாமென்று 12 வருடங்கள் காத்திருந்தான்.

ஆண்டிரண்டா றெல்லை அளவும் திரிந்தேயும்
காண்டகைய வெங்கலியும் காண்கிலான்,—நீண்டபுகழ்ச்
செந்நெறியால் பார்காத்த செங்கோல் நிலவேந்தன்
தன்னெறியால் வேறோர் தவறு. 1

சந்திசெயத் தாள்விளக்கத் தாளில்மறுத் தான்கண்டு
புந்தி மகிழப் புகுந்தகலி—சிந்தையெல்லாம்
தன்வயமே ஆக்கித் தமய னுடனிருந்தான்
பொன்னசல மார்பன் புகைந்து. 2

நாராய ணாய நமவென் றவனடியில்
சோரனை வெந்துயரம் சேர்ந்தாற்போல்—பாராளும
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி. 3

கலி நளராசனது தாயாதியான புட்கரனிடஞ் சென்று,

“நன்னெறியில் சூதால் நளனைக் களவியற்றித்
தன்னரசு வாங்கித் தருகின்றேன்—மன்னவனே!
போதுவாய் என்னுடனே” என்றான், புலைநரகுக்
கேதுவாய் நின்றான் எடுத்து. 4

அதுகேட்டுப் புட்கரன் உடன்பட்டு ஓர் ரிஷபத்தில் ஏறிக் கொடி பிடித்து நளனிடம் போனான்.

“ஆடல்கதிர்வேல் மன்னன் அவன்ஏற்றின் முன்போய்
எடுத்தகொடி என்னகொடி?” என்ன,—“மிடற்சூது
வெல்லும் கொடி”என்றான், வெங்கலியால் ஆங்கவன்மேல்
செல்லும் கொடியான் தெரிந்து. 5

“ஏன்றோம் இதுவாயின் மெய்ம்மையே எம்மோடு”
வான்றோய் மடல்தெங்கின் வான்தேறல்—தான்தேக்கி
மீதாடி வானவயல் வீழ்ந்துழக்கும் நன்னாடன்
“சூதாட” என்றான் துணிந்து. 6

அப்போது மந்திரிமார்கள் உரைக்கத் தொடங்கினார்கள்.

“அறத்தைவேர் கல்லும்: அருநரகில் சேர்க்கும்:
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்:—மறத்தையே
பூண்டுவிரோ தம்செய்யும்: பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ” என்றார் தெரிந்து.

"உருவழிக்கும்: உண்மை உயர்வழிக்கும்: வண்மைத்
திருவழிக்கும்: மானம் சிதைக்கும்:—மருவும்
ஒருவரோ டன்பழிக்கும்: ஒன்றல்ல; சூது
பொருவரோ தக்கோர் புரிந்து?" 8

மந்திரிமார் உரைத்த நீதியைக் கேட்டு,

"தீது வருக, நலம்வருக சிந்தையால்
சூது பொரவிசைந்து சொல்லினோம்;—யாதும்
விலக்கலிர்நீர்" என்றான், வரால்எற மேதி
கலக்கலைநீர் நாடன் கனன்று. 9

பின் நளன் இரத்தினமாலையைப் பந்தயமாக வைத்தான். புட்கரன் தான் ஏறிவந்த காளையைப் பணயமாக வைத்தான். கலிபுருஷன் புட்கரனோடு கூடிக்கொண்டு, பாச்சிகையாய் அவன் கூறிய விருத்தமாகவே புரண்டான். அதனைத் தோற்றுப் பின்னரும் நளன் கோடிக்கணக்கான நிதியங்களையும், சதுரங்க சேனைகளையும், நாடு நகரங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக வைத்துத் தோற்றான். இங்ஙனம் எல்லாவற்றையும் நளன் தோற்றபின் புட்கரன் கூறுவான்:-

"மனைக்குரியார் அன்றே வரும்துயரம் தீர்ப்பார்
சினைச்சங்கின் வெண்தலையைத் தேரல்—நனைக்கும்
குவளைப் பணைப்பைந்தாள் குண்டுநீர் நாடா!
இவளைப் பணயந்தா இன்று". 10

புட்கரனது இந்த வார்த்தையைக் கேட்டு,

"இனிச்சூ தொழிந்தோம். இனவண்டு கிண்டிக்
கனிச்சூத வார்பொழிலின் கண்ணே—பனிச்சூதப்
பூம்போ(து) அவிழ்க்கும் புனல்நாடன் பொன்மகளே!
நாம்போதும்" என்றான் நளன். 11

நளன் நகர் நீங்குதல்.

மென்கால் சிறைஅன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகம் கொள்ளத்தான் போனாற்போல்—தன்கால்
பொடியாடத் தேவியொடும் போயினான், அன்றே
கொடியானுக்(கு) அப்பார் கொடுத்து. 12

அச்சமயம் நகரத்து ஜனங்கள்:—

"ஆருயிரின் தாயே! அறத்தின் பெருந்தவமே!
பேரருளின் கண்ணே! பெருமானே!—பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்(கு)" என்றார், தம்கண்ணின்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று. 13

நளன்:—

"வேலை கரைஇழந்தால், வேதம் நெறிபிறழ்ந்தால்,
ஞால முழுதும் நடுவிழந்தால்,—சீலம்
ஒழிவரோ? செம்மை உரைதிறம்பாச் செய்கை
அழிவரோ? செங்கோ லவர்" 14

என்று கூறலும் நகரவாசிகள் இன்றிருந்தாயினும் நாளையத்தினம் எழுந்தருள்க என்று பாதத்தில் வீழ்ந்தனர். நளன் தமயந்தியை நோக்கி 'இவர்கள் விருப்பின்படி இன்று இங்கு இருப்போமா' என்றான். அந்தச்சமயத்தில் புட்கரன், 'யாரேனும் நளனை இந்நகரில் ஆதரிப்பின் அவர்கட்குக் கொலைத்தண்டனை' என்று பறையறைவித்தான். அவ்வளவில் நளன் நகரை விட்டு நீங்கினான். அப்போது நளன் பிரிவால் நகரத்தில் வீடுகள்தோறும் குழவியும் பாலுண்ணாது வருந்தினவென்றால் மேற்கூறுவது என்? நளன் மனைவிமக்களோடு சிறிதுதூரம் நடந்த அளவில் குழந்தைகள் இருவரும்

சந்தக் கழல்தா மரையும் சதங்கையணி
பைந்தளிரும் நோவப் பதைத்துருகி,—எந்தாய்!
வடந்தோய் களிற்றாய்! வழியான தெல்லாம்
கடந்தோமோ? என்றார் கலுழ்ந்து. 15

மக்கள் இவ்விதம் கூறக்கேட்ட நளன் துக்கமேலிட்டு ஒன்றும் தோன்றாமல் சித்திரம்போல் நின்றான். அப்பால் அவன் தமயந் தியை நோக்கி,

"காதல் இருவரையும் கொண்டு கடுஞ்சுரம் போக்(கு)
ஏதம் உடைத்திவரைக் கொண்டுநீ—மாதராய்!
வீமன் திருநகர்க்கே மீள்" என்றான், விண்ணவர்முன்
தாமம் புனைவாளைத் தான். 16

அதுகேட்டு நளனைப்பிரிய மனமில்லாத தமயந்தி,

"குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம்; பெறலாமோ?—கொற்றவனே!
கோக்கா தலனைக் குலமகளுக்" கென்றுரைத்தாள்,
நோக்கால் மழைபொழியா நொந்து. 17

அதற்கு நளன் கூறுதல்:—

"கைதவந்தான் நீக்கிக் கருத்திற் கரையகற்றிச்
செய்தவந்தான் எத்தனையும் செய்தாலும்—மைதீர்
மகப்பெறா மானிடர்கள் வானவர்தம் ஊர்க்குப்
புகப்பெறார் மாதராய்! போந்து." 18

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்(று)
என்னுடைய ரேனும் உடையரோ?—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களை இங் கில்லாத வர்." 19

"சொன்ன கலையின் துறையனைத்தும் தோய்ந்தாலும்,
என்ன பயனுடைத்தாம்? இன்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி," 20

நளன் இவ்வாறு சொன்னவற்றைக் கேட்டதும் தமயந்தி "நாம் நாடு நகரங்களைத் தோற்றது வேற்றரசர் அறியாதிருத்தற்கு எமது தந்தையின் பதிக்குச் செல்லலாம் வருக" என்று சொன்னாள். அதற்கு நளன்:—

"சினக்கதிர்வேற் கண்மடவாய்! செல்வர்பால் சென்றீ
எனக்கென்னும் இம்மாற்றம் கண்டாய்,—தனக்குரிய
தானம் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானம் துடைப்பதோர் வாள்" 21

நளன் மக்களை மாமனிடம் அனுப்பல்.

"அன்றியும் அரசராய் இருந்தவர் வேற்றரசரை அடைந்து உண்டு வாழ்வது பித்தர் செய்கை" என்று எடுத்துச்சொன்னான். அதன் பின் தமயந்தி "அரசரே! உமது கருத்து இதுவாயின், நம்மக்களையாவது என் தந்தையிடம் அனுப்புக" என்றாள். நளன் இசைந்து ஒரு பிராமணனை அழைத்து "இப்பிள்ளைகளைக் குண்டினபுரம் கொண்டு சென்று தமயந்தியின் தந்தை வீமராசனிடம் சேர்க்க" என்று கண்ணீர்விட்டுக் கட்டளையிட்டான். மக்கள் கேட்டு,

தந்தை திருமுகத்தை நோக்கித் தமைப்பயந்தாள்
இந்து முகத்தை எதிர்நோக்கி—"எந்தம்மை
வேறாகப் போக்குதிரோ?" என்றார் விழிவழியே
ஆறாகக் கண்ணீர் அழுது. 22

அப்போது தமயந்தி சோகம்.

அஞ்சனம்தோய் கண்ணில் அருவிநீர் ஆங்கவர்க்கு
மஞ்சனநீ ராக வழிந்தோட—நெஞ்சுருகி,
வல்லிவிடா மெல்இடையாள் மக்களைத்தன் மார்போடும்
புல்லிவிடா நின்றாள் புலர்ந்து. 23

அப்போது,

இருவர் உயிரும் ஒருகையால் வாங்கி
ஒருவன்கொண் டேகுவான் ஒத்து,—வருமறையோன்,
கோமைந்த ரோடிளைய கோதையைக்கொண் டேகினான்
வீமன் நகர்க்கே விரைந்து. 24

நளன் சோகம்.

காத லவர்மேலே கண்ணோட, விண்ணோடும்
ஊதை எனநின் றுயிர்ப்போட,—யாதும்
உரையாடா துள்ளம் ஒடுங்கினான், வண்டு
விரையாடும் தாரான் விரைந்து. 25

பின்னர் நளன் தேவியோடு தன் நாட்டையும் நகரையுங்கடந்து சென்று ஒரு பாலைவனத்தை அடைந்தான். அப்போது அவன் முன்பாக கலிபுருஷன் ஒரு பொன்பறவை வடிவமாகவந்து உட்கார்ந்திருந்தான்; அப்பறவையைப் பிடித்துத் தரும்படி தமயந்தி நளனை வேண்டினாள்; நளனும் பிடிக்க முயன்றான்; பறவை கைக்குள் அகப்படுவதுபோற் காட்டிப் பறந்து அயலில் உட்கார்ந்தது; நளனும் தமயந்தியும் ஒரே ஆடையைக்கட்டிக்கொண்டு தனது ஆடையால் நளன் பொற்புள்ளை வளைத்தான்; பறவை ஆடையை உடன்கொண்டு பறந்து ஆகாயத்தில் நின்று நளனைநோக்கி, "அரசனே! நானே உன் நாட்டைத் தோற்பித்தேன்" என்று கூறிற்று.

காவிபோல் கண்ணிக்கும் கண்ணியந்தோள் காளைக்கும்
ஆவிபோல் ஆடையும்ஒன் றானதே,—பூவிரியக்
கள்வேட்டு வண்டுழலும் கானத் திடைக்கனகப்
புள்வேட்டை ஆதரித்த போது. 26

தமயந்தி கலியைச் சபித்தல்.

"அறம்பிழைத்தார் பொய்த்தார் அருள்சிதைத்தார் மானத்
திறம்பிழைத்தார் தெய்வம் இகழ்ந்தார்—புறங்கடையில்
சென்றார் புகுநரகம் சேர்வாய்கொல்" என்றழியா
நின்றாள், விதியை நினைந்து. 27

அப்பால் இருவரும் அவ்விடம்விட்டு அகன்றனர்; பொழுது மறைந்து எங்கும் இருள் மூடிக்கொண்டது.

எங்காம் புகலிடம்என் றெண்ணி இருள்வழிபோய்
வெங்கான கம்திரியும் வேலைதனில்,—அங்கேஓர்
பாழ்மண் டபம்கண்டான் பால்வெண் குடைநிழற்கீழ்
வாழ்மண் டபம்கண்டான் வந்து. 28

நித்திரை செய்தற்கு நளன் தமயந்தியை அம்மண்டபத்துக்கு அழைத்துப்போனான்; மண்டபத்தை அடைந்ததும் அப்பாழ்மண்டபத்தின் நிலைமையைத் தமயந்தி கண்டு,

"வையம் உடையான் மகளாயாழ் கேட்டருளும்
தெய்வச் செவிகொதுகின் சில்பாடல்—இவ்விரவில்
கேட்டவா'' என்றழுதாள், கெண்டையங்கண் நீர்சோரத்
தோட்டவார் கோதையாள் சோர்ந்து. 29

நளன் தேற்றுதல்.

''பண்டை வினைப்பயனைப் பாரிடத்தில் ஆர்கடப்பார்?
கொண்டல் நிழலில் குழைதடவும்—கெண்டை
வழியல்நீர்'' என்றான்; ''மனநடுங்கி வெய்துற்(று)
அழியல்நீ'' என்றான் அரசு. 30

இவ்வாறு தேற்றித் தமயந்தியைத் துயிலும்படி சொன்னான். பின்பும் இருவரும் ஒருவர் துன்பத்தைக்கண்டு ஒருவர் துக்கித்தனர்; சிறிதுநேரத்தில் தமயந்தி அயர்ந்து நித்திரை போய்விட்டாள். அச்சமயத்தில் கலிபுருஷன் நளன் மனத்தில் ஒரு விகற்பத்தை உண்டுபண்ணினான்; அதனால் நளன் தமயந்தியைவிட்டுப் பிரிதற்கு நினைந்து இருவரும் கட்டியிருக்கும் அவ் ஒரே ஆடையை அரிவதற்கு நினைந்தான். அதற்கு அநுகூலமாக கலி ஒரு அரிவாள் வடிவுடன் அங்குவந்து கிடந்தான். நளன் அதனை எடுத்து,

ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக
முற்றும்தன் அன்பை முதலோடும்—பற்றி
அரிந்தான்; அரிந்திட் டவள்நிலைமை நெஞ்சில்
தெரிந்தான் இருந்தான் திகைத்து. 31

நளன் நிலைமை.

போய்ஒருகால் மீளும்; புகுந்தொருகால் மீண்டேகும்
ஆயர் கொணர்ந்த அடுபாலின்—தோயல்
கடைவார்தம் கைபோலும் ஆயிற்றே, காலன்
வடிவாய வேலான் மனம். 32

அப்பால் நளனது மனம் பிரிவதற்குத் துணிந்தது.

"தீக்கா னகத்துறையும் தெய்வங்காள்! வீமன்தன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின்—நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளில் கைவிட்டின்(று)
ஏதிலன்போல் போகின்றேன் யான்." 33

நளன் போனபின் தமயந்தி விழித்துக்கொண்டு "வேந்தே எங்கிருக்கிறாய்" என்று கையை நீட்டிப்பார்க்க நளனைக்காணாது புரண்டு புலம்பினாள்.

வெய்ய தரையென்னும் மெல்அமளி யைத்தடவிக்
கையரிக்கொண் டெவ்விடத்தும் காணாமல்,—ஐயகோ!
என்னப்போய் வீழ்ந்தாள், இனமேதி மென்கரும்பைத்
தின்னப்போம் நாடன் திரு. 34

தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாஎன் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம். 35

2. நைடதம்.

நைடதம் வடமொழியிலுள்ள பஞ்ச காவ்யங்களுள் ஒன்று. வடமொழியில் இதனை யியற்றியவர் ஸ்ரீ ஹர்ஷதேவன் என்னும் கவி அரசர். நிஷததேசத்தரசனுன நளனது சரித்திரத்தைக் கூறுதலால், இஃது இப்பெயர் பெற்றது; தத்திதாந்த நாமம். நைஷதம் என்னும் வடமொழிப் பெயர் தமிழில் நைடதம் என ஆயிற்று. வடமொழி நைடதத்தையும் தமிழிலுள்ள நளவெண்பா வையும் முதனூலாகக் கொண்டு இந்நூலை இப்பெயரோடு செய்த வர் அதிவீரராமபாண்டியன் என்னும் இயற்பெயர் வாய்ந்த பாண் டிய மன்னராவர். இவர்க்குச் சீவலன், வரராமன் என்றபெயர்களும் வழங்கும். இவர் தென்காசியில் இருந்து அரசு செய்தவர். இவர் முடிசூடிய காலம் கி-பி-1562-என்று சாசனங்களால் அறியப்படுகி றது. இவரது பாடல்களால் இவர் மதம் சைவம் என்பது தெளிவு.

இவர் இயற்றிய ஏனைய தமிழ் நூல்கள் இலிங்கபுராணம், கூர்ம புராணம், காசிகாண்டம், நறுந்தொகை, கருவை அந்தாதிகள் முதலியன. இவரது தமையன் வரதுங்கராமபாண்டியன் என் பாரும் சிறந்த தமிழ்ப்புலமை வாய்ந்திருந்தவர். அவர் பாடியது, பிரமோத்திர காண்டம்; கருவையந்தாதிகளையும் அவரே பாடினர் என்பது சிலரது கொள்கை.

அதிவீரராமபாண்டியன் வாக்கு, வெண்மையும் வன்மையு மின்றிச் செம்பாகமானது. ஒரு பொருளுக்கு அடைமொழிகளை அணிஅணியாய் அடுக்கிக் கூறுவது இவரியல்பு. சிந்தாமணி, கம்ப ராமாயணம் முதலிய காவ்யங்களினின்றும் சங்க நூல்களினின்றும் நயமான சில தொடர்களையும் கருத்துக்களையும் தம்முடைய பாடல் களில் அங்கங்கே அமைத்துக் கொள்வர். தமிழ் இலக்கிய அறிவு பெற விரும்புவோர் இந்நூலை முதற்கண் விரும்பிக்கற்றல் மரபு. இந்நூலில் காவ்யரசம் மலிந்திருக்கின்றன. "நைடதம் புலவர்க் கௌடதம்" என்ற பழமொழியால் இந்நூலின் பெருமை விளங்கும். அடியில் வரும் பகுதிகள் நைடதத்தில் பிரிவுறு படல முதல் அர சாட்சிப் படலம் இறுதியாக ஆறு படலங்களின் சுருக்கமாகும். இது மேற் பதிப்பித்துள்ள நளவெண்பாவின் கதைத் தொடர்ச்சியாம்.

தமயந்தி புலம்பல்.

"நேரலார் போரேறே! நிடதத்தார் கோமானே!
ஆர வரைமார்பா! அளியேன் உயிர்க்குயிரே!
கார் இருள்வாய் யான்புலம்பக் கானகத்து விட்டகன்றும்
சாரலையால் இன்னும் இதுவோ நின் தண்ணளியே? 36

"நெஞ்சம் மெலிவேன் நினது தடந்தோளும்
கஞ்ச மலர்முகமும் காணாது கண்பனிப்ப,
மஞ்சுதவழ் வெற்பெறிந்த வச்சிரத்தோன் அன்றளித்த
விஞ்சை பயின்று விளையாட் டயருதியோ? 37

"ஞாலத் திருள்நடப்ப, நாட்கமலம் வாய்நெகிழ,
வேலைத் திரைமுகட்டில் வெய்யோன் எழுந்தனனால்,
மாலைக் கதிர்வடிவேல் மன்னர் பெருமானே!
காலைக் கடவ கடன்கழிக்க வாராயோ? 38

"வாவும் இளமான்காள்! மயில்காள்! மடப்பிடிகாள்!
கூவும் கரிய குயில்காள்! மென் புள்ளினங்காள்!
ஆவியென மேவி அகலேம் என அகன்ற
காவலன்றான் போன வழியெனக்குக் காட்டீரே!" 39

என்று இங்ஙனமெல்லாம் புலம்பிக் கண்ணீர்வீட்டு அழுது செல்பவள், நளனது அடித்தடம் கண்டு அலறி விழுந்து மூர்ச்சித்தாள். அச்சமயத்தில் அவளை ஒரு பெரும்பாம்பு விழுங்கலுற்றது; அதன் வாய்ப்பட்ட போது

"நெய்த்தோரின் மூழ்கி நிணம்பருகும் வைவேலோய்!
பைத்தோர் கொடுந்தறுகண் பாந்தள் விழுங்கியதால்
எய்த்தேன் உயிர்க்காத்தற் கெய்தாய்" என அழுதாள்
மைத்தோய் குவளை மதர்நெடுங்கண் வாணுதலே. 40

இவ்வாறு அவள் அழுத குரலைக் கேட்ட வேடன் ஒருவன் வந்து அப்பாம்பைக் கொன்று அவளை அதன் வாயினின்றும் மீட்டான்.

பின் அவன் அவள் அழகைக் கண்டு அவளை விரும்பித் தன் தீய எண்ணத்தை ஒரு வகையாகக் குறிப்பித்தான். தமயந்தி பெருஞ் சீற்றங்கொண்டு 'நீருய் நிலத்து விழு' என்று சபித்தாள். வேடன் சாம்பராய் எரிந்தான். அப்பால் அவள் முனிவர்கள் ஆச்சிரமத்தை அடைந்தாள். அவர்கள், அவள் வரலாறு அறிந்து "நீ சின்னாளில் உன் கணவனைக்கண்டு பண்டுபோல் சுகமுறுவாய்" என்று வாழ்த்தித் தேற்றி அனுப்பினர்.

அதன்மேல் அவள், வழியில் ஓர் வணிகனைத் துணைக்கொண்டு, மெல்ல மெல்லச் சேதிநகரத்தை அடைந்தாள். அவளது அலங் கோலத்தைக்கண்ட சேதிராசன் தாய், அழைத்து ஊர் பேர் வினவ, அவள் "நான் தமயந்தியின் தோழி; நகரம் நீங்கிய தமயந் தியைத் தேடித்திரிகின்றேன்" என்றாள். அரசன் தாய் "நீ தமயந் தியைக் காணும் அளவும் இங்கிருப்பாய்" என்றனள். அவளும் அதற்கு உடன்பட்டு அங்கிருந்தாள். இஃது இங்ஙனமாக, நளன் தமயந்தியை விட்டுப் பிரிந்துபோகையில் காட்டுத்தீயில் அகப் பட்டு வருந்திய நாகம் ஒன்று "ஓ அரசனே, என்னைக் காப்பாற்று" என்றது. நளன் 'அஞ்சல்' என்று சொல்லி அணுகி, முன் அக்கினி கொடுத்த வரபலத்தால் தீயினுள் சென்று, பாம்பை எடுத்துவந்து வெளியில் விட்டான். உடனே நாகம் நளனைக் கடித்தது. நளன் விஷத்தின் கொடுமையால் வேற்றுரு அடைந்தான்.

நாகம் கூறுவது.

"கருணை செய்தெனைப் புரந்தநிற் கடித்தது முன்னை
உருவு கண்ணுறில் ஒன்னலர் செகுப்பர்என் பதனால்,
பொருவி லோய்! இனி வாகுகன் எனும்பெயர் புனையா
இருது பன்னன்வாழ் அயோத்திமா நகரின்வ குதியால். 41

"ஏந்தல்! ஏகி அம் மன்னவன் சூதனாய் அமைந்து,
கூந்தன் மாவுளம் தெரிதரு விஞ்சைநீ கொடுக்கின்,
ஆய்ந்த சூதுவெல் விஞ்சைநின் பால்அவன் அளிக்கும்
சாந்த மார்பினள் தமயந்தி தன்னொடும் சார்வாய். 42

"பின்னர் மன்ன! நின் பெருநிலக் கிழமையும் பெறுதி.
முன்னை மாண்உரு எளிதினிற் பெற்றிட (எ)ன்னின்,
இன்ன பூந்துகில் புனைதி' என்(று) இருதுகில் அளித்துத்
தன்னுருக்கொடு போயது தழல்விழிப் பாந்தள். 43

அதன் பின் நாகம் கூறியவாறே நளன், அயோத்தியை அடைந்து இருதுபன்ன ராஜனிடம் தேர்ப்பாகனாய் அமர்ந்திருந்தான்.

கலிநீங்குதல்.

காடு சென்ற தமயந்தியையும், நளனையும் தேடும்படி தமயந்தி தந்தை வீமராஜன் சில பிராமணர்களை நாற்றிசைக்கும் அனுப்பினான். அவர்களுள் சுவேதன் என்பவன் தமயந்தியைச் சேதி நகரத்தில் அவளது முகத்திலுள்ள மறுவின் குறியால் தெரிந்து, சேதியரசன் தாயிடம் உணர்த்த, அவளும் தான் தமயந்திக்குச் சிற்றன்னை என்பதை விளக்கித் தமயந்தியின் துயருக்கிரங்கினாள். அப்பால் தமயந்தி, தன் மக்களைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று விடைகேட்க, அரசியும் அவளைச் சிவிகையிலேற்றிக் குண்டினபுரத்துக்கனுப்பினாள். வீமன் தன் குமாரத்தியைக் கண்டு மகிழ்ந்து சுவேதனுக்குச் சிறந்த பரிசில் கொடுத்தான்.

மக்களைப் பார்த்து நெஞ்சம் நெக்குருகி வாடுகின்ற தமயந்தியைக் கண்டு பொறாமல், அவளது தாய், நளனைத் தேடி அறியுமாறு பல தூதர்களை அனுப்ப வீமராசனை வேண்டினாள். அவனும் அப்படியே அனுப்ப, தூதர்களில் ஒருவன் மீண்டுவந்து "அயோத்தியில் மனைவியைப் பிரிந்து வருந்திப் புலம்பும் ஒருவனைக் கண்டேன்; அவன் இருதுபன்ன மன்னனிடம் தேர்ப்பாகனாயிருக்கின்றான்; அவன் நெருப்பில்லாமலே சோறு சமைக்கின்றான்; அவன் பெயர் வாகுகனாம்" என்று தமயந்தியிடம் தெரிவித்தான். தமயந்தி கேட்டுப் பிராமணனைப் பார்த்து மீண்டும் நீ இருதுபன்னனிடம் போய்,

"நாட்டம் மூன்றுடை நாயகன் வரத்தினால் நங்கை
மீட்டும் கன்னிகை ஆயினள்; சுயவரம் விழைந்தாள்;
கேட்டு மாநிலக் கிழவரும் அவ்வழி இறுத்தார்;
பூட்டு வார்சிலை மன்னநீ, போதியேல் போவாய். 44

"நாளை நன்மணம் புணர்வது நிடதநா டளிக்கும்
காளை ஆருயிர் உளன்கொலோ? கழிந்தனன் கொல்லோ?
ஆளி மொய்ம்பினாய் என்றுநீ அறை"கென அறைந்தாள்,
வாளை வென்றரி பரந்துமை தோய்ந்தகண் மடவாள். 45

பிராமணன் போய் அவ்விதமே இருதுபன்னனுக்குத் தெரிவிக்க அவன் வாகுகனை அழைத்து, "நாளைப் பொழுதில் தமயந்தி சுயம்வரமாம், அங்கு நாம் செல்ல நீவிரைவாகத் தேர்செலுத்தவேண்டும்" என்று கட்டளையிட்டான்.

கேட்ட வாகுகன் "கிளியென மிழற்றுதீங் கிளவி,
காட்டில் நீத்தது நினைந்தன ளாயினும், கற்பு
நாட்டு கின்றவள் இத்திறம் புரியுமோ? நம்மைக்
கூட்டுதற்கிஃ திழைத்தன ளாம்" எனக் குறித்தான். 46

வாகுகன் தேரைச் சித்தம் பண்ணி விரைவாகச் செலுத்தினன்; அத்திறத்தைக்கண்டு,

'கூந்தல் மாவுளம் அறிதலின் சாலிகோத் திரனோ?
ஆய்ந்த கேள்வியின் மாதலி யோ? அன்றி நளனும்
ஏந்தல் வேற்றுரு எடுத்தன னோ?" என எண்ணி
வேந்தர் வேந்தனும் மணிமுடி துளக்கினன் வியந்தான். 47

முத்த வெண்குடை வேந்தர்கோன், முழவுறழ் தடந்தோள்
உத்த ரீயம்அந் நெறியிடை வீழ்ந்தனும் உணர்ந்து,
"தத்து வாம்பரி நிறுவிஅத் துகில்தரு" கென்னப்
"பத்து யோசனை கடந்தது தேர்" எனப் பகர்ந்தான். 48

சிலகாதம் சென்றபின் வழியில் ஒரு தான்றிமரத்தைக் கண்டான் இருதுபன்னன்.

தான்றி மாமரம் தோன்றலும் தேரினைத் தகைத்துத்,
"தோன்றும் இம்மரத் திலைகளும் தொக்கமென் பழமும்
மூன்று கோடியே முப்பதிற் றிரண்'டென மொழிய,
ஆன்ற கேள்வியோன் எண்ணிஅற் றும்என வியந்தான். 49

[நளனும் வாகுகன் கூறல்.]

"இனைய விஞ்சைமற் றெனக்குநீ அளித்தனை யென்னில்,
துனைவ யப்பரி உளமுணர் விஞ்சையான் சொல்வன்,
வனைபொ லன்கழல் மணிமுடி மன்ன," என் றுரைப்ப,
அனைய விஞ்சையை வாகுகற் களித்தனன் அன்றே. 50

[கலி நளனை விட்டு நீங்குதல்.]

இருது பன்னன் அவ் விஞ்சையை வாகுகற் கீய,
மருவி நின்றவன் கலிதனைத் தேகிவா ளரவம்
எரிசெய் வெவ்விடம் கான்றலின் இதயம்நெக் குருகி
வெருவி வாய்விடா விடத்தினை உமிழ்ந்தனன் அன்றே. 51

நளன் கலியைச் சபிக்கக்கருத கலி இரங்கிவேண்டுதல்.

தணந்த வெந்திறல் கலியனைச் சபிக்குவன் என்னாக்
கணங்கொள் வண்டிமிர் தாரினான் உளத்திடைக் கருதல்
உணர்ந்த வெங்கலி, "தமயந்தி உரைத்தசா பத்தால்
அணங்க ராஉமிழ் விடத்தினால் இன்றள வயர்ந்தேன். 52

இழைத்த தீவினை தணந்தனன்; இன்றுதொட் டுன்பேர்
வழுத்தி னோரையும் மருவலன், மன்ன," என் றேத்த
அழற் கொடுஞ்சினம் தணிந்தனன், அடல்வேல் அரசன்.
குழைத்த தான்றியில் ஏறினன் கொடியவெங் கலியே. 53

நளன் தமயந்தியைக் கண்டது.

அப்பால் தேர் குண்டின புரம் குறுகியது.

சில்லி யந்தடந் தேர்வரு கம்பலை கேளா,
'ஒல்லை யித்திறம் தேர்விட நளன்அலா தொருவர்
வல்ல ரோ?' என மனத்திடை எண்ணிமற் றினையோன்
அல்ல னேல்உயிர் துறப்பனென் றுன்னினள் அணங்கே.

தன்னைவந்து கண்ட இருதுபன்னனை வீமராசன் "வந்தகாரியம் என்னை" என்று வினவ, 'உன்னைக் காண்பதே' என்று சொல்லி, இருதுபன்னன் தனக்கு அமைத்த விடுதியிற் சென்று, 'சுயவரம் இல்லைபோலும்; என்னகாரணம்' என ஐயுற்றிருந்தான்.

தமயந்தி தன் தோழியை அழைத்து "இப்போது வந்த தேரின் பாகன் நளனோ என்று தெரிந்துவா" என்று கட்டளையிட்டாள். அவள் அங்ஙனமே போய்ப் பலவாறு உசாவி, நளன்றானோ எனச் சோதித்துத் திரும்ப வந்து 'உருவளவில் வேறு; மற்றெல்லாம் நளனை போல்கின்றான்' என்று சொன்னாள். அதன்மேல் தமயந்தி, மக்களை அப்பாகனிடம் அனுப்பினாள்.

அடைந்த மக்களைக் காண்டலும் அழலிடு மெழுகின்
உடைந்த துள்ளம்; நீர் ஊற்றிருந் தொழுகின நெடுங்கண்
தொடர்ந்த மும்மலம் முருக்கிவெம் பவக்கடல் தொலையக்
கடந்து ளோர்களும் கடப்பரோ? மக்கள்மேற் காதல். 55

இவ்வாறு நளன், மக்களைக்கண்டு மனமுருகிய செய்தியைத் தோழியால் அறிந்த தமயந்தி, பாகன் தன் கணவனே என நிச்சயித்துத் தாய்தந்தையரிடம் அதனைத் தெரிவித்தாள். வீமராசனது கட்டளையால் ஒருதோழி போய்ப் பாகனை அழைத்து வந்தாள். தமயந்தி "காட்டில் மனைவியை மனமொப்பி நள்ளிருளில் விட்டுப் பிரிபவர் நளனன்றி உலகில் ஒருவர் உளரோ!" என்றாள். வாகுகன், "கலியின் வசத்தனாயிருக்கையில் நளன் உன்னை விட்டுப் பிரிந்தான் கலி அவனைவிட்டு நீங்கியபின் உன்னை எண்ணி நண்ணிவந்தான். நீ இரண்டாம் சுயவரம் விரும்பியது எது

பற்றி?" என்றான். தமயந்தி, "நளன் அயோத்தியில் இருப்பதை அறிந்து அவன் விரைவில் என்னிடம் வருவது கருதியே இந்த உபாயத்தைக் கடைப்பிடித்தேன். இதனை வேறாகக் கருதி, சந்தேகிக்க வேண்டா. உனது பழைய உருவத்தைக் காட்டுக', என்று வேண்டினாள். நளன், நாகம் கொடுத்த வஸ்திரங்களை உடுக்கவும் முன்னைய உருவம் அடைந்து விளங்கினான். இவற்றைக் கேள்வியுற்று வீமராசன் வந்து நளனைப் பார்த்தான்.

அன்ன காலையில் அகலிரு விசும்பிலோர் வாணி
"மன்ன கேட்டி, இம் மடவரல் தன்னைமுன் வாண்டும்
இன்ன வின்றியாம் அளித்தனம்; சுயம்வர மென்று
உன்னை இவ்வுழிக் கூட்டுதற்(கு) ஒண்டொடி இழைத்தாள்.

"வடபுலத்தினில் நோக்குநர் மாசற விளங்கும்
கடவுள் மீனினும் தொழுதகு கற்பினுக் கரசாம்
கொடி மருங்குலை ஐயுறு தரு"வெனக் கூர்வேல்
நிடதர் கோமகன் மகிழ்வுற நிகழ்ந்ததை யன்றே. 57

தமர வேலையின் அந்தர துந்துபி தழங்க,
அமரர் யாவரும் பூமழை பொழிந்துநின் றார்த்தார்.
உமிழ் செழுங்கதிர் மணிமுடி வீமனும் உவந்தான்.
குமரன் அன்னவன் கோல்வளைத் தோளியை அடைந்தான்.

மண் களித்தது. மாதிரம் களித்தன. மலர்மேல்
பெண் களித்தனள். போறம் களித்தன. கண்டோர்
கண் களித்தன. களித்தன, கலைவலோர் நெஞ்சம்.
விண் களித்தன. களித்தது, வீமன்மா நகரம். 59

அப்பால் வாகுகனாயிருந்தவன் நளன் என்பதை அறிந்த இருதுபன்னன் "உன்னை அறியாமல் யான் செய் தவறுகளைப் பொறுத்தருள்க" என்று தொழுதான். நளன் அவனைத் தழுவி இன்சொற்கூறி விடை கொடுத்தான்.

அதன் பின் நளன் ஒருமாத காலம் குண்டினபுரத்தில் உறைந்து, பின்பு மாமனான வீமனோடு ஆலோசனை செய்து, படைகளை ஆயத்தம்பண்ணிக் கூட்டிக்கொண்டு நிடத நாடு சென்று, நகரத்தின் புறத்தில் தங்கி, புட்கரனுக்கு "போர் செய்வதாயின் செய்க. இன்றேல் சூதாட வரினும் வருக" என்று தூது போக்கினன். புட்கரன் சூதாட இசைந்து ஆடித் தோல்வியுற்றான். நளன் அவனை அவன் நாட்டுக்கனுப்பிவிட்டு, சோதிடர் சொல்லிய நல்லோரையில் நகர் புகுந்தான். அப்பால் குண்டினபுரத்திலிருந்து தமயந்தியையும் மக்களையும் வரும்படி செய்து பண்டு போலவே

ஆழி சூழ்புவி முழுவதும் ஆழியொன் றுருட்டி
வாழி நல்லறம் புரிந்தரு மகம்பல ஆற்றிச்
சூழி மால்வரை பிடருறு சுமையொழித் தாறப்
பாழி யம்புயத் துலகெலாம் பரித்தினி திருந்தான். 60

3. அரிச்சந்திர புராணம்.

இப்புராணத்தை இயற்றியவர் வீரகவிராயர். இவரது பிறப்பிடம் விசுவநல்லூர் என்பது. இவ்வூர் இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ளது. இவர் கம்மியர் குலத்தினர். வடமொழியில் பல கவிகளால் வகுத்துரைத்த அரிச்சந்திர கதைகளையும், தமிழில் வழங்கியிருந்த அரிச்சந்திர வெண்பாவையும் முதனூலாகக்கொண்டு விருத்தப் பாக்களால் இப்புராணத்தை இயற்றியுள்ளார். இப்புராணம் கி. பி. 1524-ம் வருஷத்தில் திருப்புல்லாணி யென்னும் திருப்பதியில் திருமால் சந்நிதியிலுள்ள சக்கர தீர்த்தக்கரை மண்டபத்தில் அரங்கேறிய தென்று இப் புராணப் பாயிரச் செய்யுளால் தெரிகிறது. இவரது வாக்கு வெண்மையும் வன்மையுமின்றிச் செம்பாகமானது.

கதைத் தொடர்ச்சி.

தேவேந்திரனது சபையில் வசிட்டர் அரிச்சந்திரனைச் சத்திய சீலன் என்று சிறப்பித்துக் கூறியதை மறுத்து, அவனைப் பொய்ய னாக்கிவிடுவதாகச் சபதம் செய்த விஸ்வாமித்திரர், அயோத்திமா நகரத்துக்கு வந்து, அரிச்சந்திரனிடம் முதலில் ஒருவராலும் கொடுக்கமுடியாத அளவினதான பெருஞ் செல்வத்தை யாகத் துக்கு வேண்டுமென்று கேட்டார். அரிச்சந்திரன் அப்படியே தரு வதாக உடன்பட, முனிவர் பின்பு வாங்கிக்கொள்வதாகச் சொல் லிப்போய், பின்னர் வேறு வழியிலே அரிச்சந்திரனை இம்சித் துக் குணக்கேடனாக்கக் கருதிப் பல மிருகங்களைப் படைத்து, அவனது நாட்டை அழிக்கும்படி ஏவினார். அரிச்சந்திரன் அவற் றை வேட்டையாடிக் கொன்றுவிட்டுக் காட்டில் ஓரிடத்திருந் தான். அப்போது முனிவர் இரண்டு புலைப் பெண்களைப் படைத் தனுப்பித் தங்களை மணந்துகொள்ளும்படி கேட்கச் செய்தார். அவர்களும் போய் அரசனுக்கு இசைப்பாடல்களால் மகிழ்ச்சியை விளைத்துத் தங்களை மணக்கும்படி வேண்டினர். அரசன் அதனை மறுத்து அவர்களைத் துரத்திவிட்டான். பின்பு விசுவாமித்திரர் கோபித்தெழுந்து வந்து அப் பெண்களை அடித்துத் துரத்திய குற்றத்தை இப் பெண்களை மணந்தால் நான் பொறுப்பேன், இல் லாவிடில் சபிப்பேன் எனப் பலவாறு சொல்லிப் பயமுறுத்தினார். அரசன் "நான் செய்த குற்றத்துக்குப் பரிகாரமாகக் கண்ணை வேண்டினும் தருவேன்; காக்கின்ற மண்ணை வேண்டினும் தரு வேன்; இப் பெண்ணை வேண்டேன்" என்றான். அதுவே போது மென்று முனிவர் அரிச்சந்திரன் நாடனைத்தையும் எல்லாச் செல் வங்களுடன் 'தாரைவார்த்துக் கொடு' என்று கேட்டுப் பெற்றுக் கொண்டார். பின்பு அரசனிடம் பொருளில்லை யென்பதைத் தெரிந் தும் முன்பு யாகத்துக்குத் தருவதாக வாக்களித்த பொன்னைத் தரும்படி கேட்டார். அரிச்சந்திரன் பொன்கொடுக்க வழியின்றி விசுவாமித்திரரிடம் அவரது தண்டலாளாகிய சுக்கிரரிடம் இத் தனை நாளைக்குள் பொன்னைத் தந்துவிடுவதாக அவதி கேட்டுக் கொண்டு காசிமா நகரம் சென்று, மனைவியையும் மகனையும்

விலைகூறி ஓர் மறையவரிடம் விற்று முனிவர்க்குச் சேரவேண்டிய பொன்னைக் கொடுத்தான். சுக்கிரர் தமக்குக் கூடவந்த கூலிப் பொருள் வேண்டுமென்று கேட்க அரசன் தன்னைச் சத்தியகீர்த்தியைக்கொண்டு பறையனுக்கு விற்கும்படி செய்து வேண்டிய படியே பொருளை ஈந்து தான் பறையனுக்கு அடிமையாய் மயானம் காக்கச் சென்றான்.

சந்திரமதியும் மகனும் மறையவன் வீட்டிலிருந்த கஷ்டத்தோடு அடிமை வேலை செய்யலாயினர்.

தேவதாசன் பாம்பு கடித்திறத்தல்.

வல்லியும் மகனும் அந்த மறையவன் மனையில் சேர்ந்து
சொல்லிய பணிக ளெல்லாம் சோர்வறச் செய்து, பின்னும்
எல்லிஓர் சாம மென்ன எழுந்திருந் தேவல் முற்றி,
அல்இரு சாமம் சென்றால் அளித்தகூழ் உண் டுறங்கி, 61

கையினில் உலக்கை பற்றிக், காந்தளின் உதிரம் பாய
மெய்யினில் வெயர்நீர் சிந்த விழியினில் அருவி பாய,
நெய்யினில் முடித்த கூந்தல் நெல்குத்தும் கொடுமைகாணு
மையினில் திகழ்வேற் கண்ணார் அரம்பையர் மறுகிச் சோர்ந்தார்.

புன்கணுற் றரம்பை மாதர் வருந்தவும், புந்தி செய்யா
வன்கணன் இரக்க மில்லான், மடித்தவாய் வெடித்த சொல்லான்
தன்கண் அன் பில்லான், பொல்லான், தறுகணன் விலைகொண் டான்
இன்கண் இல் லாதான் பாரி இவனிலும் கொடிய பாவி. [வோன்

அடியினால் அஞ்சி மைந்தன் அநந்தலைப் பயம் உணர்ந்து,
விடியுமுன் எழுந் திருந்து, விளைபுலம் களை பறித்துக்,
கடிவனத் தடகு கொய்து காட்டமும் சமிதை யும்பொன்
முடிபுனை தலையில் வைத்து முறைமுறை வருமந் நாளில். 64

ஒருநாள் தேவதாசன் சில பிள்ளைகளோடு காட்டிற்குச் சென்று விறகு தேடிக் கட்டிச் சுமந்துகொண்டு வரும்போது வழியில் ஓரிடத்தில் தர்ப்பைப்புல் அதிகமாயிருப்பதைக் கண்டு சுமையை ஆல

மர நிழலில் இறக்கி வைத்துவிட்டுத் தர்ப்பையைக் கொய்தான். தர்ப்பைப் புதர்க்குள் இருந்த நாகம் விஸ்வாமித்திரர் ஏவலால் சீறி எழுந்து கடித்தது. உடனே விஷம் தலைக்கேறி துள்ளித் துடித்து விழுந்து அவன் இறந்தான். மற்றப் பிள்ளைகளெல்லாம் தங்கள் சுமைகளோடு வீட்டுக்குத் திரும்பினார்கள். தன் மகன் வாராமையைக் கண்டு கேட்ட சந்திரமதி, மகன் பாம்பு கடித்திறந்ததை அறிந்து மூர்ச்சித்து விழுந்து, அப்பால் இறந்து கிடக்கும் இடத்தின் அடையாளத்தைக் கேட்டறிந்து, அழுகையை அடக்கி மறையவர் வீட்டினுள் சென்று, செய்யவேண்டிய வேலைகளையெல்லாம் செய்து முடித்துவிட்டுப் பிராமணனிடம் மகன் இறந்ததைத் தெரிவித்து, இறந்து கிடக்கும் இடத்துக்குப் போக உத்தரவு கேட்டாள். பிராமணன் "கோபித்து அவன் இறந்ததினால் எனக்குத்தானே பொருள் நஷ்டம். உனக்கென்ன? நீ போகவேண்டாம்" என்றான். சந்திரமதி "பெற்ற வயிறு பற்றி எரிகிறது; இறந்து கிடக்கும் மகனைத் தேடி எடுத்துத் தகனம் செய்துவிட்டுப் பொழுது விடியுமுன் வந்து விடுகிறேன்" என்று அவனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு பட்டணத்தைக் கடந்து சென்றாள்.

சந்திரமதி தேவதாசனைத் தகனம் செய்யப் போதல்.

பாவியேன் மகனே என்பள்;
பதைப்பள்; மென் முகத்தில் மோதித்
தாவியே விழுவள்; நின்று
தயங்கியே மயங்கி வீழ்வள்;
காவியங் கண்ணீர் பாயக்
கதறுவள்; பதறி யேங்கி
ஆவியைத் தேடித் தேடி
அலமரும் உடலம் ஒத்தாள். 65

ஓடினாள்; உள்ள மெல்லாம்
உருகினாள்; கருகி மேனி
வாடினாள்; விறகு வைத்த
வடத்தினுக் கருகே வந்தாள்;
நாடினாள்; கழுகும் பேயும்
நரிகளும் குறளும் துன்றிக்
கூடிய குழுவின் நாப்பண்
குமரனைச் சென்று கண்டாள். 66

கண்டனள் கதறி வீழ்ந்தாள்;
கழுகெலாம் இரியல் போக,
கொண்டதோர் மகவி னாசை
ஆவியைக் கொள்ளை கொள்ள,
முண்டகக் கரத்தால் ஏந்தி,
முருகனை மடிமேல் வைத்தே,
அண்டரும் மறுகி ஏங்க
வாய்திறந் தரற்ற லுற்றாள்:— 67

வேறு.

பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து
பசியால் அலைந்தும் உலவா,
அனியாய வெங்கண் அரவால் இறந்த
அதிபாவம் என்கொல்? அறியேன்
தனியே கிடந்து விடநோய் செறிந்து
தரைமீ துருண்ட மகனே!
இனியாரை நம்பி உயிர்வாழ்வம் என்றன்
இறையோனும் யானும்? அவமே. 68

"வானின் றிழிந்து சொரிகின்ற தாரை
மழைபோல வீழ விழிநீர்,
ஊனின்றி மேனி உதிரங்கள் சிந்த,
உயிரின்றி, வெம்பு தழலின்
மேனின்று வெந்த தளிர்போல் உயங்கி,
விதியாரை நொந்து தனியே
யானின் றிரங்க ஏதென்ப தில்லை
இதுவோஉன் நீதி மகனே! 69

"செங்கோல் அறத்தின் முறையே செலுத்து
திறலோன், எவர்க்கும் உரவோன்,
வெங்கோப யானை விறல்மன்னன் நம்மை
விடுவிக்க எண்ணி வருநாள்,
பங்கேரு கத்து மலர்போல் விளங்கு
வதனு! மகிழ்ந்து பரிவால்,
'எங்கே என் ஆசை மகன்?' என் றுரைக்கில்,
எதிர்ஏது சொல்வன்? மகனே! 70

"சீராள வாவி செறிநா டனைத்தும்
நிறைமா தவற்கு தவினும்,
பாராளும் நீர்மை தொடர்பற்ற தன்று
படியாளும் எந்தை முடியில்,
காராளர் ஏர்கள் கடவோசை ஓய்வில்
கன்னோசி நாட தனைமேல்
ஆராள வல்லர்? அவமே வனத்தில்
அரவால் இறந்த மகனே! 71

"நல்லோர் வருந்த முறையாம் அறங்கள்
நாலெட்டில் ஒன்று குறையேம்.
இல்லோரை அற்பம் இகழோம், இறக்கும்
இறையன்றி ஏற உகவேம்.
சொல்லோ மறுத்தும் உரையோம். உரைத்த
துறவோர்கள் புத்தி கடவேம்.
எல்லோர் தமக்கும் இனிதே விளைப்பம்.
ஏதாக வந்த திதுவே? 72

"கனமும் தருக்கள் குலமும் தரித்த
காரும், பெருத்த ஊரும்,
தினமும் சிறக்கும் முகமும், தரித்த
சிகையும் கிடக்கும் முறைகண்(டு)
இனமும் தரித்த துயிரான பாவி
இறவாமல். என்றன் மகனே!
மனமும் தரிப்ப திலைநொந்து பெற்ற
வயிறும் தரிப்ப திலையே. 73

"வடியேறு வெற்றி நெடுவேல் மலர்க்கை
மகனோ டிறந்து மடியாக்
கொடியேன் முகத்தில் விழியார், முனிக்கு
வளநா டளித்த கொடையார்.
இடியே றடர்த்த மரமாகி மண்ணி
னிடையே உழத்தல் அழகோ?
அடியேனை ஒக்க முடியா திருத்தல்
அநியாயம், மிக்க யமனே!" 74

இவ்வாறு சந்திரமதி துக்கித்துப் பிள்ளையை, தோளின்மேல் போட்டுக்கொண்டு மயானம் நோக்கிச் சென்றாள். பலவிதச் சங்

தத்தால் மயானம் உள்ள இடத்தை அறிந்து அங்கே சென்று பிள்ளையை ஓரிடத்தில் வைத்துவிட்டு, குறைக்கொள்ளிக் கட்டைகளையும் மூட்டைகளையும் பொறுக்கிச் சிதை செய்து பிள்ளையை அதன் மேல் வைத்து நெருப்பை மூளப்பண்ணி எரித்தாள். நெருப்பின் வெளிச்சத்தினாலே பிணஞ்சுடுதலை அரிச்சந்திரன் பார்த்தான்.

கொடுக்கவேண்டிய பொருளைக் கொடாமல் தகனம் செய்யலாகாதென்று அரிச்சந்திரன் தடுத்தல்.

அரவுகடித் தரசிளங்கோ இறந்தா னென்ப
தறியாமல், வெருண்டிறைவன் "ஆரே யிந்த
இரவுதனில் பிணஞ்சுடுவார் அறிவோம்" என்னா
எழுந்திருந்து விரைந்தோடி, "ஏடி மூடீ,
தாவுரிய பொருள்எனக்குத் தாரா தேநீ
தனியேஇப் பனியிருளில் சவங்கொணர்ந்து
காவின் அழல் சுடுவதனைக் கடைவோ?" என்னாக்
கால்வீசிக் கான்முளையை எடுத்தெறிந்தான்.

எறிந்திடலும் உயிரேங்க ஏங்கி, வேனில்
இடிவிழுந்தால் படிமிசையே அடிசாய்ந் தாடி
முறிந்துவிழும் மரம்போல்சென் றடிமேல் வீழ்ந்து
மொழிகுழறி விழியருவி சொரிய, வல்லி,
"அறிந்துமிலன் இவ்வூரில் வழங்கும் நீதி;
அருவினையேன் ஆருமிலி; அறவும் பாவி;
மறிந்தமகன் தனைச்சுடநான் வந்தேன், ஐயா,
வறியேற்குப்பொருளுளவோ வழங்க?" என்றாள்.

"பொருளுடையேன் தமருடையே னானால் இந்தப்
புத்திரனைத் தோள்மீது வைத்துப் போந்திவ்
இருளிடையில் சுடலையில்வந் தெய்து வேனோ?
எரிந்தகுறைக் கட்டையினில் ஏற்று வேனோ?

தெருளுடையாய், அருளுடையாய், வினையேன் ஈன்ற
சிறுவனையான் சுடக்கருணை செய்யாய், தேயா
அருளுடையாய், ஆதாரம் அற்றேற்(கு) உன்றன்
அடியிணையே தஞ்சம்'' என அலறி வீழ்ந்தாள். 77

அவ்வளவில் அரிச்சந்திரன்,

"பொன் அனையாய், விடுவிடுயான் புலைய னென்னில்
புலையனும் அல்லேன்; புலையற் கடிமை கண்டாய்
என் அடி நீ தீண்டுவது தகாது, நீதான்;
இப்பொருட்கியான் உரியனலேன் என்னை ஆள்வோன்
சொன்னபணம் கால்உண்டு; கொள்ளியாடைத்
துண்டமும்ஒன் றுண்டு; தந்து சுடுதி அன்பால்
அன்னவன்தான் படியாக எனக்குத் தந்த
வாய்க்கரிசி யான் அளிப்பேன்; அறிதி'' என்றான். 78

அதற்குச் சந்திரமதி

"துஞ்சியமைந் தனை எடுத்துச் சுமந்து போந்து
சுடுவார்அற் றிடுகாட்டில் தோள்மேல் ஏற்றிப்
பஞ்சிபடும் பாடுபடும் பாவி யேற்குப்
பணம்ஏது? கொள்ளிமுறிப் பாதிஏது?
நெஞ்சுதளர்ந் தருவினையேன் வருந்தக் கண்டும்
நீ இரங்காய்!'' என இரங்கி நிற்கும் காலை,
வஞ்சிதிரு மணியிடற்றில் வயங்கா நின்ற
மங்கலநாண் கண்டிறைவன் மறித்தும் சொல்வான். 79

"நல்லைநல்லை அறச்சமர்த்தி நீயே கண்டேன்,
நன்னுதலார் அனைவரினும்; இந்த்ர சாலம்
வல்லைவல்லை விறகுகளும் களவே! செம்பொன்
மங்கலநாண் உன்கழுத்தில் இருக்க, ஏதும்

இல்லையெனச் சொல்லுவது சற்றும் ஏலா(து)
இதனையெனக் கீவாய்'' என் றியம்ப, வேடர்
பல்லம்உயிர் நிலைவாயில் பட்ட மான்போல்
பதைபதைத்துப் பைந்தொடியாள் பதறி வீழ்ந்தாள்

வீழ்ந்தவள் "அரிச்சந்திரனுக்கன்றிப் பிறர் எவர்க்கும் பார்க்கொண்ணாத என் தாலியைப் புலையன் காணவும் ஆயிற்றோ? என்னை பெற எந்தைக்கு ஈசன் வரமளித்த நாளில் கூறிய திவ்வியமொழியும் பொய்யானதோ" என்று ஏங்கி,

"அற்புக் காழி அனான் அரிச் சந்திரன்
விற்பப் போயின மேன்மைக் குலத்தொடும்
பொற்புப் போம்; பொறை போம்; நிறை போம்என்றக்
கற்புப் போவதென்?'' என்று கலங்கினாள். 8

அப்போது அரிச்சந்திரன் அவள்தன் மனைவியென்றும் இறந்தவன் தன் மகனென்றும் கண்டறிந்து துக்கித்து மயங்கி,

"ஒன்றி லாத உயிரினை ஓம்பியே
பொன்றி லாது புலையனுக் காட்பட்டான்
வென்றிவேந்(து); இனி மீட்கத் தகுவனோ
என்றி றந்தனை யோ!''என் றியம்பினான். 8

இவ்வாறு துக்கித்ததைக் கேட்டுச் சந்திரமதி, 'இவன் தன் நாயகனே' என்று கருதி அடிவணங்கி அழுது,

"தீமை செய்த துனக்கும் சிறுவற்கும்
வாய்மை தான், அது மண்ணுக்கும் விண்ணுக்கும்
தூய்மை யேஇனி என்று துணிந்தனன்;
நீமயங்கல் அறத்தை நினை'' என்றாள். 8

பின்பு அரிச்சந்திரன், "என்னை அடிமையாகக் கொண்டவனுக்குக் காற்பணமும் முழத்துண்டும் சேரவேண்டும்; எனக்குப் படியாக ஏற்பட்ட வாய்க்கரிசியைக் கொடுக்க வேண்டாம்

அடிமையாகக் கொண்டவனுக்கு உரியவற்றை நான் வாங்காவிட்டால் நீதி நெறி தவறியதாகும். ஆகையால் உன்னை அடிமையாக வாங்கிய பார்ப்பானிடம் சொல்லி இவைகளை வாங்கி வந்து கொடுத்துவிட்டுப் பின்பு மகனைத் தகனம் செய்க" என்று சொன்னான். அப்படியே சந்திரமதி பிள்ளையைச் சுடுகாட்டில் வைத்து விட்டுப்போனாள்.

போகிறவழியில், சந்திரமதி கொலைத் தண்டனை பெறுதல்.

போகும்போது காசிராஜன் பிள்ளையைத் திருடர்கள் கொன்று தெருவிலே போட்டிருந்தனர். சந்திரமதி அப்பிள்ளையைத் தன் பிள்ளை தானோ? என்று உற்று நோக்கினாள். இராஜ சேவகர்கள் அவளை பிள்ளையைக் கொன்றவள் என்று பிடித்துக் கொண்டுபோய் அரசன் சமூகத்தில் விட்டனர். அவன் வீரவாகுவை அழைத்துக் கொலை செய்யும்படி கட்டளையிட்டான். அவன் சந்திரமதியைக் கட்டிக்கொண்டுபோய் அரிச்சந்திரனை அழைத்து அவன் கையில் ஒப்பித்து,

"பிள்ளை யைக்காடு போய்உடல்
பிளந்துயிர் தொலைத்த
கள்ளி யைக்கொலைக் களத்திடைக்
கொண்டுபோய்க் கவந்தம்,
துள்ளி யோடநீ வெட்"டெனத்
தோகையைக் கொடுத்து,
வள்ளி யோன்கையில் தன்கையின்
வாளையும் கொடுத்தான். 84

வாளை வாங்கிக்கொண்டு அப்பெண்ணையும் கூட்டிக் கொண்டு வந்த அரிச்சந்திரன் அவளைத் தன் மனைவியே என்று அறிந்தான். சந்திரமதியும் அவனை நாயகனே என்றறிந்தாள். அரிச்சந்திரன் இதுவும் கடவுளுக்குச் சம்மதந் தானோ? என்று நொந்து கூறினான். சந்திரமதி "தருமத்தைக் கருதிப் பாவியாகிய என் விஷயத்தில்

இரங்கவேண்டா; ஆணைப்படி செய்க" என்றான். அப்போது சத்திய கீர்த்தியும் வந்து நடந்ததையறிந்து உயிரும் உடலும் பதைத்து உடன் சென்றனன்.

அரிச்சந்திரன் இடக்கையில் சந்திரமதியைக் கட்டிய பாசத்தையும் கத்தியையும் பிடித்துக் கொண்டு, வலக்கைக் கோலால் சந்திரமதியைத் தள்ளிக் கொண்டு வீதியில் வருவதைக் கண்ட நகரத்து மைந்தரும், மகளிரும் தம்முள் பலவாறு கூறுவாராயினர்:—

"வேலைப் பழித்தவிழி யானைச் சினத்தரசன்
வெட்டென் றுரைத்த பொழுதே
சாலச் சவங்கள்சுடு கோலின் கடிந்துநனி
தள்ளிக் கொணர்ந்த புலையன்
சீலத்தை யும்கனக மார்பத்தை யும்குலவு
திண்டோளை யும்கண்டிடின்,
மால்ஒப்பன், அன்றிமயி லோன்ஒப்பன்; அல்லதொரு
மதனொப்பன்" என்றுமருள்வார். ௭

"எங்கோ மகன்கதற உயிருண்ட கொலைகாரி
இவளோ? எனத்தொடருவார்,
"வெங்கோப வன்கரியின் முன்போடும்" என்றுசிலர்
வெருள்வார்; நெருங்கி அடர்வார்.
"பங்கோ பறைக்கிவளை வதைசெய்தல்? நம்படை
படாதோ?" எனப்பதறுவார்.
"செங்கோல் முறைக்குவழு, நீர்கொல்வ" தென்றுசில
செயலால் விலக்கிவருவார்.

"வல்லோர்கள் வல்லபடி சொல்வார்கள் மன்னும்இசை
மருமானை இவள்கொன்றவா
றில்லாத போதிவளை வறிதே வதைத்தபழி
யார்பால" தென்றுபகர்வார்

"கொல்லாது வன்சிறையில் வைத்தே, விளங்கின் இவள்
கொலைதான், வதைத்திடுதலாம்.
அல்லாது விட்டிடலும் அறமாகும்" என்ன அவர்
அவரோ டுரைத்துழலுவார். 87

அரிச்சந்திரன் சந்திரமதியைக் கட்டியபடியே நகரத்து மதிலுக்கு வெளியே கொண்டுவந்தான்.

அப்போது வசிட்டர், தேவேந்திரனை நோக்கி "விசுவாமித்திரர் சபதம் செய்ததுமுதல் அரிச்சந்திரனைக் குற்றமுள்ளவனாக ஆக்குதற்கு உண்டாக்கின இடையூறுகள், இன்று முடிவாகப் போகிறது; நாம் போய்ப் பார்க்கலாம்" என்றனர். இந்திரன், நாரதர் முதலான ரிஷிகணங்களுடன் ஆகாயத்தில் தோன்றாமல் நின்றான்.

அச்சமயத்தில் விசுவாமித்திரர் அதிவேகமாக அரிச்சந்திரனிடம் வந்து "எனக்கு நீ முன்னே கொடுத்த நாட்டைக் 'கொடுத்திலேன்' என்று ஒரு பொய் சொன்னால் உங்கள் துன்பமெல்லாம் இன்றோடு ஒழியும்" என்றார். அப்போது தம்பதிகளான அரிச்சந்திரனும் சந்திரமதியும்,

"சேய்மை அண்மையில் உயிர்க்கொரு துணையெனச் சிறந்த
வாய்மை யால்அகம் தூய்மையாம்; மற்றில்அம் புயத்தைத்
தூய்மை செய்வது நீர்அலால் சொல்லின்வே றுளதோ?
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பெமக் கறிதி.

"புலைய னும்விரும் பாதஇப் புன்புலால் யாக்கை
நிலைய தைமருண்(டு) உயிரினும் நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம்
கலையு ணர்ந்தநீ எமக்கிது கழறுவ தழகோ? 89

"பதி இழந்தனம்; பாலனை இழந்தனம்; படைத்த
நிதி இழந்தனம்; இனிநமக் குளதென நினைக்கும்
கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலேம்" என்றார்
மதி இழந்துதன் வாய்இழந் தருந்தவன் மறைந்தான். 90

விசுவாமித்திரர் மிகுந்த வெட்கமும் துக்கமும் உடையவராய்த் தேவர் கூட்டத்துக்குள் போயிருந்தார். அரிச்சந்திரன் சந்திரமதியை மயானத்திடம் கொண்டுபோய்,

"வழுக்கின் என்றும்நீ வழிபடு தெய்வத்தை வணங்கிக்
கிழக்கு நோக்கிஈண் டிரு" எனக், கிளிமொழி மடந்தை,
பழக்க மான அக் கணவனைப் பாவி, "என் ஆவி
இழக்கற் கஞ்சிநீ அறம்வழு வேல்" என இயம்பும்:— 91

"பொருந்தும் நீத்தத்தில் புற்புத வாழ்வைநீ மெய்யென்
றருந்த வத்தையும் அறத்தையும் மெய்யையும் விடுத்து
வருந்தல், மன்னவ, வழிவழிசிறக்" கென வாழ்த்தி
இருந்த பின்சுடர் வாட்படை வலக்கையின் எடுத்தான். 92

"உலகு யிர்க்கெலாம் பசுபதி ஒருமுத லாயின்,
அலகில் சீருடை அவன்மொழி மறையெனின், அதன்கண்
இலக றம்பல வற்றினும் வாய்மைஈ டிலதேல்,
விலகு றுமல்அவ் வாய்மையை விரதமாக் கொளின்யான். 93

"நெறியின் அன்னஎன் றனைவிடா நிறைஇவட் குளதேல்,
இறுதி யின்மையைப் பெறுகஇல் லெனில்இவள் இறுதி
பெறுக" என்றுவாள் வீசினன் பேதைதன் கழுத்தில்
மறும ணத்திடு மாலையாய் வீழ்ந்ததவ் வடிவாள். 94

அச்சமயத்தில் சந்திரமதி புடமிட்டெடுத்த பொன்போல் மாற்றுயர்ந்து விளங்கினாள். அரிச்சந்திரன் கடைச்சல் பிடித்தெடுத்த மாணிக்கம்போல் விளங்கினான்.

உடனே இந்திராதி தேவர்களும் முனிவர்களும் பிரசன்னமானார்கள். அரிச்சந்திரன் அவர்களை வணங்கினான். முருகக்கடவுள் தேவதாசனை எழுப்பினார். விசுவாமித்திரர் தமது தோல்வியை ஒப்புக்கொண்டு சபதப்படி பாதித்தவத்தை அரிச்சந்திரனுக்கு ஈந்தார். பின்னர் தேவர்களும் முனிவர்களும் விசுவாமித்திருக்கு அளித்த நாட்டைத் திரும்பப் பெற்று ஆளும்படி அரிச்சந்திரனைப் பலவாறு வேண்ட அவன் அங்ஙனமே நாட்டை அரியாசனமேறி ஆண்டிருந்தனன்.

IV. இன்சுவைப் பகுதி.

1. இடையனும் தத்துவ சாஸ்திரியும்.

இப் பாட்டை இயற்றியோர் கா. ரா. நமச்சிவாய முதலியார் என்னும் புலவராவர். இவர் காவேரிப்பாக்கம் ராமசாமி முதலியார் என்பாருக்குப் புதல்வராய்ப் பிறந்து வளர்ந்து, தக்க பருவத்தில் திருமயிலை மஹாவித்வான் சண்முகம் பிள்ளை அவர்களிடம் தமிழ்க் கல்வி பயின்று புலமை நிரம்பியவர். இவர் தற்போது சென்னை மேரி அரசி கலாசாலையில் தலைமைத் தமிழாசிரியராய் உத்தியோகிக்கின்றவர். சென்னைச் சர்வகலாசாலைக் கல்விக் கழகத்திலும் ஹைகலாசாலைத் தமிழ்ப்பாட புத்தகக் கழகத்திலும் முறையே உறுப்பினராகவும், தலைவராகவும் விளங்குபவர். பழைய இலக்கண இலக்கியங்கள் சிலவற்றை அச்சிட்டு வெளிப்படுத்தியவர். தற்கால வித்தியாவிநோதிகட்கும், வித்தியார்த்திகட்கும் ஏற்ற உரை நடையும் பாட்டுக்களும் எழுதுவதிலும் யாப்பதிலும் வல்லுநர். தற்காலத்துத் தமிழ்மாணவர்களின் தமிழ்க்கல்வி வளர்த்துக்கு இவர் எழுதி வெளிப்படுத்துள்ள தமிழ்ப் புத்தகங்களே சிறந்த கருவியாய் விளங்குகின்றமையின் இவ்வாசிரியரது தமிழ்ப் பணி சாலவும் போற்றற்குரியதாம்.

1. பட்டணம் ஒன்றும் பக்கலில் இல்லாப்
பட்டிக் காட்டில் பட்டிகள் கட்டி (2)

ஆடு மேய்க்கும் அமைந்த வாழ்க்கையன்;
தேடும் பொருட்காச் சிந்தைகவ லாதோன்; (4)

தள்ளரும் முதுமையால் தளர்ந்த வுடலினன்;
வெள்ளிக் கம்பியா வெளுத்த மயிரினன்; (6)

மன்னிய இயற்கை வனப்பையே நாடித்
தன்னா ராய்ச்சியால் தழைத்த அறிவினன்; (8)

கோடை நாளில் கொடியவெய் யிலினும்
நாடும் மழையில் நடுக்குறு குளிரினும் (10)

ஆட்டு மந்தையை அன்புடன் காத்துக்
காட்டில் வசித்துக் காலங் கழிப்போன்;
அழுக்கா றொடுபே ராசையும் அற்றோன்;
வழுத்தகு குணங்கள் வாய்ந்த மேலோன்;
அவ்வக் காலத் தமைந்ததன் தொழிலை
செவ்விதாச் செய்யும் சிறந்த முறையினன்.

அதனால்,

இவனது கீர்த்தி எவ்வெவ் விடத்தும்
நவமுற விளங்கி நாளும் பெருகக்,
கேட்டவ ரெவரும் கிளர்ச்சியா லவனை
"நாட்டும் நற்குண நாயகன் இவனே
வாகனி" யென்ன வழுத்தினர்; அவர்கள்,
கரையும் உண்மையைக் 'காண்போ' மென்ன

ஒருவன்,

பாட சாலையில் பயின்ற கல்வியன்;
ஏடும் கையுமா இருந்துருப் போட்டே
இலக்கிய இலக்கண மென்னும் கடலைக்
கலக்கமில் லாமற் கடந்த கலைஞன்;
இடையன் இருந்த இடத்தை யணுகிக்
"கடையன் இவனும் கற்றதும் யாதோ?
வனத்தில் குடிலே வாசமாக் கொண்டனன்;
இனத்துப் புலவோர் எவருமிங் கிலரே.
எப்படி இவனுக் கெய்திடும் கல்வி;?
அப்படி இருப்பின் அறிவோம், அதனை;"

என்று நினைத்தவ் இடைய னிருக்கும்
குன்றிய அந்தக் குடிலிற் புகுந்தங்(கு) (34)

இன்புற இருந்த இடையனைக் கண்டு
சிந்தையிற் கொண்ட செருக்குடன் நின்று, (36)

"ஐயா! உம்மை அனைவரும் மதித்தே
'மெய்யா யுணர்ந்த மேதாவி' யென (38)

விளம்புகின் றனரே, வித்தை யனைத்தும்
களங்க மறநீர் கற்றது முண்டோ? (40)

ஓல்காப் புகழால் உயர்ந்து விளங்கும்
தொல்காப் பியத்தைத் தொட்டது முண்டோ? (42)

சங்கப் புலவோர் சாற்றிய நூற்றொகை
இங்கெத் தனையென எண்ணியது முண்டோ? (44)

பத்துப் பாட்டின் பகுதி யொன்றில்
பத்தடி யேனும் பார்த்தது முண்டோ? (46)

எட்டுத் தொகையா இயன்ற நூலின்
இட்ட மிதுவெனத் தேர்ந்தது முண்டோ? (48)

நாலடி யாரை நலமுறக் கற்றோர்
காலடி யேனும் கண்டிருப் பீரோ? (50)

திருக்குறள் என்னும் தெய்வத் தமிழைப்
பெருக்குறக் கற்ற பேறுமக் குண்டோ? (52)

சிந்தா மணியைச் சிந்தைசெய் தீரோ?
அந்நாள் தமிழர் அருஞ்செய லனைத்தும் (54)

செப்பமாய் விளக்கும் சிலப்பதி காரத்
திப்பிய நூலைத் திருப்பிய துண்டோ? (56)

மணிமே கலையாம் வண்டமிழ் நூலை
அணிபெறச் சற்றும் ஆய்ந்த துண்டோ?
நிகண்டெலாம் உமக்கு நெட்டுருத் தானோ?
புகன்ற பற்பல புராண மனைத்தும்
பாடங் கேட்டே படித்தது முண்டோ?
நாடு மவற்றின் நயமறிந் தீரோ?
சித்திர கவியின் சிறப்பறிந் தீரோ?
இத்திற மனைத்தும் எவரிடங் கற்றீர்?"
என்னக் கேட்டே இறுமாந் திருந்த
அன்னவன் தன்னை ஆட்டுக் குடையோன்,
அமைவுற நோக்கி ஆதர வோடும்
"உமக்கியான் கொண்ட உண்மை கூறுவேன்;
கேளு" மென்னக் கிளக்க லுற்றனன்:—
"நீளும் பெயருடன் சீர்வா சித்து
நாடுங் குருவை நண்ணி யென்றும்
ஏடுங் கையுமா யிருந்தும் அறியேன்;
கற்றோர் கடந்த காலடிச் சுவட்டைப்
பற்றி யொருகால் பார்த்தும் அறியேன்;
தேசசஞ் சாரம் செய்துமற் றங்கே
வாசஞ் செய்யும் மானிடர்க் குற்ற
தன்மையும், கொள்கையும், சாத்திர நிலையும்
இன்னவென் றுணர எண்ணியும் அறியேன்;
ஏனெனில்,
நானிலந் தன்னில் நண்ணிய உயிர்களுள்
மானிட னொருவனே வஞ்சக முள்ளோன்;

அறியா வெல்லாம் அறிந்தே னென்பான்;
உணரா வெல்லாம் உணர்ந்தே னென்பான்;
உடையி னொளியால் உரையின் பகட்டால்
அடையும் பொருளால் அதிகா ரத்தால்
முன்னுற வந்து முதலில் நின்று
மன்னுமூ தறிஞர் வழக்கையு மறுத்து
'அவரொன் னறிவார்? இவரொன் னறிவார்?
எவரொன் னறிவார் யானே யறிவேன்'
என்ன வுரைத்தே யிதயங் களிக்கும்
புன்மைக் கெல்லாம் புகலிட மாவர்;
'நெஞ்சை யொளித்தொரு வஞ்சகம் இல்'லெனும்
செஞ்சொ லிவர்பால் சேரா தொழிந்தது;

அனுதல்,

அந்தணாற் பெயரையும் அறியேன், ஐயா;
இந்தப் பூமியில் என்கணிற் காணும்
பொருள்களைக் கண்டே போத மடைந்தேன்
அருட்பெருங் கடவுள் அமைப்பை யுணர்ந்தேன்
பூமியே புத்தகம், புத்தியே போதகன்,
ஆம்இ தொன்றே அறியத் தக்கதாம்;
இவ்வா டுகளின் இயற்கையைக் கண்டு
செவ்விய அமைதியே சிறப்பெனக் கொண்டேன்
எறிந்ததை யுண்டே இன்புறு நாயை
அறிந்தே, நன்றி யறித லறிந்தேன்;
சென்றுசென் றுழைக்கும் தேனீக் களினால
அன்றன் றுழைக்கும் அடைவினை யறிந்தேன்;

சிற்றெறும் புகளின் செய்கையை யுன்னி
பற்றுறச் சேர்க்கும் பான்மை யுணர்ந்தேன்; (106)
மாடப் புறாவின் மனநிலை கண்டே
நாடிமா றாத நட்பினை யறிந்தேன்; (108)
பறவைகள் தத்தம் பார்ப்பை வளர்க்கும்
உறவைக் கண்டே உறவினை யுணர்ந்தேன்; (110)
'அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை'யென் நீதியும், (112)
'நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறி'வெனு முறையும் (114)
நிலத்தைக் கண்டும் நீரைக் கண்டும்
நலக்க உணர்ந்து நான்அடங் கினேன் (116)
என்கணிற் பட்ட எந்தப் பொருளையும்
நன்குற நோக்கி நண்ணும் அறிவால் (118)
குணநாடிக் குற்றமு நாடி யவற்றின்
மிகைநாடி மிக்க கொண்டுணர்ந் தேனைய (120)
வரிப்புலி, ஓநாய், வலிய சிங்கமும்,
எரித்திடு விஷமே எய்திய பாம்பும் (122)
மனிதர் காணாது மறைந்து வைகும்
தனிமை யறிந்து, சற்குணர் தமக்கும் (124)
வஞ்சகம், பொறாமை, வன்கொலை முதலா
நஞ்சமார் குணங்கள் நாடா தொழிந்தேன். (126)
இன்னும் அறியா திருக்கும் சூழ்ச்சிகள்
பின்னும் பற்பல பிறங்கிடும் உலகில் (128)

அவையெலாம் நல்ல அறிஞர் தமக்கே
இவையிவை யென்ன இனிது விளங்கிடும். (130)

இவ்வகை கற்கும் இயற்புல வர்க்கு
அவ்வகை நூலால் ஆகும் பயனென்? (132)

ஏடுங் கையுமா இருந்து கற்றோர்,
நாடும் இயற்கை நலமறி யாது (134)

கல்விச் செருக்கால் கருத்து மாறிப்
பல்வகை யானும் பாடிப் பாடி (136)

உலகை மயக்கும் உண்மை யறிந்து,
இலகும் புலவர் யாமே யென்பர்." (138)

என்னக் கூறிய இடையன் மொழியைப்
பொன்னெனப் போற்றிப் பொருள்நனி யுணர்ந்து ()

அகந்தை யனைத்தும் அகன்(று)அப் பெரியனை
உகந்து வணங்கி "ஓதா துணர்ந்த (142)

ஐய! அருள்க, விடை" யெனச்
செய்யதன் நகரைச் சேர்ந்தனன் றானே. (144)

2. குசேலர் வறுமை.

அடியில் வரும் பாடல்கள் குசேலர் சரிதமுரைக்கும் குசேலோபாக்கியானத்தைச் சேர்ந்தவையாகும். இந்நூலைத் தமிழில் இயற்றியவர் வல்லூர் தேவராஜ பிள்ளை என்பவர். இவர் குலத்தில் கருணீகர்; இவர் மஹாவித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களின் மாணாக்கர். இவரது வாக்கு மிக இனிமை பயப்பது. இவர் 19-ம் நூற்றாண்டின் இடையில் வாழ்ந்திருந்தவர்.

வடமதுரைக்குத் தெற்கில் அவந்தி என்னும் நகரம் ஒன்றுளது; அதனருகிலிருந்த முனிவர் சேரியில் சுதாமா என்னும் அந்தணர்

ஒருவர் இருந்தார்; அவர் எப்போதும் கிழிந்த ஆடையையே அணிந்துகொண்டிருந்த காரணத்தால் அவரை யாவரும் குசேலர் என்றே அழைப்பார். அவர் வேத வேதாந்தங்களை யெல்லாம் வழுவறக் கற்றுச் சிறந்த மெய்ஞ்ஞானியாயிருந்தார். அவர் தாம் செய்யும் தவத்துக்கு உதவியாக நற்குண நற்செயலமைந்த மங்கை ஒருத்தியை மணந்தார். அவள் வயிற்றில் நாளடைவில் 27 பிள்ளைகள் பிறந்தனர். அதனால் அவருக்கு வறுமை மிக்கது. அப்போதும்,

"பல்லெலாம் தெரியக் காட்டிப் பருவரல் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலாம் அகல ஓட்டி மானமென் பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ இழிவிழி வெந்தஞான்றும்."

'இருநிலத்(து)யாவர்கண்ணும் ஏற்பதை இகழ்ச்சி'யென்ன
ஒருவிய உளத்தான் காட்டில் உதிர்ந்துகொள் வாரு மின்றி
அருகிய நீவா ரம்புல் தரளமும் ஆராய்ந் தாராந்(து)
உருவவொள் நகத்தால் கிள்ளி, எடுத்துடன் சேரக் கொண்டு
வந்துதன் மனைக்கை நீட்ட, வாங்கிமற் றவற்றைக் குற்றி
அந்தமெல்லியல்பாகஞ்செய்து அதிதிக்கோர் பாகம் வைத்து
தந்ததன் பங்க யின்று, தவலரும் உவகை பூத்து,
மந்திர மறைகட் கெட்டா மலரடி நினைந்தி ருப்பாள். 3

அப்பால் தம்மக்களுக்கிட்டு மிகுந்ததைத் தாய் தானும் உண்டு, அது வயிற்றுக்குப் போதாமையால் உடல் மெலிந்து துன்பத்துள் மூழ்கியிருப்பாள்.

குசேலரது குழந்தைகள்.

ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு
கைநீட்டும், உந்தி மேல் வீழ்ந்(து)
இருமகவும் கைநீட்டும், மும்மகவும்
கைநீட்டும், என்செய் வாளால்

பொருமியொரு மகவழும்கண் பிசைந்தழுமற்
றொருமகவு புரண்டு வீழாப்
பெருநிலத்தில் கிடந்தழுமற் றொருமகவுஎங்ஙனம்
சகிப்பாள் பெரிதும் பாவம். 4

அந்தோஎன் வயிற்றெரிந்த பசிஅடங்கிற்
றில்லையென அழுமால் ஓர்சேய்.
சிந்தாத கஞ்சிவாக் கிலைஎனக்கன்னாய்!
எனப்பொய் செப்பும் ஓர்சேய்.
முந்தார்வத் தொருசேய்மி சையப்புகும்போதினில்,
ஒருசேய் முடுகி யீர்ப்ப,
நந்தாமற் றச்சேயும் எதிரீர்ப்பச்
சிந்துதற்கு நயக்கும் ஓர்சேய். 5

அடுத்தமனைச் சிறான்ஒருவன் 'இன்றுநம
தகம்கறியென் அட்டார்' என்று
கொடுத்துவினா யினால்அச் சொற்பொருள்யாது?
அதுதான்எச் சுவைத்து? அன்னாய்
எடுத்துரை என்றிடும் "மகவுக் குரைக்கில்அது
செய்யெனில்என் செய்வோம்" என்று
'மடுத்த அஃதறிந்திலேன்' எனமற்றொன்
றுரைத்ததனை மறக்கச் செய்வாள். 6

வேறுமனைச் சிறான்அயின்ற பக்கணங்கண்
டோடிவந்து விழிநீர் வாரச்
சீறுதலி லாதஅனை முகம்பார்த்(து) "இன்னான்
இன்ன தின்றான் என்வாய்
ஊறுதலால் இப்பொழுதே செய்தளித்தி"
என்உடுத்த உடைதொட் டீர்க்கும்.

தேறுதலில் சிறுமகவை எடுத்துமார்
பிடையணைத்துச் சிந்தை நோவாள். 7

"குண்டலம்மோதிரம் கடகம் சுட்டி அயல்
மனையார்தம் குழவிக் கிட்டார்
புண்டரீகக் கண் அன்னாய் எனக்குநீ
இடாதிருக்கும் பொறுமை என்னே?
கண்டெடுத்திப்போதிடு" எனக் கரைமதலைக்,
கில்லாதான் கடன்தந் தானுக்கு
எண்டபச்சொல் வார்த்தையென" நாளைக்கு
நாளைக்கென் றியம்பிச் சோர்வாள். 8

சிறியசித மணிப்பூணை யன்றிவே
றொருபூண் அச் சேய்கட் கில்லை
வறியமா நாருரியே உடையன்றி
மற்றுடைகள் மருவ வில்லை.
வெறியபொழில் தழைத்தஇலை யுண்கலமல்
லாதுகலம் வேறொன் றில்லை.
குறியமனை வயின்புகும்ஓர் எறும்பினுக்கும்
ஆங்குணவு கொடுத்தற் கில்லை. 9

நண்புகூர் தரும் அன்னப் பால்சிறிதல்
லாமல்மற்றோர் நற்பா லில்லை.
பண்புகூர் தருதனயர்க் கெஞ்ஞான்றும்
பசிதீர்ந்த பாடு மில்லை.
கண்புகா இவ்வறுமை கண்டுமறை
யவனும்உளம் கவற்சி யில்லை
எண்புகாப் புகழவன்றன் செயல்கண்டு
மனைவிவிருப் பிகந்த லில்லை. 10

3. ஸ்ரீ இராமனது பிதுர்வாக்கிய பரிபாலனம்.

கீழ்வரும் பாடல்கள் கம்பராமாயணத்துள் அயோத்தியாகாண்டத்தில் கைகேயி சூழ்வினைப்படலத்தைச் சேர்ந்தவை. கம்பர் கவிச்சக்கரவர்த்தி; இவர் சோழநாட்டுத் தேரழுந்தூரிற் பிறந்தவர்; இவரை ஓச்சர்குல மென்பர்; இவர்குலத்தைப் பற்றிப் பலர் பலவாறுங் கூறுவர். வைணவமதத்தினர்; காலம் இற்றைக்கு ஆயிர வருடத்துக்கு முன்பாகும். இவரது பாடல்கள் வெண்சொல்லும், சொற்றொடர் முடிபுகளின் அருகிய வழக்காற் புதை பொருளுமாய் அளப்பரிய நயங்கள் செறிந்தவை. இவரது கவிநயம் விரிப்பிற் பெருகும். இவற்றுள் கைகேயி இராமனை நோக்கி, "பரதன் முடிசூட நீ பதினான்கு வருடம் கானகம் சென்றுவரவேண்டுமென்பது அரசன்கட்டளை" என்று கூறுதலும் ஸ்ரீ இராமன் அதனை உவகையுடன் ஏற்றுக் காட்டுக்குப் புறப்படுவதுமாகிய விஷயம் கூறப்படும்.

கைகேயி மந்தரை சூழ்ச்சியால் இராமன்மீது கொண்ட அன்பு நீங்கித் தன்னகம் வந்து தசரதனிடம் பரதன் முடிசூடவும் இராமன்வனமேகவும் வலிந்து வரம் பெற்றபின்னர், தசரதன் கைகேயியின் அந்தப்புரத்தில் சோகத்தால் மூர்ச்சித்துக் கிடந்தான். முடிசூடுதற்கிருந்த இராமன் தசரதனைக் காணவர அவனைக் கொலுவிருக்கையில் காணாமையால் இராமன், கைகேயியின் அந்தப்புரத்திற்குத் தேடிவந்தான்; அப்போது கைகேயி,

ஆயன நிகழும் வேலை அண்ணலும் அயர்ந்து தேறுத்
தூயவ னிருந்த சூழல் துருவினன் வருதல் நோக்கி
'நாயகன் உரையான் வாயால் நானிது பகர்வே' னென்னாத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்.

வந்தவள் தன்னைச் சென்னி மனனுற வணங்கி, வாய்த்த
சிந்துரப் பவளச்செவ்வாய்ச் செங்கையிற்புதைத்துமற்றைச்
சுந்தரத் தடக்கை, தானை மடக்குறத் துவண்டு நின்றான்,
அந்திவந் தடைந்த தாயைக் கண்டபின் கன்றின் அன்னான்.

அவ்வண்ணம் நின்ற இராமனை நோக்கிக் கைகேயி "தந்தையார் உனக்குச் சொல்ல வேண்டிய வார்த்தை ஒன்றுளது" என்றனள்; அதற்கு இராமன்,

"எந்தையே ஏவ நீரே உரைசெய இயைவ துண்டேல்,
உய்ந்தனென் அடியேன் என்னிற் பிறந்தவருளரோ? வாழி;
வந்ததென் தவத்தினாய வருபயன் மற்றொன் றுண்டோ?
தந்தையும் தாயும் நீரே தலைநின்றேன் பணிமின்" என்றான்.

கைகேயி:—

"ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே யாள நீ போய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற்கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகளாடி
ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பினன் அரசன்" என்றாள்.

இப்பொழு தெம்ம னோரால் இயம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்தி ராமன் திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்றதம்மா 15

தெருளுடை மனத்து மன்னன் ஏவலில் திறம்ப அஞ்சி
இருளுடை உலகம் தாங்கும் இன்னலுக் கிசைந்து நின்றான்
உருளுடைச் சகடம்பூண்ட உடையவன் உய்த்த கார(று)
அருளுடையொருவன் நீக்கஅப்பிணி யவிழ்ந்ததொத்தான்.

மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்ப னோவென்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ
என்னினி யுறுதியப்பால் இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கானம்இன்றேபோகின்றேன்விடையுங்கொண்டேன்

4. சூர்ப்பணகை புலம்பல்.

கீழ்வரும் செய்யுள்கள், பஞ்சவடியில் இராமஇலக்குமணரைக் கண்டசூர்ப்பணகை அவர்களைத் தன்னை மணந்துகொள்ளவேண்ட அவர்கள் மறுத்தமையால் சீதையை அவள் கவர்ந்தோட முயலவும் இலக்குமணன் சூர்ப்பணகையின் மூக்கை அறுத்துவிட்டனன். அதனால் அவள் தன் தமையனாகிய இராவணன் முதலியோரை நினைந்து புலம்புவதைக் குறிக்கும். இப்பாடல்கள் கம்பராமாயணத்தில் ஆரணியகாண்டத்தில் சூர்ப்பநகைப் படலத்தைச் சேர்ந்தவை.

நிலையெடுத்து நெடுநிலத்து நீயிருக்கத் தாபதர்கள்
சிலையெடுத்துத் திரியுமிது சிறிதன்றோ? தேவரெதிர்
தலையெடுத்து விழியாமை சமைப்பதே தழல்எடுத்தான்
மலையெடுத்த தனிமலையே இவைகாண வாராயோ. 18

புலிதானே புறத்தாகக் குட்டிகோட் படாதென்ன
ஒலியாழி உலகுரைக்கும் உரைபொய்யோ? ஊழியினும்
சலியாத மூவர்க்கும் வானவர்க்கும் தானவர்க்கும்
வலியானே! யான்பட்ட வலிகாண வாராயோ. 19

உருப்படிவ மன்மதனை ஒத்துளரே யாயினும்உன்
செருப்படியிற் பொடியொவ்வா மானுடரைச் சீறுதியோ
நெருப்படியிற் பொடிசிதற நிறைந்தமதத் திசையானை
மருப்பொடியப் பொருப்பிடியத் தோணிமிர்த்த வலியோனே! 20

உரம்நெரிந்து விழவென்னை உதைத்துருட்டி மூக்கரிந்த
நரனிருந்து தோள்பார்க்க நான்கிடந்து புலம்புவதோ?
கரனிருந்த வனமன்றோ இவைபடவும் கடவேனோ
அரனிருந்த மலையெடுத்த அண்ணாவோ! அண்ணாவோ!! 21

கானமதி னிடை யிருவர் காதொடுமூக் குடனரிய
மானமதாற் பாவியேன் இவண்மடியக் கடவேனோ
தானவரைக் கருவறுத்துச் சதமகனைத் தளையிட்டு
வானவரைப் பணிகொண்ட மருகாவோ! மருகாவோ!! 22

கல்லீரும் படைத்தடக்கை யடற்கரதூ டணர்முதலா
அல்லீரும் சுடர்மணிப்பூண் அரக்கர்குலத் தவதரித்தீர் !
கொல்லீரும் படைக்கும்ப கர்ணனைப்போல் குவலயத்துள்
எல்லீரும் உறங்குதிரோ யானழைத்தல் கேளீரோ! 23

V. பிரபந்தப் பகுதி.

1. மீனாக்ஷியம்மை குறம்.

இதனை இயற்றிய ஆசிரியர் குமரகுருபரசுவாமிகள். இவரது சரிதக் குறிப்பை, முன் தோத்திரப்பகுதியிற் காண்க. இப்பாடல்களில் குறத்திகள் பெண்களுக்குக் குறிசொல்லும் வழக்கமும் குறிஞ்சிநில இயற்கை அழகும் இயற்கைச்சுவைகனிய விரிக்கப்பட்டுள்ளன. இப்பாடல்கள், சிந்து என்னும் ஒருவித இசைப்பா வகையைச் சேர்ந்தவை.

குறத்தி தன் மலைச்சிறப்புக் கூறுதல்.

(சிந்து)

திங்கள்முடி சூடுமலை; தென்றல்விளை யாடுமலை;
தங்குமுயல் சூழுமலை; தமிழ்முனிவன் வாழுமலை;
அங்கையற்கண் ணம்மைதிரு அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை; பொதியமலை என்மலையே. (1)

(வேறு சந்தம்)

கன்ன மதம்பெய் துறங்குகொலைக்
களிறு கிடந்து பிளிறுமலை;
தென்னந் தமிழும் பசுங்குழவித்
தென்றற் கொழுந்தும் திளைக்குமலை;
அன்னம் பயிலும் பொழிற் கூடல்
அறல்அங் கூந்தற் பிடியாண்ட
பொன்னங் குடுமித் தடஞ்சாரல்
பொதிய மலையென் மலையம்மே. (2)

(வேறு சந்தம்.)

மந்தமா ருதம் வளரும் மலை எங்கள் மலையே;
வடகலைதென் கலைபயிலும் மலையெங்கள் மலையே;
கந்தவேள் விளையாடும் மலையெங்கள் மலையே;
கனகநவ மணிவிளையும் மலையெங்கள் மலையே;
இந்தமா நிலம்புரக்கும் அங்கயற்கண் ணம்மை
இன்பமுறும் தென்பொதிய மலைஎங்கள் மலையே.()

குறத்தி தனது குல இயற்கை கூறுதல்.

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக்
கிழங்குகல்லி எடுப்போம்;
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
கொடியில்வைத்துத் தொடுப்போம்.
பழம்பிழிந்த கொழுஞ்சாறும்
தேறலும்வாய் மடுப்போம்;
பசுந்தழையும் மரவுரியும்
இசைந்திடவே உடுப்போம்.
செழுந்தினையும் நறுந்தேனும்
விருந்தருந்தக் கொடுப்போம்;
சினவேங்கைப் புலித்தோலின்
பாயலிற்கண் படுப்போம்.
எழுந்துகயற் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம்;
எங்கள் குறக் குடிக்கடுத்த
இயல்பிதுகாண் அம்மே. 4)

குறத்தி தன் குறிச்சி இயற்கை கூறுதல்.

புல்வாயின் பார்வையைவெம் புலிப்பார்வை யிணங்கும்
புதுத்தினைநல் உரல்பாறை முன்றில்தொறும் உணங்கும்

கல்விடரில் வரிவேங்கை கடமானோ டுறங்கும்
கருமலையில் வெள்ளருவி கறங்கிவழிந் திறங்கும்
சில்வலையும் பல்வாரும் முன்இறப்பில் தூங்கும்;
சிறுதுடியும் பெருமுரசும் திசைதொறும்நின் றேங்கும்
கொல்லையின்மான் பிணையும்இளம் பிடியும்விளை யாடும்
குறிச்சிஎங்கள் குறச்சாதி குடியிருப்ப(து) அம்மே, (5)

குறிசொல்லுதல்.

குங்குமஞ்சந் தனக்குழம்பில் குழைத்துத்தரை மெழுகிக்
கோலமிட்டுக் குங்கிலியக்கொழும்புகையுங் காட்டிச்
செங்கனக நவமணிகள் திசைநான்கும் பரப்பித்
தென்மேலை மூலைதனில் பிள்ளையாரும் வைத்துப்
பொங்குநறு மலர் அறுகோ(டு) ஐங்கரற்குச் சாத்திப்
புழுகுநெய்வார்த் திடுவிளக்கு நிறைநாழி வைத்து,
மங்கையருக் கரசியெங்கள் அங்கயற்கண் அமுதை
மனத்துள்வைத்து நினைத்தகுறி இனிச்சொலக்கேள் அம்மே.(6)

முந்நாழி முச்சிறங்கை நெல்லளந்து கொடுவா
முறத்திலொரு படிநெல்லையென் முன்னேவை அம்மே,
இந்நாழி நெல்லையுமுக் கூறுசெய்தோர் கூற்றை
இரட்டைபட எண்ணினபோ(து) ஒற்றைபட்ட தம்மே,
உன்னுமுன் வேள்விமலைப் பிள்ளையார்வந் துதித்தார்
உனக்கினிஎண் ணினகருமம் இமைப்பினில்கை கூடும்.
என்ஆணை எங்கள்குலக் கன்னிமார் அறிய
எக்குறிதப் பினும்தப்பா(து) இக்குறிகாண் அம்மே. (7)

(விருத்தம்.)

அங்கைத் தலத்துத் தனரேகை
அளவில் செல்வம் தரும்உனது

செங்கைத் துடிதென் மதுரேசர்
　　செம்பொற் புயத்திற் சேர்க்குமாம்;
இங்கிப் படிபுத் திரரேனை
　　எவர்க்கும் இலையிப் படிதோளில்
தங்கும் மறுஅங் கயற்கணம்மை
　　தன்னே டிருக்கத் தரும்அம்மே. (8)

2. நால்வர் நான்மணிமாலை.

இதனை இயற்றியவர் சிவப்பிரகாச சுவாமிகள். இவரைப்பற்றிய குறிப்பு நீதிப்பகுதியிற் காண்க. இது, திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் சைவசமய குரவர் நால்வரையும், அவரது திருப்பாடல்களையும் முறையே வெண்பா, கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா என்னும் நால் வகைப் பாடல்களால், துதிக்கும் நாற்பது பாடல்களைக்கொண்ட ஒரு சிறு பிரபந்தம். அடியில்வரும் பாடல் மாணிக்கவாசகரையும், அவரது திருவாசகச் சிறப்பையும் ஓதுவது.

திருவாசகச் சிறப்பு.

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின்
நிழல்வாய் உண்ட நிகரிலா நந்தத்
தேன்தேக் கெறியும் செய்ய மாணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்,
யாவரும் ஓதும் இயற்கைத் தாதலின்,
பொற்கல நிகர்க்கும்; பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கும்; மதுரவாசகம்
ஓதின், முத்தி உறுபயன்;
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே. (9)

3. திருவள்ளுவமாலை.

இது இரட்டுற மொழிதலால் திருவள்ளுவ நாயனாரையும் அவர் திருவாய் மலர்ந்தருளிய திருக்குறளையும் பற்றிப் புனைந்துரைக்கும் திருப்பாடல்களின் வரிசைஎனப் பொருள்படும். இது சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரும் அசரீரி, நாமகள், இறையனார், உக்கிரப்பெருவழுதி என்பவர்களும் பாடிய பாடல்களின் தொகையாகும்.

புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேல்
சிலவர் புலவரெனச் செப்பல்,—நிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர், 'மாலை' மற்றுங்
கறங்கிருள்மா லைக்கும் பெயர். (10)

மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர் கிழார்.

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை,
வந்திக்க, சென்னி. வாய், வாழ்த்துக. நன்னெஞ்சம்,
சிந்திக்க. கேட்க, செவி. (11)

உக்கிரப்பெருவழுதி.

அறன் அறிந்தேம்; ஆன்ற பொருள்அறிந்தேம்; இன்பின்
திறன் அறிந்தேம்; வீடு தெளிந்தேம்;—மறன்எறிந்த
வாளார் நெடுமாற! வள்ளுவனார் தம்வாயால்,
கேளா தனவெல்லாம் கேட்டு. (12)

கோடிஞாழன்மாணிபூதனார்.

சிந்தைக்கினிய; செவிக்கினிய; வாய்க்கினிய;
வந்த இருவினைக்கு மாமருந்து;—முந்திய
நன்னெறி நாம்அறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா. (13)

கவுணியனார்.

செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருள் ஒன்றே—செய்யா
அதற்குரியர், அந்தணரே; ஆராயின் ஏனை
இதற்குரியர், அல்லாதார் இல். (14)

வெள்ளி வீதியார்.

ஓதற் கெளிதாய், உணர்தற் கரிதாகி,
வேதப் பொருளாய் மிகவிளங்கித் — தீதற்றோர்,
உள்ளுதோ (று) உள்ளுதோ(று) உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு. (15)

மாங்குடி மருதனார்.

---

4. சடகோபர் அந்தாதி.

இது கம்பநாட்டாழ்வாரால்அருளப்பெற்றது. இதிற் கூறப் படும் விஷயம், ஸ்ரீவைஷ்ண ஆழ்வார்கள் பன்னிருவருள் நம்மாழ் வாரது தெய்வீகமும், அவரது வேதசாரமான திருவாய்மொழிப் பெருமையும் ஆம், இவ்வந்தாதியின் சொற்கட்டும், பொருட்பொலி வும் புலவரெல்லாம் போற்றுந் திறத்தன.

(கலித்துறை.)

கவிப்பா அமுதம் இசையின் கறியொடு கண்ணன் உண்ணக்
குவிப்பான், குருகைப்பிரான், சடகோபன்குமரிகொண்கன்,
புவிப்பா வலர்தம் பிரான் திரு வாய்மொழி, பூசுரர் தம்
செவிப்பால் நுழைந்துபுக் குள்ளத்து ளேநின்று தித்திக்குமே. 16

உயிர் உருக்கும்; புக்குணர் வுருக்கும்; உட லத்திலுள்ள
செயிர்உருக் கொண்டநம் தீங்குருக்கும்; திருடித்திருடித்
தயிர்உருக்கும்நெய்யொ(டு)உண்டானடிச்சடகோபன்சந்தொ(டு)
அயிர்உருக்கும் பொருநற் குருகூர் எந்தை யந்தமிழே. 17

VI. பல்துறைப் பகுதி.

1. துயிலெடை.

துயிலெடை என்பது வீரத்தால் பெருமித மிகுந்து பாசறையில் தூங்கிய அரசரைச் சூதர், பலவாறு புகழ்ந்துபாடி நித்திரையினின்றும் எழுப்புதல். இது புறப்பொருள் துறைகளுள் ஒன்று. கீழ்வரும் பாட்டுக்கள், தன்னேரில்லாத்தகைமையாற் பெருமிதமுற்றுத் துயிலும் தமிழரசியை நித்திரை தெளிவிக்கும் சூதர் கூற்றாகப்பாடியவை. துயில்—தூக்கம். எடை-எழுப்புதல்.

இப்பாட்டுக்களை இயற்றிய புலவர் எம்முடன் மதுரை நான்காம் சங்கத்திடைத்தமிழ்மொழி பயின்றவரும், தற்போது யாழ்ப்பாணத்தில் ஸ்ரீமான் சர் இராமநாததுரையால் நிறுவப்பெற்ற பரமேசுரக் கல்லூரித் தலைமைத்தமிழ் விரிவுரையாளராய் விளங்குவோருமான நவநீதகிருஷ்ண பாரதியாரவர். இவர் சங்கத்துச் சான்றோர் பாட்டுக்களைப்போல் தனித்தமிழ்மொழிகள் பயின்று, பொருட்செறிவுற்றுத்திகழப் பாட்டுக்கள யாக்கும் வன்மையுடையவர்; இதற்கு இவரியற்றிய உலகியல்விளக்க மென்னும் பநுவலே மலையிலக்காகும். இப்புலவர் பிறப்பிடம் சோழமண்டலம்.

சென்னிதன் காவிரிநீர் சேரன் பொருநைநீர்
தென்னவன் வையைநீர்சென்னிவைத்-துன்னைமுற்றத்
தாட்டற் கவாவிநின்று ரம்மே யெனவாணர்
பாட்டுக் கிரங்கிவிழிப் பாய். (1)

பொதியத்தொளிர்சந்தப் பூங்குழம்பில் வான்றோய்
மதியக் குளிர்தென்றல் மன்றல்—பொதியக்
கலவையொன்று கூட்டிக் கடவுண் முனியு
நிலவுநன் னின்னேக்கி யீங்கு. (2)

உத்தர வேத முரைத்தாங் கதை யெழுதிச்
சித்திரித்த கைசேக்கச் சேலெய்து—மெய்த்தவன்
வள்ளுவன் நிற்காண வந்தான் தமிழரசி
உள்ளுவந்து துஞ்சல் ஒழி. (3)

பைந்தமிழ்த் தேன்சொட்டப் பாவலர் நாவூறச்
சந்தப் பலமலர்த்தார் தான்புனைந்து—செந்தமிழ்முன்
பொற்றூளிற் சூட்டிப் புகழ்கொளற்கா நங்கபிலன்
நிற்குநன் றஞ்சாதே நீ. (4)

2. அரசர் பெருமை.

இப்பாடல்கள் சங்ககாலத்தை யடுத்திருந்த திருத்தக்கதேவர் என்னும் ஜைனப் புலவர் பாடிய ஜீவகசிந்தாமணியில் நாமகள் இலம்பகத்தைச் சேர்ந்தவை. இது தருமதத்தன் என்னும் மந்திரி தன் மந்திரியான கட்டியங்காரனுக்குக் கூறிய நீதியாகும்.

திலக நீண்முடித் தேவரும் வேந்தரும்
உலக மாந்தர்கள், 'ஒப்ப' வென் றோதுப;
குலவு தார்மன்னர்க் கியானிது கூறுவன்;
பலவு மிக்கனர் தேவரிற் பார்த்திபர். (5)

உறங்கு மாயினும் மன்னவன் தன்னொளி
கறங்கு தெண்டிரை வையகம் காக்குமால்
இறங்கு கண்ணிமை யார்விழித் தேயிருந்(து)
அறங்கள் வெளவ அதன்புறங் காக்கலார். (6)

தீண்டி னார்தமைத் தீச்சுடும்; மன்னர் தீ,
ஈண்டு தங்கிளை யோடும் எரித்திடும்;
வேண்டில் இன்னமிர் தும் நஞ்சும் ஆதலான்,
மாண்ட தன்று,நின் வாய்மொழித் தெய்வமே. (7)

திருத்தக்க தேவர்.

3. மெய்ஞ்ஞானியர் இயல்பு.

(குசேலோபாக்கியானம்.)

புகழ்ந்துநறு விரைக்கலவை பூசிடினும்,
புல்லியரைப் போல, நோக்கி

இகழ்ந்துபல பேசிடினும், விருப்புவெறுப்
பென்பதுஅவர்க் கென்றும் இல்லை.
அகழ்ந்தமலக் கிழங்கினராய்ப் பசிவேளை
கிடைத்தவற்றை அமுதாய்த் துய்த்துத்
திகழ்ந்திடுவர் சிறிதேனும் நாளைக்கு
வேண்டுமெனச் சிந்தை செய்யார். 8

ஆடுவார்; உன்மத்தர் போல்திரிவர்;
நகைத்திடுவார்; அங்கைகொட்டிப்
பாடுவார்; இன்றிருந்த இடம்நாளை
இருக்கமனம் பற்றார்; சுற்றிக்
கூடுவார் தமில்கூடார். கந்தையன்றி
வேறுடுக்கை கொள்ளார். அன்னார்
நீடுவார் புகழ்ப்பெருமை இற்றென்று
மதிப்பவரார்? திகழ்த்துவார் ஆர்? 9

வல்லூர், தேவராஜபிள்ளை.

4. உலகில் உயர்ந்தோர் இயற்கை.

இப்பாட்டு, சங்கநூல்களில் ஒன்றாகிய புறநானூற்றைச் சேர்ந்தது. புறநானூறு சங்ககாலத்துப் பல புலவர் பாடல்களைத் தொகுத்த ஒரு தொகைநூல். இப்பாட்டுப் பண்டைத் தமிழரது விரிந்த சிந்தையைப் புலப்படுத்தும் பொற்பு வாய்ந்து திகழ்வது காண்க.

உண்டால்அம்ம! இவ் உலகம்: இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலுமிலரே, முனிவிலர்,
துஞ்சலும்இலர், பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர், பழியெனின்,
உலகுடன் பெறினும் கொள்ளலர், அயர்விலர்,
அன்ன மாட்சி அனைய ராகித்

தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. 10

கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி

5. புலவர் வாழ்க்கை.

இது பிசிராந்தையாரென்னும் நல்லிசைப்புலவர் தாம் நீண்ட நாளாக நரை திரை மூப்பின்றி யிருத்தலைக் கண்டுவியந்து வினவிய சான்றோர்க்கு விடையாகக் கூறியது. இப்பாடல் அக்காலப் புலவர் வாழ்க்கையைப் புலப்படுத்தற்கு ஏற்ற ஓர் உரையாணியாய் ஒளிர்வது காண்க.

யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்,
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;
யான்கண் டனையரென் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே. 11

பிசிராந்தையார்.

6. அரசன் கடன்.

(புறப்பாடல்)

நெல்லும் உயிர்அன்றே, நீரும் உயிரன்றே,
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;
அதனால், யானுயிர் என்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே. 12

மோசிகீரனார்.

7. பத்தினிப் பெண்டிர்.

ஓவியர்நீள் சுவரெழுதும்
ஓவியத்தைக் கண்ணுறுவான்

தேவியையான் அழைத்திட "ஆண்
சித்திரமேல் யான் பாரேன்
பூவையர்தம் உருவெனில்நீர்
பார்க்கமனம் பொறே" னென்றாள்
காவிவிழிக் கன்னியிவள்
கற்புவெற்பின் வன்மையதால். 13

வேதநாயகம் பிள்ளை.

இன்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்
வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு. 14

இளங்கோவடிகள்.

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

திருவள்ளுவர்.

8. நல்லாசிரியன்.

குலன், அருள், தெய்வங் கொள்கை, மேன்மை,
கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை,
நிலம் மலை நிறைகோல் மலர் நிகர் மாட்சியும்
உலகிய லறி வோ(டு) உயர் குணம் இனையவும்
அமைவன நூலுரை ஆசிரியன்னே. 16

9. மாணுக்கர்வகை.

அன்னம், ஆவே, மண்ணொடு, கிளியே,
இல்லிக் குடம், ஆ(டு), எருமை, நெய்யரி
அன்னர், தலை இடை கடை மாணுக்கர். 17

பவணந்திமுனிவர்.

10. மக்கட்பேறு.

கல்லாமழலைக்கனியூறல் கசிந்து கொஞ்சும்
சொல்லால் உருக்கி அழுதோடித் தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்தில் விளையாடும் மகிழ்ச்சி மைந்தர்
இல்லா தவர்க்கு மனைவாழ்வின் இனிமை என்னும். 18

வில்லிபுத்தூரார்.

பொறையிலா அறிவு, போகப் புணர்விலா இளமை, மேவத்
துறையிலா வனசவாவி, துகில் இலாக் கோலம், தூய்மை
நறையிலா மாலை, கல்வி நலமிலாப் புலமை, நன்னர்ச்
சிறையிலா நகரம்போலும் சேயிலாச் செல்வம் அன்றே. 19

வளையாபதி.

11. பொருண்மொழிக் காஞ்சி.

தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்,
நடுநாள் யாமத்துப் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி உடுப்பவை இரண்டே,
பிறவு மெல்லாம் ஓரொக் கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனினே தப்புந பலவே. 20

நக்கீரர்.

12. கல்விச் சிறப்பு.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே.
பிறப்போர் அன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்.
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்

மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடையோனா(று) அரசுஞ் செல்லும்.
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே. 21

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்.

13. அறவுரை.

பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொற் போற்றுமின்;
ஊன்ஊண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானஞ் செய்மின்; தவம்பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட்பு இகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருள்மொழி நீங்கன்மின்;
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்;
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை அஞ்சுமின்; பிழையுயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையும், செல்வமும், யாக்கையும் நிலையா;
உளநாள் வரையாது; ஒல்லுவ தொழியாது;
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்;
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென. 22

இளங்கோவடிகள்.

VII. தனிப்பாடற் பகுதி.

1. ஔவையார் பாடல்.

கல்விச் செருக்கு ஆகாதெனப் பாடியது.

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்(று)
உற்ற கலைமடந்தை ஓதுகின்றாள்—மெத்த
வெறும்பந் தயம்கூற வேண்டாம் புலவீர்! 1
எறும்புந்தன் கையாலெண் சாண்.

முல்லான் என்பவனைப் புகழ்ந்து பாடியது.

காலையில் ஒன்றாவர் கடும்பகலில் ஒன்றாவர்
மாலையில்ஒன் றாவர் மனிதரெலாம்—சாலவே
முல்லானைப் போல முகமும்அக மும்மலர்ந்த
நல்லானைக் கண்டறியோம் நாம். 2

லோபிகள் செல்வத்தை இழித்துப் பாடியது.

சுற்றுங் கருங்குளவிச் சூரைத்தூ றாரியப்பேய்
எற்றுஞ் சுடுகா டிடுகரையின்—புற்றில்
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததேன் ஒக்கும்
தளர்ந்தோர்க்கொன் றீயார் தனம். 3

பயனற்றவை இவை எனப் பாடியது.

மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிபம்நன்
னாடில்லான் செங்கோல் நடாத்துவது—கூடும்
குருவில்லான் வித்தை குணமில்லாப் பெண்டு
விருந்தில்லா வீடு விழல்.

முருகவேள் என்பார்
இனியது எது? வெனப் பாடியது.

இனியது கேட்பின் தனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்;
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்;
அதனினும் இனிது அறிவுள்ளோரைக்
கனவினும் நனவினும் காண்பது தானே! 5

அரியது இதுவெனப் பாடியது.

அரியது கேட்பின் வரிவடி வேலோய்!
அரிதரிது மானிட ராத லரிது;
மானிடராயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது;
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது;
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செய்தல் அரிது;
தானமும் தவமும் தான்செய்வா ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே. 6

2. காளமேகப்புலவர் பாடல்.

கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்றன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்—குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும். 7

முருகக்கடவுள்மீது நிந்தாஸ்துதி.

அப்பன் இரந்துண்ணி யாத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தானுக்கிங்
எண்ணும் பெருமை இவை. 8

விகடராமன் குதிரையைப் பற்றிப் பாடிய ஆசிரியம்.

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி. 9

போவாள் வருவாள் புகுவாள் என்று பாடுகவெனப் பாடியது.

செற்றலரை வென்ற திருமலைரா யன்கரத்தில்
வெற்றிபுரி யும்வாளே வீரவாள்—மற்றையவாள்
போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள்
ஆவாள் இவாளவா ளாம். 10

பொன்னுவரை இலை காய்பூ எனப் பாடுகவெனப் பாடியது.

உடுத்ததுவும் மேய்த்ததுவும் உம்பர்கோன் றன்னால்
எடுத்ததுவும் பள்ளிக் கியையப்—படுத்ததுவும்
அந்நா ளெறிந்ததுவும் அன்பின் இரந்ததுவும்
பொன்னு வரையிலைகாய் பூ. 11

3. இராமச்சந்திரக்கவிராயர் பாடல்.

வறுமைத் துன்பத்தால் வருந்திப் பிரமனை நிந்தித்துப் பாடியது.

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித்தானா
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித்தானா
அல்லைத்தான் சொல்லித்தா னாரைத்தான்
நோவத்தான் ஐயோ வெங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவியிற்றான் பண்ணினானே. 12

தம்மினும் சிவபெருமான் அதிகத் துன்பமுடையவர்
எனப் பாடியது.

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்
வாசல்தொறு முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தே னப்பா!
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
கொடுங்காலால் உதைத்தபுண்ணும் கோபமாகப்
பஞ்சவரி லொருவன் வில்லால் அடித்த புண்ணும்
பாரென்றே காட்டி நின்றான் பரமன்றானே. 13

குறிப்புரை.

கடவுள் வணக்கம்

வேதமும்-நான்கு வேதமும். பஞ்சபூதம்-பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம். புலன்-பஞ்சபுலன்; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். ஞாதம்-காண்பான்.

1. தோத்திரப் பகுதி.

1. தூக்கும்-ஆராயும். பனுவல்-நூல்கள். தேக்கும்-நிறைகின்ற.

2. தீட்டும்-எழுதுகின்ற. ஓதிமம் பேடு-பெட்டைஅன்னம்

3. விற்பனம்-பாண்டித்யம். அவதானம்-ஞாபகசக்தி. நளின ஆதனம்-தாமரையாசனம்.

5. உன் வயிற்றில் பிறந்து-உன்னிடமாகப் பிறந்து. ஒன்று பல ஆயிடினும்-ஒரு பாஷை பலவாக விகற்பப்பட்டாலும். உலக வழக்கு-பேச்சுவழக்கு. கடல்குடித்த குடமுனி-அகத்தியர். அகத்தியர் தென்னாட்டில் செல்லக் கட்டளை பெற்றபோது சிவபிரானிடத்தில் தமிழ் அறிவுறுத்தப் பெற்றார் என்பது புராண வரலாறு. (காஞ்சிப்புராணம், இராமாயணம், திருவிளையாடல்) இதுபற்றிக் குடமுனி.........குருநாடில் எனப்பட்டது. தொடுகடல்-தோண்டப்பட்ட கடல்; (வினைத்தொகை.)

ஒரு பிழைக்கா-"கொங்குதேர் வாழ்க்கை" என்னும் பாசுரத்தில் நக்கீரர் காட்டிய ஒரு பொருட்பிழைக்காக. விழிப்பாரேல்-காட்டிய பிழையை மறுக்கும் வழி தோன்றாது விழிப்பாரானால்; இதில் கோபத்தால் நெற்றிக்கண்ணின் தீயெழ விழிப்பாராயின் என மற்றுமொரு பொருளும் தொனிக்கவைத்துள்ளமையறிக. இவ்விரண்டடியின் வரலாறு திருவிளையாடலில் தருமி கதையில் காண்க. சதுமறை ஆரியம்-நான்கு வேதமும், வடமொழியும்; ஆரியர் இந்தியாவில் குடியேறுமுன் தமிழர் இந்தியா முழுதும்

பரவியிருந்தனர் என்ற சரித்திரக் கொள்கைபற்றி.........'சகமுழு தும் நினைதாயின்' என்றார்.

வேகவதி-வையையாறு. ஏடு-திருஞானசம்பந்தர் விட்டதமிழ் வேதமாகிய ஏடு. காலநதி-காலப்போக்காகிய ஆறு. இதிற் குறித்த வரலாறு பெரியபுராணத்திற் காண்க.

கடையூழிவரும் தனிமை-சர்வசங்கார காலத்துக்குப் பின்பு சிவபெருமான் ஏகனாயிருக்கும் தனிமை. இவ்வடிகளிற் குறித்த வரலாறு திருவாதவூராகிய மாணிக்கவாசகர் சொல்ல, வேதியர் வடிவுடன் வந்த சிவபெருமான் திருக்கோவையாரையும் திருவாச கத்தையும் எழுதினாரென்பது. தக்கவழி-தகுந்தோர் வந்தவிடத்து. வியஞ்சனம்-அடையாளம் - பலகை மெய்ச்சரித வியஞ்சனம் என முடிக்க.

வடமொழி — வீறுடைய—கலைமகள் தன் ....இம்மூன்று தாழிசையாலும் கூறிய கருத்து:—

சரஸ்வதி கிழக்கு நோக்கியிருந்தால் அத்தேவியின் இடக் கண் வடக்கும், வலக்கண் தெற்குமாகப் பொருந்தியிருக்கும். ஆகவே தென்மொழி வடமொழிகளை அத்தேவியின் கண்களாகக் கொள்வோர்க்குத் தென்மொழி வலக்கண்ணும் வடமொழி இடக் கண்ணுமாகும். இதனையறியாது வடமொழியை உயர்த்திப்பேசிக் கெடுவழக்குத் தொடர்பவர் கிழக்கு மேற்குத் திசை யறியாத மதி யீனராவர் என்பது.

பத்துப்பாட்டு ஆதி-பத்துப்பாட்டு முதலான சங்க இலக்கி யங்கள். பொருட்கு இசையும் இலக்கணம்இல் கற்பனை-பொருத்த மில்லாத ஆபூத கற்பனை.

மநு - ஓர் ஸ்மிருதி.

வாசகம்-திருவாசகம்.கனம்,சடை-வேதத்தை உருவிடும் விகற் பங்கள். மலம்-மும்மலம். "திருவாசகத்துக்குருகாதார் ஒருவாச கத்துக்கும் உருகார்" என்பதை ஈங்குக் கருதுக. மாண்டோர்கள்· மாட்சிமைப்பட்டவர்கள்; இதில் மாண், பகுதி.

6. நாடகத்தால்-வேஷமாத்திரத்தில். வீடு-முத்தி. விரைகின்றேன்-அவசரப்படுகின்றேன். ஆடகம்-பொன். மணிக்குன்று-மாணிக்கமலை. எம் உடையான்-எம்மை அடிமையாக உடையவனே; எம் என்றது, தன் வம்சத்தோரையும் உளப்படுத்தி;

7. வான்-சுவர்க்க இன்பம். எயும்-பொருந்திய. எம்மான்-எம்பெருமான். என்று என்று-அடுக்குச் சொல்.

8. ஆம் ஆறு-ஈடேறும்படி; ஆகும் என்பதன் விகாரம், ஆம். தூகேன்-பெருக்கிச் சுத்தஞ்செய்ய மாட்டேன். சதுர்-உபாயம்.

9. வளி-காற்று. யான் என்று - தான் அல்லாத உடம்பை நான் என அகங்கரித்துச் சொல்லி (அகங்காரங்கொண்டு) எனது என்று-தன்னுடைய தல்லாத செல்வங்களை என்னுடையதென்று (மமகாரங்கொண்டு) சொல்லி.

10. வானவர்கள், வாழ்த்துவதும் தாம் வாழ்வான் - தேவர்கள் உன்னைப் பலவாறு வாழ்த்திக் துதிப்பதும் தாங்கள் நன்கு வாழ்தற்பொருட்டே. மனம் நின்பால் தாழ்த்துவதும்-(அவர்கள்) தங்களது மனத்தை உன்னிடத்துச் செலுத்தித் தியானிப்பதும். தாம் உயர்ந்து-தாங்கள் யாவரினும் உயர்ந்து, தம்மை-தங்களை, எல்லாம் தொழவேண்டி-எல்லா உயிர்களும் வணங்கவேண்டுதற் பொருட்டே. தேவர்கள் உன்னை வாழ்த்துவதும் வணங்குவது மெல்லாம் அநித்தியமாகிய, புகழும் போகமும் பெறுதற்பொருட்டேயாம். நான் பரவுவது - பிறவித்துன்பமற்று மீளாநெறியாகிய முத்திநிலை கூடுவதற்கேயாம் என்பது இப்பாட்டின் கருத்தாகக் கொள்க. சூழ்த்து-சூழ்ந்து; வலித்தல் விகாரம். மதுகரம்-வண்டுகள்; தேனைச்சேகரிப்பது; காரணப் பெயர். பாழ்த்த-பாழான.

11. வேண்டேன்-விரும்பமாட்டேன். இனி அமையும்-இனிமேல் போதும். குற்றாலம்-சித்திரசபையையுடைய ஓர் சிவஸ்தலம். கூத்தா-நடராச! குரைகழல்-ஒலிக்கின்ற வீரகண்டையணிந்த திருவடி; கழல், தானியாகு பெயர். கன்று + ஆ = கற்றா-கன்றையுடைய பசு. பேரன்புக்குப் பசு கன்றிடத்துக் கொள்ளும் அன்பையே உவமை கூறுதல் வழக்கு "இரண்டுகன்றினுக்கிரங்குமோரா வென விருந்தான்" என்றார் கம்ப நாடரும்.

12. பொழுதினைச் சுருக்கும் - வாழ் நாளை வீணாகக் குறைக்கின்ற. சிக்கென—இறுக.

13. தெளிவு - இரசம். மானே-பெருமானே. வந்து உறும் ஆறு-வந்தடையும் உபாயம்.

14. எய்த்து - இளைத்து. உன்னை ஒப்பாய் என்றது, இறைவன் தனக்குவமை இல்லாதவன் என்பது பற்றி. உத்தர கோச மங்கை - ஓர் தலம். அத்தன்-தகப்பன்.

15. வீழ் பொருள் - அழிந்து போகும் செல்வம். வென்றி- வெற்றி. நின்ற ஆ நில்லா - நின்றபடி நில்லாத (உறுதியில்லாத) அணவும் - அளாவும்.

16. படிறு-பாவச் செய்கை. கண்ட + ஆ-விரும்பியபடியே திரிதந்தேன் - ஒழுகினேன். தெள்ளியேன் ஆனேன்-(உனது திருவருட்பிரசாதம் கிட்டியபின்) ஞான முடையவனானேன். செல் கதி-பரமபதம். கண்ண நீர்-கண்ணீர் இதில், அ-ஆறும் வேற்றுமை உருபு, நள்ளிருள்-நடு இரவு-

17. வெருக் கொள - பயப்பட. செகுத்த - அழித்த. வம்பு - வாசனை.

18. நிலம் தரம் செய்யும் - தரைமட்ட மாக்கும்; அதாவது நீக்கும்.

19. மஞ்சு உலாம்-மேகங்கள் உலாவுகின்ற. வண்டு + அறை அறை-ஒலிக்கின்ற. மங்கையார்-திருமங்கை என்னும் நகரிலுள்ளவர்கள். துஞ்சும் போது-இறக்கும் போது (இது மங்கல வழக்கு)

20. அகிலம் - பூமி. ஆணை-கட்டளை. அழகேசன்-குபேரன் ரசவாத வித்தை-தாழ்ந்த லோகங்களை உயர்ந்த லோகமாக்கும் வித்தை. காய கற்பம்-உடம்பு நிலை பெற்றிருத்தற் குரிய மருந்து. நான் நான் எனக்குழறி-நானே நான் என்று அகங்காரம் மேலிட்டுப் பொருளின்றிப் பேசி. பாசக்கடல் - ஆசைக்கடல். மனது அற்ற- மனத்தினுடைய செயலற்ற. பரிபூரணம்-முழு நிறைவு.

21. ஆழி-கடல். ஆலம் நஞ்சு. வட அனல் - வடவா முகாக்கினி அகில கோடி-கோடி உலகம். தனு - வில். சப்தமேகம் - எழு வகையான மேகங்கள். வச்ரதரன்-இந்திரன்; வச்சிராயுதம் தரித்தவன். மணி-குளிகை. மனம் குவிதல்-மனம் ஒடுங்குதல். ஆலம் அமுதானது, தேவர்கள் பாற்கடல் கடைந்த காலத்து. சிலை-கல்லாய்க் கிடந்த அகலிகை. அகலிகை கௌதமர்மனைவி; அவரது சாபத்தால் கல்லுருவாய்ப் பின்பு இராமனது பாததூளியால் சாபம் நீங்கிப் பெண்ணானாள்

22. கந்துகம்-குதிரை. கட்செவி - பாம்பு. இரதம் வைத்து-ரசவாதம் செய்து. வேதித்து-(பொன்னாய்) மாற்றி. மற்றொரு சரீரத்தில் புகுதல்-கூடு விட்டுக் கூடுபாய்தல் என்னும் சித்தி. சலமேல் நடத்தல்-ஜலஸ்தம்பனம் கனல்மேலிருத்தல்-அக்கினிஸ் தம்பனம் சந்ததமும் - எக்காலத்தும்.

23. துயரம் - பிறவித்துன்பம். 2-ம் அடியிற் குறித்தது இரண்டறக்கலத்தல் என்னும் முத்தி வகை.

24. தரு - விருக்ஷம். ஓடை - சிற்றாறு. சுகந்தம்-நன் மணம். பொது-அம்பலம் அலங்கல்-மாலை.

25. முக்கனி-வாழை, மா, பலாப் பழங்கள். தெங்கு-தேங்காய். அளைந்து-கிண்டி.

II. நீதிப்பகுதி.

1. அங்கணநீர்-ஜலதாரை நீர். உரவுநீர்-மிக்க நீர். பிறிதாகி-வேறாகி. ஓரும்-ஆராயத்தக்க.

2. கூர்த்து-கோபித்து. பேர்த்து-திரும்ப. நீர்த்து-நீர்மையான சொல். சொல்ப-ஓ-சொல்வார்களோ.

.3 கேண்மை-நட்பு. பிறை-பிறைச்சந்திரன். வரிசை வரிசையா - படிப்படியாக - நந்தும் - வளரும். வைகலும் - ஒவ்வொரு நாளும். தொடர்பு-சிநேகம்.

4. கரவாத-உள்ளதை ஒளியாத. இரவாது - யாசிக்காமல். உள்ளுங்கால் - நினைக்கும் போதே. என்கொலோ - எத்தன்மைய தோ. குறிப்பு-மனக்குறிப்பு.

5. நீண்ட - (வீணாக) வளர்ந்த. இழிவு தோன்ற நீண்ட என்றார். உம்மைகள்-எச்சம். இராஅது, உயிரளபெடை. இருந்தற்று-இருந்ததுபோன்றதாம்.

6. வாழை-வாழைப்பழம். (ஆகு பெயர்) திரியாதாம் - வேறு படாதாம். ஆங்கே-அது போலவே; (உவம உருபு) இனம்-சேர்ந்த கூட்டம் தீதாம் பக்கம்- கொடியதாகும் தீமை.

7. அத்து இட்ட கூறை-காவி தோய்த்த ஆடை. (காஷாய வஸ்திரம்) வாழினும் (துறவியாய்) வாழ்ந்தாலும். உடைமை-பொருள். பாடு-பெருமை. ஒன்று சிறிதளவேனும். ஒத்தகுடி - சமத்துவமான வம்சம்.

8. கறங்கு - ஒலிக்கின்ற. கழூஉம் - கழுவும்(விகாரம்) கண மலை-கூட்டமான மலை. இன்மை-வறுமை.

9. ஆள்வினை-முயற்சி. நல்ல குலம் என்பதும் தாழ்ந்த குலம் என்பதும் பிறப்பினால் அல்ல; நற்குண நற்செயல்கள் உண்மையானும் அவை இன்மையானும் உண்டாகும் என்பது கருத்து.

11. புறங்கடை-வெளியில். வீடு-மோக்ஷம். கவல்-கவலை. கல்வியின் ஊங்கு-கல்வியினும் சிறந்தது.

12. ஓம்பாது-பாதுகாவாமல் - கருந்தனம்-பெருஞ்செல்வம்.

13. தமது உடைமை-தமது செல்வம்.(அம்மா-வியப்பு.)கருத்தழிக-மனம் வருந்துக. எற்று-எவ்வளவினது.

14. பெரும் சுட்டு-பெரு மதிப்பு. நோற்பது கடைப்பிடிப்பது. சீர்-பெருமை. தூற்றி-பிரஸ்தாபித்து. புறங்காத்து - வெளிப்படாது அடக்கி. தாழ்ச்சி-வணக்கமொழி.

15. இலைமுகம் பைம்பூண் - இலைவடிவமாகச் செய்யப்பட்ட பொன்னாபரணம். இறை - அரசன்-கொழுநன் - கணவன். "தெய்வம் தொழாஅள்கணவற்றொழு தெழுவாள்" என்பதைக்கருதுக.

16. உறுதிபயப்ப-நன்மைதர. கடைபோகா எனும்-முடியாதாயினும். இறும் உயிர்-சாகும் உயிர் அல்லன போல்-முடியாதன போல் தோன்றி. ஆவன ஆகும் காரியங்கள் (வினையாலணையும் பெயர்)

17. உலையா-தளராத. களை கண் ஆ - ஆதாரமாக. ஊழின்-விதியின், வலி சிந்தும்-பலத்தைக் கெடுக்கும். பான் முளை-விதியாகிய முளையை. மறலி - யமன். கான் முளை - பிள்ளை (போலும்-அசை) கரி-சாட்சி

18. குறளை-கோட் சொல்...இங்குக் கூறிய நான்கும், வாக்கின்கண் நிகழும் பாவமென அறிக. புலம் ஐந்தும்-இந்திரியங்கள் ஐந்தும். மனமாசு-காமம், வெகுளி, மயக்கம் என்னும் மனக்குற்றம் மூன்றையும். நல் ஆறு-சன்மார்க்கம்.

19. மெய் வருத்தம்-உடம்பின் வருத்தம். துஞ்சார்:தூங்கார். செவ்வி அருமை-மழை, வெயில், பனி என்ற காலத்தின அருமை. கருமம்-காரியம்.

20. மதியிலிகாள் - மூடர்களே. மகிழ் + அன் + மின்-சந்தோஷிக்காதீர். அங்கம்-உடம்பு. குலைவது-நடுங்குவது.

21. முகமன்-உபசார வார்த்தை. இயம்பாதார்-சொல்லாதவர். புகழுவோ பூங்கை நாவிற்கு நயந்து உதவும் எனக் கூட்டுக. பூங்கை-அழகிய கை.

22. இருவர்-இரண்டு சிநேகிதர். நொய்து ஆகும் - அற்பமாகும்.

23. எண்ணிரண்டும்-பதினாறு கலையும்.மாறு இன்றி-விரோதமில்லாமல். கண்ணிரண்டும் நோக்கல் ஒன்றையே எனக்கூட்டுக. கணவன் மனைவி இருவரும் ஒரே கருமத்தை ஒற்றுமையாய்ச் செய்தற்கு, இரண்டு கண்ணும் ஒரு பொருளையே பார்த்தலை உவமை கூறினார்.

24. கல்வியால் கடலே அனையம் என மாறுக. அடல்-வலி. ஏறு-ஆண் சிங்கம். விடல் விடாதே.எ-அசை. முனிக்கு அரசு-அகத்

திய முனிவர். முகந்து உண்ணப்படும் என முடியும். முனிக்கரசு கடலை உண்டது:-கடலில் ஒளித்திருந்த விருத்திரா சுரனைக் கொல் லுதற்குக் கடலைக் குடிக்கும்படி இந்திரன் வேண்டியதற்காக.

25. நல் கூர்ந்தான்-வறுமை யுற்றான். மறப்பரோ ஓ-எதிர் மறை. (பைந்தொடி, அன் மொழித் தொகை; மகடூஉ-முன்னிலை) அரம்பையின் கீழ்க் கன்று-வாழையின் அடிக்கன்று.

26. இருநீர்-கடல். (ஆகுபெயர்) வியன்-பெரிய. கடல் அழல் கதிரால் பொங்காது எனக் கூட்டுக. அழல் கதிர்-சூரியன். தண் ணென் கதிர்-சந்திரன்.

27, கூற்றம்-யமன். குறுகு அதன் முன்-வருதற்கு முன்ன மே. உயக-பிழைக்க.

28 காமுறுவர் - விரும்புவார். வாழைப்பழம் புளிங்காடி வேண்டா, பால் வேண்டும் என்க. புளி-காடி புளிங்காடி-புளி முன் இனமென்மை தோன்றிற்று.

29. பிறர்நோய்கண்டு தம்நோய்போல் என மாறுக.எரியின் - அக்கினியில்பட்ட. இழுது ஆவர் வெண்ணெய்போல் மனமுருகு வர். கலுழும்-அழும். பின்னிரண்டடி திருஷ்டாந்தம்.

30. வால் அறிவன்-தூய அறிவினையுடைய கடவுள். நல் + தாள் நற்றாள்.

31. குணம்-நற்குணமாகிய. குன்று-மலை. வெகுளி-கோபம். கணம்-க்ஷணப்பொழுது.

32. உடுக்கை - அரையின்ஆடை. இடுக்கண் - பெருந்துன் பம். களைவது-நீக்குவது

33. ஆய்ந்து-ஆராய்ந்து. (அடுக்கு, பன்மை பற்றியது) சாம் துயரம்-சாகும் துன்பம்.

34. அமரர்-தேவர். உய்க்கும் - கொண்டுசேர்க்கும். ஆர் இருள்-நிறைந்த இருள்மயமாகிய நகரம்.

35. விழுப்பம்-பெருமை. ஓம்பப்படும்-பாதுகாக்கப்படும்.

46. கொடுப்பது-ஒருவன் பிறனுக்கு ஒன்றைக் கொடுப்பது (கண்டு.) அழுக்கறுப்பான்-பொறாமை கொள்வான்.

37. இனிய-இனியசொல். இன்னாத-வன்சொல் (வினையாலணையும் பெயர்) கவர்ந்தது-எடுத்துக்கொள்வது போலாகும்.

38. முனிய - (கேட்டு) வெறுக்க. எள்ளப்படும்-இகழப்படுவான். எல்லாரும்-எல்லாராலும்.

39. புறம்தூய்மை-உடம்பின் சுத்தம். அமையும்-உண்டாகும். வாய்மை-உண்மை.

40. அறிவது-அறிந்த விஷயத்தை. சுடும்-வருத்தும்.

41. உள்ளலும் - நினைத்தலும். கள்வேமென்று-கவர்வோம் என்று.

42. கற்க-படிக்க. கற்பவை-கற்கத் தகுந்த நூல்களை (வினையாலணையும் பெயர்.)

44. ஆல் இரண்டும் அசை. சாம்துணையும்-சாகுமளவும்.

45. அருள்-கருணை. பூரியார்-கீழோர்.

46. புறங்கூறி-(பிறரைக் காணாதவிடத்தில்) இகழ்ந்துகூறி. பொய்த்து-(அவரைக் கண்டபோது நல்லோராய்ப்) பொய்த்து. அறம்-தருமசாஸ்திரம்.

47. என்னோற்றான் - எவ்விதத் தவத்தைச் செய்தான். (கொல் - அசை.)

48. அவையத்து-சபையில். (அத்து சாரியை.) முந்தியிருப்ப-முதன்மையாக வீற்றிருக்க.

III. சரிதைப்பகுதி.

1. ஆண்டு இரண்டு ஆறு-பனிரண்டு வருடம். கலியும் நில வேந்தன் நெறியால் தவறு காண்கிலான் எனக் கூட்டிக்கொள்க.

2. சந்தி-சந்தியாவந்தனம். தாள்விளக்க-காலைக் கழுவ. மறு-ஓரிடத்து ஜலம்படாத மறு. புந்தி-மனம். வயம்-வசம். தமயன்-தமையனாகிய புட்கரன். பொன் அசலம்-பொன்மயமான மேருமலை.

4. போதுவாய்-வருவாய். புலைநரகு-தாழ்ந்த நரகம். ஏதுவாய்-காரணமாய். மன்னவனே என்றது புட்கரனை.

5. அடல்-வலி. ஏற்றின்முன்-ரிஷபத்தின்முன். மிடல்-வலி.

6. என்றோம் - உடன்பட்டோம். வான்தேறல்-சிறந்தகள். தேக்கி-குடித்து.

7. கல்லும்-தோண்டும்.

8. உரு-உடம்பின் தோற்றம். வண்மைத்திரு-நன்றி மிகுந்த செல்வம். சிதைக்கும்-கெடுக்கும். புரிந்து-விரும்பி.

9. விலக்கலீர்-தடுக்காதீர். வரால்-ஒரு சாதி மீன். மேதி-எருமை. 4-ம் அடியில் கலக்கு அலை நீர் எனப் பிரிக்க.

10. மனைக்குரியார்-மனைவியர். சினை-கர்ப்பம். பணைப்பைந்தாள்-திரண்ட பசிய தண்டு. குண்டு-ஆழமான. பணையம்-பந்தயப் பொருள்.

11. கிண்டி-காலால்துளாவி. கனிச்சு + ஊத=கனிச்சூத - கனியச்செய்து வாயால் ஊத. பொழில் - சோலை. பனிசூதம் - குளிர்ந்த மாமரம். பூம்போது-அழகிய பூக்கள். புனல்நாடு-நீர்வளமிகுந்த நாடு. போதும்-போவோம்.

12. 'மென்மலர்' என்றது, தாமரைப்பூவை. பொடியாடி-புழுதி படிய.

13. ஈற்றடி, அவர்கள்விட்ட கண்ணீர் மிகுதியை விளக்கும்.

14. வேலை-கடல். ஞாலம் - பூமியிலுள்ள பெரியார். (ஆகுபெயர்) சீலம்-ஒழுக்கம்.

15. சந்தம்-அழகு. பைந்தளிர் - பசுமையான மாந்தளிர் போன்ற பாதங்கள். (உவமை யாகுபெயர்) கலுழ்ந்து-அழுது. வடம்-சங்கிலி. களிறு-யானை.

16. போக்கு-பிரயாணம். ஏதம்-ஆபத்து- தாமம்-மணமாலை.

17. காட்சி-அழகு. குதலை-நிரம்பாத இளஞ்சொல். நோக்கால்-கண்ணினால். மழை-(இங்குக்) கண்ணீர்.

18. கைதவம்-வஞ்சகச்செயல். கறை-குற்றம். மைதீர்-குற்றம் தீர்ந்த. மக-பிள்ளைகள். இது (இளமைப்பொருள் குறிக்கும் உரிச்சொல்.)

19. இன்அடிசில்-இனியசோறு. அளையும்-பிசையும். பூநாறும்-ஆம்பல் பூப்போல விளங்கும்.

20. கலையின்துறை - பல்வகைச் சாஸ்திரங்கள். கிண்கிணி-சதங்கை. குறுகு × தலை-சிறு × குதலை எனப்பிரிக்க. இது திரிபு நயம்.

21. சென்று + ஈ = சென்றீ; ஈ-கொடு. மாற்றம்-இரப்புரை.

22. பயந்தாள்-பெற்றாள். இந்துமுகம்-சந்திரன் போன்ற முகம். எம்தம்மை-எங்களை.

23. அஞ்சனம்-கண்ணிலிடும் மை. மஞ்சனநீர்-குளிக்கும் தண்ணீர். வல்லிவிடா இடையாள்-கொடியின் தன்மை நீங்காத இடையையுடையவள். புல்லி-தழுவி. புலர்ந்து-மனம்வாடி.

24. கோமைந்தன்-இராசகுமாரன். கோதை - குமாரத்தி. இருவர் என்றது நளன் தமயந்தி இருவரையும்.

25. காதலவர்-பிள்ளைகள். ஊதை-காற்று. உயிர்ப்பு-மூச்சு.

26. காவி-கருங்குவளைமலர். கண்ணி-மாலை. காளை-நளன். (உவமையாகுபெயர்) கள்வேட்டு-தேனை விரும்பி. கனகப்புள்-பொன்மயமான பறவை. ஆதரித்தபோது-விரும்பியபோது.

28. புகலிடம்-தங்குமிடம். வேலை சமயம். பால்வெண்குடை நிழல்கீழ்-பால்போல் வெண்மையான குடைநிழலில். வாழ்மண் தவம் கண்டான்-வாழ்வதற்குப் பூமி தவம் செய்தவன். பாழ்மண் டபம் எனவும்-வாழ்மண்தவம் எனவும் பிரிக்க.

29. மகரயாழ் - மகரமீன் வடிவமான வீணை. கொதுகு-கொசுகு. சில்பாடல்-அற்பப்பாடல். கேட்டஆ-கேட்டவாறு என்னே! தோட்ட-தோடுகளையுடைய (தோடு பூஇதழ்) வார்-நீண்ட. கோதையாள்-மாலை, அல்லது கூந்தலையுடையவள்.

30. கொண்டல் - கூந்தலாகிய மேகம். குழை-காதணி. கெண்டை-கெண்டைமீன் போன்ற கண்கள். நீர் வழியல்-நீரை வழியவிடாதே. சுழியல்-வருந்தாதே.

31. முதலோடும்-வேரோடும்

32. ஆயர்-இடையர். அடுபால்-காய்ச்சியபால். தோயல்-தயிர்; தோய்ந்தது. (தொழிலாகு பெயர்) காலஃ வடிவு ஆயவேல்-யமரூபமான வேலாயுதம்; கொலைச்செயல் பற்றி வேல், இங்ஙனம் கூறப்பட்டது.

33. குறிக்கொண்மின் - கவனமாய்ப் பாதுகாப்பீர்களாக. ஏதிலன்-அந்நியன்.

34. அமளி-படுக்கை. கையரிக்கொண்டு-கையால் அரித்துத் தேடி. இனம்மேதி-கூட்டமான எருமைகள்.

35. வயிறு அலைத்து - வயிற்றில் அடித்துக்கொண்டு. வாவு பரி-தாவுகின்ற குதிரை. கோழிக்குலம்-சேவற்கூட்டம்.

36. நேரலார்-பகைவர்; (தமக்கு உடன் படாதவர்; வினை யாலணையும் பெயர்.) போர் ஏறு-யுத்தத்தில் சிங்கம் போன்றவன். ஆரம்-கழுத்தாரம்; புஷ்பஹாரம் எனினுமாம். வரை-மலை. சாரலை-சேர்ந்ததாயில்லை. தண் அளி-அருள்.

37. மெலிவேன்-வருந்து கின்றயான். தடம்-பெரிய. கஞ்ச மலர்-தாமரை; கம்-ஜலத்தில், ஜம்-பிறப்பது - (வடமொழி) கண்

பனிப்ப-கண் நீர் சொரிய. மஞ்சுதவழ் மேகம் தவழ்கின்ற வெற்பு (மைநாக) மலை. வச்சிரத்தோன் - இந்திரன் ; வச்சிராயுதத்தை யுடையவன். விஞ்சை-வித்தை. பயின்று-பழகி-அயருதியோ-செய்கின்றாயோ.

38. ஞாலம் உலகம் நாள் கமலம் புதிய தாமரை; அரும்பு கள். வேலை-கடல். திரை முகட்டில்-அலையின் உச்சியில். வெய்யோன்-சூரியன். வடி-கூரிய. கடவ-செய்ய வேண்டிய

39. வாவும்-தாவுகின்ற. மடப்பிடிகாள் இளமையான பெண் யானைகளே !.

40. நெய்த்தோர்-இரத்தம். நிணம்-கொழுப்பு. வை-கூர்மை. பைத்து + ஓர்-படத்தை உடைய ஒரு. கொடும் தறுகண்-கொடிய கோபத்தையுடைய. பாந்தள்-பாம்பு. குவளை-கருங் குவளைப் பூ. மதர்-குளிர்ச்சி பொருந்திய. வாண் நுதல்-ஒளிபொருந்திய நெற்றியையுடைய தமயந்தி; (அடையடுத்த சினையாகு பெயர்.)

41. புரந்த-காப்பாற்றிய. ஒன்னலர் - பகைவர். செகுப்பர்-அழிப்பார்கள். பொரு-உவமை.

42. சூதன்-தேர்ப்பாகன். கூந்தல் மா-பிடரி மயிரையுடைய குதிரை. சாந்தம் - சந்தனக் கோலம்.

43. கிழமையும்-உரிமையையும். பெறுதி-அடைவாய். முன்னின்-நினைத்தால்.

44. நாட்டம்-கண்கள். நாயகன் - சிவபெருமான். விழைந்தான்-விரும்பினான். இறுத்தார்-தங்கினார். வார்சிலை நீண்டவில்.

45. ஆளி மொய்ம்பு சிங்கபலம்.

46. மிழற்றும்-பேசும். தீம் கிளவி-இனியசொல். நீத்தது-விட்டது.

47. கூந்தல்-பிடரிமயிர். சாலி கோத்திரன்-ஓர் முனிவன். மாதலி-இந்திரன் சாரதி. துளக்கினன் அசைத்தான்.

48. முழவு உறழ்-மத்தளத்தை ஒத்த-உத்தரீயம்-அங்கவஸ்திரம். (மேலாடை)

49. தகைந்து - நிறுத்தி. தொக்க - கூட்டமான. அற்று ஆம்-அத்தன்மைத்தாம்.

50. இனை - வேகம். வயப்பரி-வலியகுதிரை. அனைய-அத்தன் மைத்தான.

51. மருவி நின்ற - நளனைச்சேர்ந்திருந்த. தணந்து ஏகி-நீங்கிப் போய். கான்றலின்-கக்கினமையால்.

52. கணங்கொள் கூட்டமான. வண்டு இமிர் - வண்டுகள் ஒலிக்கின்ற. திறல்-பலம். அணங்கு அரா - (விஷத்தால்) துன் பந்தரும் பாம்பு.

53. தீவினை-கொடுஞ்செயல். வழுத்தினர் - துதித்தார்கள். ஆடல்-வெற்றி. குழைத்த-தளிர்த்த.

54. சில்லி - உருளை. கம்பலை-சத்தம். ஒல்லை - விரைவில். அணங்கு தமயந்தி.

55. அழல்-அக்கினி. தொடர்ந்த-அநாதியாகத் தொடர்ந்த. மும்மலம்-ஆணவம், மாயை, கன்மம். முருக்கி-கெடுத்து. பவம் கடல்-பவக்கடல்=பிறவிக்கடல். காதல்-அன்பு.

56. விசும்பில்-ஆகாயத்தில். வாணி - அசரீரிவாக்கு. இன்னல்-தீங்கு.

57. வடபுலத்தில்-வடதிசையில்,கடவுள் மீன்-தெய்வத் தன்மை பொருந்திய அருந்ததி. கொடிமருங்குல் - வஞ்சிக்கொடி போன்ற இடை; இது சினையாகு பெயராய்த் தமயந்திக்காயிற்று. நிகழ்ந்ததை ; ஐ, அசை. அன்று, அசை.

58. தமரம்-பேரொலி. வேலை-கடல். அந்தரம் ஆகாயம்-துந்துபி-தேவர்வாத்தியம். கோல்-கோலம் ; அழகு.

59. மண்-பூமி; பூமியிலுள்ளவர்களைக் குறித்தது; (இடவாகு பெயர்) மாதிரம்-திசை ;(ஆகு பெயர்.) பெண்-இலக்குமி.

60. ஆழி சூழ்புவி. கடல் சூழ்ந்த பூமி. ஆழி-ஆக்ஞாசக்கரம்.

61. வல்லி-வல்லிக்கொடிபோன்ற சந்திரமதி. (வல்லி-ஆகு பெயர்.) பணிகள்-வேலைகள். எல்லி-பகல். ஏவல் முற்றி - செய்யும்படி ஏவிய வேலைகளை முடித்து. அல்லி-இரவு.

62. காந்தள்-செங்காந்தள் புஷ்பம் போன்றகை. (காந்தள்-ஆகு பெயர். காந்தள் போன்ற கையைக் காந்தள் என்றது ரூபகமுமாம்.) கூந்தல்-கூந்தலையுடைய சந்திரமதி. (ஆகு பெயர்.) காணு-கண்டு. (செய்யாவென்னும் உடன்பாட்டு வினையெச்சம்.)

63. புன்கண் உற்று-துன்பமடைந்து. புந்திசெய்யா-கருதாத. பாரி-மனையாள்.

64. அநந்தல்-தூக்கம். அடகு இலை. காட்டம்-விறகு. சமித்து-அத்தி, ஆல், அரச மரச்சுள்ளி.

65. காவி-நீலோற்பலம். அலமரும்-சுழலும். (அலமா-பகுதி)

66. வடம-ஆலமரம். குறள்-பூதம். துன்றி-நெருங்கி. நாப்பண்-நடு.

67. இரியல்போக-ஓடிப்போக. முண்டகம் கரம்-தாமரை மலர்போன்ற கை. முருகன்-இளைஞனை மகன்.

68. உலவா-சாவாமல். (ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்சம்)

69. இழிந்து-இறங்கி. உதிரம்-இரத்தம். தழல்-அக்கினி. உயங்கி-கருகி.

70. உரவோன் - பராக்கிரமமுடையவன். விறல்-வலி; பங்கேருகம்-தாமரை. (இங்கு-பூ) வதனு-முகத்தையுடையவனே. (வதனம்-முகம்.)

71. நீர்ஆள-நீர்நிரம்ப. தொடர்பு-சம்பந்தம். படி-பூமி. காராளர்-வேளாளர். அவமே-வீணே. கடவு ஓசை-செலுத்தும் சப்தம்.

72. அறங்கள் நாலு எட்டு-முப்பத்திரண்டு தருமங்கள். இறுக்கும் இறை கிரமமான வரி. உகவோம்-விரும்போம்.

73. கனமும்-பிரதி உபகாரம் கருதாத மழையின் தன்மையும். (கனம்-மேகம்; மழை) தருக்கள் - கற்பக விருக்ஷங்கள். உரமும்-மார்பும். தரிப்பது இலை-பொறுப்பதில்லை.

74. வடி-கூர்மை. உழத்தல்-வருந்துதல். முடியாது-கொல்லாமல்.

75. அரவு-பாம்பு. வெகுண்டு-கோபித்து. கரவில் - மறைவில், அடைவோ-முறையோ? கான் முளை-மகன்.

77. தமர்-சுற்றத்தார். தஞ்சம்-ஆதாரம்.

79. துஞ்சிய-செத்த. பஞ்சி பஞ்சு. முறி-துண்டு. வஞ்சி-சந்திரமதி-வஞ்சிக் கொடி போன்றவள். மணி மிடற்றில்-அழகிய கழுத்தில்.

80. அற-மிகுதியும் மங்கல நாண்-தாலி. பல்லம்-அம்பு.

81. அற்புக்கு-அன்புக்கு. (வலித்தல் விகாரம்) ஆழி-கடல். பொற்பு-அழகு. பொறை-பொறுமை:

82. பொன்றிலாது-இறவாமல்.

84. கவந்தம்-தலையற்றமுண்டம் - வள்ளியோன் - கொடையாளி.

85. சால-மிகுதியாக. மால்-விஷ்ணு. மயிலோன்-முருகன். மதன்-மன்மதன.

86. வன்கரி-வலியயானை. பறைக்கு-பறையனுக்கு.

87. மருமான்-சந்ததி; பிள்ளை. இவள் கொலைதான் விளங்கின் என மாறுக.

88. சேய்மை - தூரம். அண்மை - சமீபம். 'புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை, வாய்மையாற் காணப்படும்'' என்ற திருக்குறளை ஈண்டு நினைக்க.

89. புலையனும்-உம் இழிவு சிறப்பு. யாக்கை-சரீரம். கழறுவது-சொல்லுவது.

90. கட்டுரை-சத்தியம்.

92. நீத்தம்-வெள்ளம். புற்புதம்-குமிழி.

93. பசுபதி-சிவன். அலகில்-அளவில்லாத ஈடு-சமானம்.

IV.. இன்சுவைப் பகுதி.

இடையனும் தத்துவசாஸ்திரியும்.

2. பட்டி-தொழுவம்.

4. கவலாதோன்-வருந்தாதவன்.

8. இயற்கைவனப்பு - இயற்கை அழகு. 13. அழுக்காறு-பொறாமை. 21. வரகவி-தெய்வவரத்தால் கவி பாடுபவன். 22. கரையும்-சொல்லும். 34, குடில்-குடிசை. 36. செருக்கு - கர்வம். 42. ஒல்கா-கெடாத. நூல் × தொகை. 47. எட்டுத்தொகை-சங்ககாலத்து நற்றிணை முதலான எட்டு நூல்கள். 69. இளக்க-சொல்ல. 109. பார்ப்பு-குஞ்சு. 111. அகழ்வார்-தோண்டுவார். 112. தலை மேன்மை.

119. குண நாடி............மிக்ககொளல்-திருக்குறள்.

2. பருவரல் (வறுமைத்) துன்பம். மல்-மனவலி; தேகவலி. வீட்டி-கொடுத்து. இழிவு இழிவு, அடுக்கு; மிகுதி பற்றியது.

3. ஏற்பது-யாசிப்பது. ஒருவிய-(அதனை) நீக்கிய

4. அதிதி-விருந்தினர். அயின்று-உண்டு. தவல் அரும்-கெடாத.

5. மகவு-குழந்தை. உந்தி-தள்ளி.

6. வாக்கிலை - வார்க்கின்றாயில்லை. முந்துஆர்வம் - மிகுந்த ஆசை. முடுகி-விரைந்து.

7. சிறான்-சிறுவன்- என் அட்டார்-என்ன சமைத்தார்? மடுத்தஅஃது-உண்ட அந்தப் பதார்த்தம்.

8. பக்கணம்-பக்ஷணம்; பலகாரம். ஈர்க்கும்-இழுக்கும்.

9. கடகம்-காப்பு. சுட்டி-நெற்றிச்சுட்டி. புண்டரீகம்-தாமரைமலர். கரைமதலைக்கு-அழும்குழந்தைக்கு. எண்தப-குறித்த நாளின்கணக்குத்தவற.

10. சிதயணி-சங்குமணி-பூண்-ஆபரணம். சேய்க்கு குழந்தைகட்கு. வெறிய பொழில்-வாசனையையுடைய சோலை. மனைவயின்-வீட்டில்

11. நற்பால்-பசுவின்பால். பண்புகூர்தரு-நற்குணமிகுந்த. தனயர்க்கு-மக்கட்கு. கண்புகா - கண்ணால் பார்க்கமுடியாத. எண்புகா + புகழவன்-எண்ணிக்கை யற்ற புகழ்மிகுந்த குசேலன் இகத்தல் இல்லை-நீங்குதல் இல்லை.

இராமனது பிதுர்வாக்கிய பரிபாலனம்.

12. அண்ணல்-இராமபிரான். தூயவன்-தசரதன். துருவினன்-தேடியவனாய் (முற்றெச்சம்) பகர்வேன் - சொல்வேன். கூற்று என-எமன்போல. தமியள்-தனித்தவளாய் இவள் வருகை பேரிடர் தருவதால் 'கூற்றெனவந்தாள்' என்றார்.

13. சென்னி-தலையால். தானை-ஆடை. துவணடு-வணங்கி. அந்தி-மாலைக்காலம்.

14. பூழி-புழுதி. ஆழி-கடல். எழ் இரண்டு ஆண்டு - 14 வருடங்கள்.

15. எளிதே. எளிதோ (எ, எதிர்மறை.) செவ்வி-அழகு.

16. மன்னன்-தசரதன். திறம்பிய-வேறுபட்ட. இன்னல் - துன்பம். சகடம்-வண்டி. கார் எறு - பெரிய ரிஷபம்-ஈண்டுக் கருமை பெருமை.

17. பணி-கட்டளை. பின்னவன்-தம்பி. உறுதி-உயர்ந்த செல்வம்.

18. தாபதர்கள்-தபசிகள்; என்றது இராம இலக்குமணரை. சிறிது அன்றோ (உன் வீரத்துக்கு) இழிவன்றோ? தலை யெடுத்து விழியாமை-தலை தூக்கிப் பாராமல். சமைப்பதே-செய்வதோ.

தழல் எடுத்தான் - அக்கினி மயமான மழுவாயுதத்தைக் கையில் தாங்கிய சிவ பெருமான். மலை-கயிலாயமலை.

19. புறத்தாக-பக்கத்தில் நிற்கவும். குட்டி கோள்படாது என்ன-புலிக் குட்டி பிறவற்றால் கவரப் படாதென்று. ஆழி கடல். மூவர்-பிர்மன் விஷ்ணு, சிவன். (தொகைக்குறிப்பு) தானவர்-அசுரர். பட்ட வலி-அடைந்த அவஸ்தை.

20. உருபடிவம் - அழகிய வடிவம். செருபடியின் பொடி ஒவ்வாது-உனது யுத்த பூமியின் தூசு மாத்திரமும் ஒவ்வாத;இதில், செருப்பு அணிந்த உனது பாததூசிக்கும் ஒவ்வாத; எனச் சிலேடைப் பொருள் தோன்றுதலும் காண்க. மருப்பு-கொம்பு. பொருப்பு-அஷ்ட குல பர்வதம்.

21. உரம்-மார்பு. நரன்-மனுஷன். தோள் பார்க்க-(பராக்கிரம் புரிந்த) தோளைப் பார்த்துப் பூரிக்க. அரன்-சிவன்.

22. இவண் - இவ்விடத்தில். சதமகன் - இந்திரன். நூறு யாகங்களைச் செய்தவன். தளை-விலங்கு.

23. கல் ஈரும்-மலையையும் பிளக்கின்ற. தடம்கை-பெரிய கை. (உரிச் சொற்றொடர்) அடல்-வலிமை. கரதூடணர்-கரன், தூஷணன்: இவர்கள் சூர்ப்பணகையின் சகோதரர். அல்-இருள். எல்லீரும்-யாவரும்.

V. பிரபந்தப் பகுதி:

1. திங்கள் முடி சூடும் மலை-சந்திரனைச் சிகரத்திலே தரிக்கும் படியான உயர்ந்தமலை. தமிழ் முனிவன்-அகத்தியன். அங்கயற்கண் அம்மை - மீனாட்சி அம்மை. தூங்கும்-விழுகின்ற.

2. களிறு-ஆண்யானை. பிளிறும்-முழங்குகின்ற. குழவித் தென்றல் - இளந்தென்றல். பொழில்-சோலை. கூடல்-மதுரை. அறல் அம் கூந்தல்-கருமணல் போன்ற அழகிய கூந்தல். பிடி-பெட்டை யானை போன்ற மீனாட்சி. குடுமி-சிகரம்.

4. கல்லி யெடுப்போம் - தோண்டியெடுப்போம். தேறல்-தேன். வாய்மடுப்போம் - உண்ணுவோம். விருந்து-விருந்தினர். அருந்த-உண்ண.

5. புல் வாயின் பார்வை - மானுகிய பார்வை மிருகம். பார்வை மிருகம்-காட்டு மிருகங்களை வசப்படுத்திப் பிடிப்பதற்கு வேடர்கள் பழக்கி வைத்திருக்கும் மிருகம். முன்றில் - முற்றம் இல்-முன் (இலக்கணப் போலி) உணங்கும்-காயும். கல் விடர்-கல் பிளப்பு. கறங்கி-ஒலித்து சில்வலை-சிலகண்ணி. வாரும்-தோலும். இறப்பு - முன்தாழ்வாரம். துடி-உடுக்கை. எங்கும்-ஒலிக்கும். கொல்லை-புன்செய். பிணை-பெண்மான்.

6. குங்கிலியம் - சாம்பிராணி. அருகு-அருகம்புல். ஐங்கரர்க்கு-விநாயகருக்கு.

7. முச்சிறங்கை-மூன்று சிறங்கை. சிறு + அகம் + கை-சிறங்கை; ககரம் கெட்டது விகாரம்.

9. திரு=ஆர் + திருவார்-பெருந்துறை-திருப் பெருந்துறை யென்னும் சிவஸ்தலம். குருந்து-குருந்தமரம். ஆநந்தத்தேன்-சிவாநந்தமாகிய தேன். பொன் + கலம்; கலம்-பாத்திரம் மண் + கலம்.

10. பூமேல்-பூமியின் மேல். சிலவர்-சிலர். பிறங்கு-விளங்குகின்ற, ஒளிமாலை-ஒளியையுடைய ரத்னஹாரம்.

11. முப்பொருள்-அறம். பொருள், இன்பம். சென்னி வந்திக்க-தலை வணங்க.

12. அறன்-தருமம். ஆன்ற-சிறந்த, மறம்-வீரம். வாயால் கேட்டுத் தெளிந்தோம் எனக் கூட்டுக.

13. குறள் வெண்பா, சிந்தை முதலிய வற்றிற்கு இனியவாயும் வினைக்கு மருந்தாயும் உள்ளன. என்க.
பன்னிய-பாடிய.

14. செய்யாமொழி - வேதம். பொய்யாமொழி-திருக்குறள்.

15. உள்ளுந்தோறு-சிந்திக்கும்போதெல்லாம்.

16. கவிப்பா-கவியாகியபா. (இரு பெயரொட்டு) அமிர்தம்-சிறந்த உணவு. குமரி-கன்னியாகுமரி. கொண்கன்-கணவன் பூசுரர்-பிராமணர். செயிர்-குற்றம்.

VI. பல் துறைப் பகுதி.

1. சென்னி-சோழன். பொருநைஆறு-ஆன் பொருநையென்னும் ஆறு, தென்னவன் - பாண்டியன். சென்னி-சிரசு. ஆட்டற்கு-நீராட்டுதற்கு. அவாவி-விரும்பி. 'ஆட்டற்கு அம்மே' என நின்றூர் என்க. வாணர். பாவாணர்; புலவர்.

2 சந்தம்-சந்தனம். கடவுள்முனி-அகத்தியன். நிலவுநன்-காணப் படுகிறுன்.

3. உத்தர வேதம்-திருக்குறள். சித்திரித்த-அழகுசெய்த. மெய்தவன் - உண்மைத் தவமுடையோன். உள் - உவந்து துஞ்சல்-தூங்குவது-

5. திலகநீண்முடி-முடிகளில் திலகம்போன்ற (சிறந்த) முடி.

6. பார்த்திபன்-அரசன். இறங்கு- (தெய்வத்தன்மை) குறைந்த. கண் இமையார்-கண்ணிமையா விசேடமுடைய தேவர்கள். புறங்காக்கலர்-பரிகரிக்க மாட்டார்கள்.

7. மன்னர் தீ-அரசரது கோபாக்கினி. மாண்டது-மாட்சிமைப்பட்டது.

8. விரைக்கலவை - வாசனைச்சந்தனம். புல்லியர்-கீழோர். அகழ்ந்த-தோண்டப்பெற்ற. மலக்கிழங்கு-மும்மலமாகிய கிழங்கு.

9. உன்மத்தர்-பைத்தியமுடையவர். உடுக்கை-ஆடை.

10. இந்திரர் அமிர்தம்-தேவர் உணவு. இயைவதாயினும்- (அருமையாய்க்) கிடைத்த தாயினும். வெறுப்பிலர்- (யாரோடும்) வெறுப்பிலர். அஞ்சுவது அஞ்சி-பிறர் அஞ்சத் தகும் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி. துஞ்சலுமிலர்-சோம்பியிருத்தலுமிலர். அஞ்சித் துஞ்சலுமிலர் என மாறுக. அயர்விலர்-மனக்கவற்சியிலர். நோன் + தாள்-வலிய முயற்சி. பிறர்க்கு என பிறர் பொருட்டே என்று. உண்மையான்-இருத்தலால். இவ்வுலகம் பிறர்க்கெனமுயலுநர் உண்மையான் உண்டு என்று கூட்டிக் கொள்க.
ஆல், அம்ம, அசை.

11. யாண்டு பல ஆக- (உமக்கு)ச் சென்ற ஆயுள் வருஷங்கள் பல ஆகவும். நரை-மூப்பு. இல ஆகுதல்-இல்லை ஆகுதல். யாங்கு ஆயினீர் என-எப்படி ஆயினீர் என்று. மாண்ட என் மனைவி ஒடு-மாட்சிமைப் பட்டகுணங்களையுடைய எனது மனையாளுடன். நிரம்பினர்- (அறிவு)நிரம்பினர். என் இளைஞரும்-என்னுடைய ஏவலாளரும். யான் கண்ட அனையர்-நான் கருதுவ தனையே கருதிச் செய்வர். அல்லவை-நீதியல்லாத செய்கைகளை. (செய்யான், முற்றெச்சம்) அதன் தலை-அதற்கு மேலே. ஆன்று (நற்குணங்களால்) நிறைந்து; அவிந்து(பணியவேண்டு வோரிடத்துப்)பணிந்து அடங்கிய கொள்கை-ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டையுடைய.

12. அன்று-அல்ல. மன்னன்உயிர்த்து-வேந்தனாகிய உயிரையுடையது. மலர்தலை-பரந்த இடம். அறிகை-அறிதல். கடன்-முறைமை. உலகம் மன்னன் உயிர்த்து அதனால் நெல்லும் நீரும் உயிரன்று...யான் உயிர்என்பது அறிகை வேந்தற்குக்கடன் எனக் கூட்டுக. நெல்லும் நீரும் ஒருநாட்டில் உண்டாவது மன்னனது செங்கோலினாலேயாம் என்பது கருத்து.

13. ஓவியர் - சித்திரகாரர். கண்ணுறுவான் - பார்க்கும் பொருட்டு. தேவி-மனைவி. பூவையர்-பெண்கள். காவி-நீலோற்பலமலர். வெற்பு-மலை.

14. இன்துணை-இல்லறத்திற்கு நல்ல துணையாகிய. பொய்யாது-பெய்யத்தவறாது.

15. தொழாஅள்-வணங்காதவளாய். (முற்றெச்சம்) கொழுநன்-கணவன். (இரண்டாம் வேற்றுமையில் விகாரம்.)

16. கொள்கை-கோட்பாடு. கலை-நூல். கட்டுரை வன்மை-சொல்லாற்றல். நிறைகோல்-தராசு.

17. ஆ-பசு. இல்லிக்குடம் ஓட்டைக்குடம். நெய்யரி-பன்னாடை. அன்னர்-ஒப்பர்.

18. கல்லா-(திருந்தப் பேசுதற்கு) அறியாத. ஊறல்-தேன். மல்-வலி. (மழலைக்கனி, இருபெயரொட்டு)

19. பொறை-பொறுமை. போகம்-இன்பம். புணர்ப்பு-சேர்க்கை. மேவ - சென்றுஇறங்க. வனசவாவி - தாமரைத்தடாகம். துகில்-ஆடை. நறை-வாசனை. புலமை-பாண்டித்தியம்; அறிவு. புலம் அறிவு. சிறை-மதிற்காவல். சேய்-பிள்ளை.

20. தெண்கடல்-தெளிந்த கடல். வளாகம்-உலகம். பொதுமையின்றி-பிற அரசர்களுக்கும் உரிமையில்லாமல். ஒருமையோர்-ஒரு தன்மையுடையவர். யாமம்-சாமம். துஞ்சான்-உறங்காதவனாய். கல்லா ஒருவன்-கல்வி அறிவில்லாத வேடன். பிறவும்-ஏனையவைகள். ஓரொக்கும்-ஒரு தன்மையாக ஒப்பாகும். துய்ப்பேம் எனின்-(செல்வத்தை) நாமே அனுபவிப்போம் என்று கருதின் தப்புந-தவறுவன. பல-அநேகம். இங்குப் பல என்றது, அறம், பொருள், இன்பங்களை.

21. உற்றுழி - (தன் ஆசிரியனுக்கு ஒரு துன்பம்) உற்றவிடத்து. உறுபொருள் - மிக்கபொருள். பிற்றைநிலை-வழிபட்டுநிற்றலை. முனியாது-வெறுக்காமல். ஓர்அன்ன-ஒருதன்மையான. நாற்பால் உள்ளும்-நான்கு குலத்திலும். கீழ்ப்பால்-கீழ்க்குலம். அவன்கண் படும்-அவனிடம் சென்று வழிபடுவான்.

22. பரிவு-வருத்தம். புறஞ் சொல் போற்றுமின்-புறங்கூறல் நிகழாதபடி பரிகரியுங்கள். துறமின்-நீக்குங்கள். பொய்க்கரி-பொய்ச்சாட்சி. பொருள்மொழி-மெய்வார்த்தை. அவைக்களம்-சபை. பிறவோர்-ஏனைய தீயோர். பிறர்மனை அஞ்சுமின்-பிறர் மனைவியை விரும்புதற்கு அஞ்சுங்கள். அல்லவை-பாவச்செய்கை. அறமனை-(மனையறம்)இல்லறம். வெள்ளைக்கோட்டி-பயனில்லாத சொற்களைப் பேசுகின்ற அறிவிலிகள் கூட்டம். உள்ளீடாகிய வைரம் இல்லாததை வெள்ளை என்பது மரபு; அது போல் அறிவில்லாத தன்மையை வெள்ளை என்றார்- (ஆகுபெயர்) மல்லல் மாஞாலம்-வளம்பொருந்திய பெரிய உலகம். (என,அசை)

Printed at the Excelsior Press, Madura:—1928.



இந்நூலாசிரியரால் எழுதப்பெற்ற வேறு நூல்கள்.
(உயர்தர கலாசாலை மாணவர்கட்குத் தக்கவை.)

---

1. நல்லிசைப் புலவர்கள் (முதற் பாகம்)

இது கடைச்சங்க காலத்தில் விளக்கமுற்றிருந்த நல்லிசை புலவர்கள் பல்லோரில், 1. பெருந்தலைச் சாத்தனார், 2. கோ கிழார், 3. மோசியார், 4. பெருஞ்சித்திரனார், 5. பிசிராந் யார், 6. ஔவையார் என்னும் ஆறு புலவர்களது வாழ்க் வரலாற்றையும், அவர்களது பல்வகைப் பெருமைகளையும க நயங்களையும், தமிழகத்துப் பழைய செய்திகளையும் சிறந்த ஆ ரங்களோடு ஆராய்ச்சி முறையில் தீஞ்சுவை யொழுகும் தெள்ள செந்தமிழ் நடையில் செவ்விதில் விரித்துரைப்பது, இந்நூலி சொன்னயம் பொருணயங்களைப் பற்றிச் சிறந்த புலவர்களு பத்திரிகாசிரியர்களும் பலபடியாகப் பாராட்டியுள்ளார்கள்.

விலை ரூ 1—0-

இதிகாசக் கதா வாசகம் (முதற் பாகம்)

இது சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, மஹாபா தம் என்னும் இதிகாசங்களில் சிறந்து விளங்கும் பாத்திரங்களி வரலாற்றைச் செந்தமிழ் உரை நடையிற் கூறுவது. 0—10-

3. இதிகாசக் கதா வாசகம் (இரண்டாம் பாகம்)

இது நகுடன், யயாதி, கசன், பரீக்ஷித்து, பண்டைக்கால நக் குருகுலவாசம், பீமன் வல்லபம், துருவன் சித்தி முதலி தலைப்புகளுடன் சிறந்த நீதிகளையும், தர்மங்களையும், தெளிந் அறிவு வகைகளையும், சீரிய கூரிய தீஞ்சொற்களால் சிந்தைக்குப செவிக்குமினிதாகச் செப்பும் வசன நூலாகும். விலை ரூ 0—10—

4. அறிவுநூல் திரட்டு (முதற் பாகம்) விலை 0—8—

இது மூன்றாவது நாலாவது பார மாணவர்களது செய்யுட பாடத்துக்குச்சாலச்சிறந்த நூலாகும். கருவிலே திருவுடை பெருமக்களாகிய சில புலவர்களுடைய நலமிகுந்த கவிகள் பலவ றையும் சிறந்த குறிப்புக்களையும், குறிப்புரையினையும் உடையது

5. ஷை (இரண்டாம் பாகம்)

இது நாலாவது ஐந்தாவது பார மாணவர்களுடைய செய்யு பாடத்துக்கு ஏற்ற தொகை நூலாகும். இந்நூலின் கோப் முறையினையும், பல்வகைக் குறிப்புக்களையும், ஏனைய அழகுக யும் இப்புத்தகத்தைக் கண்ணுறுவோரே காண்பர். ரூ 0—10-

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புஸ்தக வியாபாரம், மதுரை.